Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

டிச.25-31,1994

# வாரமலர்
# தினமுரசு

SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

82

## சந்திரிக்காவின் சமாதான முயற்சி!

நலம்; நலமாயிருக்க, சமாதானம் நமதாக

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# என்ன செய்ய நினைக்கிறார்கள் புலிகள்?

முரசின் இதயபூர்வ நத்தார் வாழ்த்துக்கள்!

## மகா சூலம்

திடுக்-திடுக் தொடர் ஆரம்பம்



உண்மைச் சம்பவம் கிரைம் டயறிக் குறிப்புகள்

இலக்கிய நயம்





சினிவிசிட்

வாரம் ஒரு கொலை

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## நிரந்தர சமாதானம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
முதலில் சந்தோசமான
நத்தார் வாழ்த்துக்கள்!

கத்தோலிக்க மத மக்களுக்கு
இரட்டிப்பு மகிழ்ச்சி.
பாப்பரசரை தரிசிக்கும் வாய்ப்பும்
புது வருடத்தோடு வருகிறதல்லவா?

நத்தார் பண்டிகை,
புத்தாண்டின் மலர்வு
இவற்றின் மத்தியிலே
போர் நிறுத்தம்
நிம்மதிப் பெருமூச்சு விட வைக்கும்.

போர் நிறுத்தம் பற்றி
அரசு புலிகளுக்கு கடிதம் அனுப்பியது.
புலிகள் பதில் கடிதம் போட்டனர்.
இரு கடிதங்களிலும்
பரிமாறப்பட்ட விடயங்கள்
இம்முறை இரகசியமாக உள்ளன.

ஆனால், புலிகளது கடிதத்தில்
என்ன இருந்திருக்கும் என்று
எம்மால் ஊகிக்க முடியும்.

படையினர் போர் நிறுத்தத்தை
மீறக்கூடும் என்று புலிகள்
நிச்சயம் சுட்டிக்காட்டியிருப்பர்.
பொருளாதாரத் தடை, போக்குவரத்துப் பாதை
போன்றவை பற்றியும் குறிப்பிட்டிருப்பர்.

எப்படியோ இத்தனை விரைவாக
அரசு போர் நிறுத்தம் செய்ய முன்வந்தமைக்கு
பாப்பரசர் வருகை முக்கிய காரணம்!
எனவே-பாப்பரசருக்குத்தான்
நாமெல்லாம் நன்றி சொல்ல வேண்டும்.

ஆனால்-ஒரு விசயம்:
போர் நிறுத்தம் செய்வதால் மட்டுமே
பேச்சு விரைவாக நடந்து
அரசியல் தீர்வை பெற்றுத் தந்திடும்
என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

அரச தரப்பு இனப்பிரச்சனை விடயத்தில்
இன்றுவரை தீர்வுத் திட்டமெதனையும்
தன் கரத்தில் வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

நிரந்தரமான சமாதானம் என்பது
அரசியல் தீர்வு இல்லாமல் சாத்தியமாகாது.
தற்காலிக போர் நிறுத்தங்கள்
மூச்சுவிட்டுக்கொள்ள கிடைக்கும்
சந்தர்ப்பங்களாக மட்டுமே இருக்கும்.
மீண்டும் மூச்சுமுட்ட வைக்கும்
போர் மூளாது என்பதற்கு
போர் நிறுத்தம் மட்டுமே உத்தரவாதமாகாது!

□□

புதிய சர்ச்சை ஒன்று எழுந்துள்ளது.
'பாப்பரசர் வருகையை பகிஷ்கரிப்போம்'
என்று பௌத்த மதத் தலைவர்கள் சிலர்
கூட்டான முடிவொன்றை தீட்டியுள்ளனர்.

ஒவ்வொரு மதத்திற்கும்
தனது கருத்தை எடுத்துக்கூற
தகுதியும்-உரிமையும் உண்டு.
ஒரு மதம் பற்றிய விமர்சனத்திலும்
அதனோடு கொண்ட வேறுபாட்டிலுமே
இன்னொரு மதம் நிலைத்திருக்கிறது.

ஒவ்வொரு மதமும் தனது கருத்தை
எடுத்துக்கூறி கருத்து மோதலை நடத்தலாம்.
அது கலகமாகிவிடக்கூடாது.
மக்களுக்குள் பிளவை விதைப்பதாகிவிடக்கூடாது.

பாப்பரசர் பௌத்த மதம் பற்றி
கூறிய கருத்துக்களோடு முரண்பாடு என்றால்
தமது தரப்புக் கருத்தை வலியுறுத்துவது
பௌத்த மதத் தலைவர்களது கடமை!
அதனைச் செய்யலாம்.

ஆனால்-பகிஷ்கரிப்பு என்று சொல்வது
கருத்துச் சுதந்திரத்தை மறுப்பதாகிவிடாதா?
என்பதே நமது கேள்வியாகும்.

பரி நிர்வாணக் கொள்கை பற்றி
பாப்பரசர் விமர்சித்துள்ளார் என்பதே
பௌத்த மதத் தலைவர்களது கோபத்தின் காரணமாம்.
கிறிஸ்தவ மதத்தின்
பரிசுத்த ஆவி கருத்து பற்றியும்
பலவாறு விமர்சிக்கப்பட்டுவருகிறது.

எனவே- விமர்சனங்களைக் கண்டு
விரோதம் கொள்ளும் போக்கு
அரசியல் தலைவர்களைப் போல
மதத் தலைவர்களுக்கும் வந்துவிடக்கூடாது.

அதே சமயம்-
மத பிரச்சாரங்கள் சக மதத்தவர் மனதை
புண்படுத்தாத விதத்தில் அமைவதும் முக்கியம்.
மதங்கள் மக்கள் மனதில்
மதம்கொள்ளக் காரணமாகிவிடக்கூடாது.

எப்படியோ தமது பகிஷ்கரிப்பு நோக்கத்தை
பௌத்த மதத் தலைவர்கள்
மறு பரிசீலனை செய்தல் நன்று!

□□

'தாய்' நாவலை முரசு
வெளியிடுவதற்கு பலத்த வரவேற்பு!
இப்போது நாவலின் சூடு பிடிக்கும் கட்டம்!

மொழி பெயர்ப்பாளர் பெயரை
குறிப்பிட மறந்தது மாபெரும் தவறு!
சுட்டிக்காட்டி விமர்சித்த வாசகர்களுக்கு
நன்றி சொல்வதோடு, தவறு திருத்தப்பட்டது.
விமர்சனத்திற்கு கொடுக்கப்படும் மதிப்பு
தவறுகளை திருத்திக்கொள்வதே!

□□

முன்கூட்டியே புத்தாண்டு வாழ்த்துக்களோடு
உங்களையெல்லாம் ஆரத்தழுவிக்கொண்டு
மீண்டும் மறுமடலில் கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## மீண்டும் வந்தது நத்தார்!

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:11)

பட்டாசுக்கள், புத்தாடைகள், சுவையான தின்பண்டங்கள், பரிசுப்பொருட்கள், வாழ்த்து மடல்கள், கரோல் பாடல்கள், ஆடம்பரமான கொண்டாட்டங்கள், களியாட்டங்கள் மத்தியிலே நத்தாரின் உண்மையான தாற்பரியத்தை மறந்து போகிறோமா? மனுக்குலத்தை பாவத்தின் பிடியில் இருந்து மீட்டெடுத்து இறைவனோடு ஒப்புரவாக்கும் பொருட்டாக, மகா பரிசுத்தம் பொருந்திய கடவுள் தன்னையே தாழ்த்தி மனுவுரு எடுத்து ஏழ்மையின் உருவாய் அவதரித்த நாளை நினைவுகூரும் நாட்கள் இவை. ஆதலால் நத்தாரை காரணம் காட்டி வீண் களியாட்டங்களில் ஈடுபடுவதை துறந்து, எமது நத்தார் கொண்டாட்டங்களின் மூலம் இறை நாமத்துக்கு மகிமை சேருமாஎன சிந்தித்து செயலாற்ற வேண்டும். இறைவன் எம்மீது கொண்ட அளப்பரிய அன்பை நினைத்து பூரித்து இறைவனைத் துதித்து குதூகலிப்பதாகவே எமது கொண்டாட்டங்கள் அமைய வேண்டும்.

பிறர் மனதில் சந்தோஷத்தைக் கொடுக்கும், விரோதத்தை அழிக்கும், கஷ்டத்தை நீக்கும், சமாதானத்தை உண்டுபண்ணும், வறுமையைப் போக்கும் காரியங்களில் கூடுதலாக ஈடுபட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இறைமைந்தன் அன்பையும் இரட்சிப்பையும் அறியாத மக்களுக்கு அவ்வழியைக் காண்பிக்கவே இறைவன் நம்மை அழைக்கிறார்.

## ஆன்மீகம்



## அண்ணல் நபிகள்மீது 'ஸலவாத்' மொழிவதன் மாண்பு

"அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் நபிகளார்மீது ஸலவாத் சொல்கின்றனர். விசுவாசம் கொண்டவர்களே; நீங்களும் (நபிமீது) ஸலவாத்தும்-ஸலாமும் சொல்வீர்களாக! என்ற இறைவேத வசனம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீது 'ஸலவாத்' மொழிவதன் மகத்துவத்தை விளக்குகிறது.

'தொழுகை-நோன்பு-ஹஜ்ஜு', போன்ற அனுஷ்டானங்களை முஸ்லிம்களுக்குக் கட்டாயக் கடமையாக ஏவிய இறைவன் அவைகளைத் தானும்-அமரர்களும் அனுஷ்டிப்பதாக இயம்பவில்லை. ஆனால் 'ஸலவாத்' பற்றிக்கட்டளையிடும்போது தான்- மலாயிகா அமரர்களுடன் புரியும் இந்தக் கிரியையை இறை விசுவாசிகளும் மேற்கொள்ள வேண்டுமென ஏவுகின்றான். எனவேதான் நபியவர்கள்மீது 'ஸலவாத்' ஓதுவதை வழமையாக்கிக்கொள்பவன், இறை நேசனாக உயர்வு பெறுவான் என்றும், ஸலவாத்தை மறுப்பவன் இறைவனின் சாபத்துக்கும் முனிவுக்கும் ஆளாகுவான் எனவும் மெய்ஞானமேதைகள் கூறியுள்ளனர். இறை துதியுடன்-நபியவர்கள்மீது 'ஸலவாத்' மொழியாத எந்த ஒரு பிரார்த்தனையையும் இறைவன் அங்கீகரிப்பதில்லை. எவரொருவர் 'ஸலவாத்' மொழிவதை விட்டுவிடுகிறாரோ அவர் மறுமையில் சுவர்க்கம் நுழையமுடியாது. எவருடைய 'துஆ' பிரார்த்தனையும் (திக்ர்) தியானமும் 'ஸலவாத்' ஆக ஆகிவிடுகிறதோ, அவருடைய துன்பம்-கவலையை விட்டும் அவருக்கு ஈடேற்றமாகவும், உணவு விஸ்தீரணத்துக்குத் துணையாகவும் அது அமைந்துவிடும்.

ஆதாரம்- பளாயிலுஸ் ஸலவாத்- திஹாரிய-ஹாரித்.

## கவிதைப்போட்டி இல-79

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**படித்துயரும் தலைமுறையோ?**
தெருவிளக்கில் படித்துயர்ந்தான்
லிங்கன் அங்கே.
அதுகூட முயற் கொம்பு
எமக்கு இங்கே.
பகலவன் மடியினிலே
படித்துயரும் தலைமுறையோ?
**நிஜந்திக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.**

**இல்லை ஒரு தொல்லை**
'கைப்பணமும் கரைந்தது
காரியமும் முடியவில்லை
ஊர்போனால் உபத்திரவம்
வீடு சேர்ந்தால் விபரீதம்
உலகத்தைவிட்டே ஓடிவிட்டால்
இல்லை ஒரு தொல்லையன்றோ'
சி. ஐதூல் பாயிதா-ஏறாவூர்-3.

**வேதனை வாழ்வு!**
'விதியை நம்பி எத்தனை நாள்
வீணே காலம் கழிப்பது?
வேலையின்றி எத்தனை நாள்
வேதனையால் மாள்வது'
சகீலா கமால்தீன்-ஏறாவூர்-3.

### வியக்கப்பட்டவை

**ஹைக்கூ(மாதிரி)**
கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது-
பரீட்சை
தாவணிப்பொட்டு-கண்டி

**தீட்டுதல் நடக்கிறது!**
கண்கள் துயில் இழக்க
உடலோ ஊன் மறக்க
திங்கள் வரும் தேர்வுக்கு
தீட்டுதல் நடக்கிறது!
செல்வி சுவர்ணா விநாயகமூர்த்தி
ஆரையம்பதி-1.

**தொலைந்தது**
"அடையாள அட்டையை
தொலைத்துவிட்டேன்
அதுதான் படியிறங்க
பயந்து இருக்கிறேன்'
செ. நடேஷ். மட்டக்களப்பு.

**அகதிக்கோப்பை**
உலகக் கோப்பை
எல்லாம் முடிந்து போச்சு!
கண்ணான கண்ணா நீ
அகதிக் கோப்பை வரும் படித்திரு!
சி. தர்மகுலசிங்கம்-மட்டக்களப்பு.

**....உட்கார்ந்தபடி இவன்**
படிக்கும் காலங்களில்
பாதையில் அலைந்தவன்
வடிக்கிறான் கண்ணீர்-வாழ்க்கையின்
முன்னேற்றப் படிகளைத் தொலைத்து...
ஷர்மி-கண்டி.



**ஏக்கம்**
என் நிலை சொல்ல
தமிழ் அகராதியில்
ஏதும் இடமுண்டோ?
ரிஷ்வி ஷெரீப்
அக்குறணை.

**விடியலுக்காக**
விதி வரைந்த பாதையென
விடிமுந்து வீதி வந்தேன்
பாதி வழி விட்ட கல்வி
பாதையிலே முடிக்கின்றேன்.
தெ. லோஜனா
கொழும்பு-15.

**கனடா ஆசை!**
அம்மா தாலியும்
அக்கா நகைகளும்
கனடா ஆசையில்
கரியாய்ப் போச்சுதே!
விஜித்தா செல்வநாயகம்
மண்டூர்.

**பாமூ?**
எதிர்காலம்
என்பது
திக்கெட்டும்
திசை தெரியா
பாலை வெளியோ
றோஸ்-பண்டாரவளை.

**வெற்றிக்கனி**
ஏறி வந்த
வாழ்க்கைப் படியில்
இடையில் என்ன தயக்கம்?
ஓடிச் செல்லு
வெற்றிக் கொடியில்
கனிகள் உனக்கு கிடைக்கும்!
ஐ.என்.எம். நிஹ்ரீர்-புத்தளம்.

**தேர்வு காலம்!**
ஓ.எல். தேர்வினில்
ஒழுங்காகத் தேற
ஆர்வமாய் நானும்
ஆயத்தமாகையில்
வந்த வெள்ளத்தில்
எந்தன் குடிசை
காணாமற் போனதால்
படித்ததை மீட்ட
பக்கத்து மைதானப்
படிகளிலமர்ந்தேன்!
ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-02.


**ஒத்திகை**
இயந்திர அனர்த்தம் முதல்
இயற்கை அனர்த்தம் வரை
வடக்கு கிழக்கில்
ஒத்திகை பார்ப்பதால்
ஒது(டு)க்கப்பட்ட
தமிழர்கள் நாம்!
ஏகாம்பரம்-கயல்- ஆரையம்பதி-02.

**சோதனைக்கா படிக்கின்றாய்?**
சோதனைக்குப் படிப்பதுபோல்
'ஷோ'க்காட்டி-உன்னுடைய
காதலியின் கடிதமதை
கரைத்துக் குடிக்கிறாயா?
செல்வி. உமா குணரத்தினம்
மட்டக்களப்பு.

**சமாதானம்**
'மனிதம்' புத்தகத்தில்
'அஹிம்சை' படிக்கிறான்
இதோ!
சமாதானம்
முன்னேற்றப்படிகளில்...
ஜே. எம். இம்தியாஸ்-
நிக்கொள்ளை.


**மீண்டும் பாரதி**
எட்டயபுரத்தில் பிறந்த
பாரதி மீண்டும் வந்து...
இந்த எட்டாம் படியில்
படிப்பவனுக்கு
கவி புகட்ட மாட்டாரா?
எம். சிவகுமார்-காலி.

## கவிதைப் போட்டி இல-82



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31.12.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 82
தினமுரசு வாரமலர்
த. பெ. இல-1772,
கொழும்பு.



கொலை விழும் நேரம் தொடர்கதைக்கும் எழுதிய ரசிகனுக்கும் பாராட்டுத் தெரிவித்து மடல்களை அனுப்பிய அனைத்து வாசகர்களுக்கும் நன்றி! அத்தனை மடல்களையும் வெளியிட முடியாமைக்குக்கு வருந்துகிறோம். காரணம் இடப்பற்றாக்குறை!

என் உள்ளத்தில் மணம்வீசும் முரசே ரசிகனின் கொலை விழும் நேரம் ஒவ்வொரு வாரமும் எங்களை மகிழ்வித்தது. ரசிகனுக்கு என் மனங்கமழ்ந்த பாராட்டுக்கள்.

**துரைராசா, சாந்தி-அன்புவழிபுரம்.**

□□

ரசிகனின் கொலை விழும் நேரம் நவீனத்தின் இறுதி அங்கம் விளங்காத பல புதிர்களுக்கு விளக்கம் தந்தது. அப்பப்பா எத்தனை கொலைகள்? எத்தனை திருப்பங்கள்? வாரா வாரம் விறுவிறுப்பு குறையாது எம்மை விழி பிதுங்கவைத்த வித்தியாசமான தொடர். ஆரம்பத்திலிருந்தே கதையினை வாசிக்கத் தவறிய யாரும் கடைசி அங்கத்தை வாசித்தாலே முழுக்கதையும் வாசித்த திருப்தி கிடைக்கும் வண்ணம் விரிவாக-விளக்கமாக அமைந்திருந்தது. மிகப் பாராட்டுக்குரியது.

**ராகில் ஏ. காசிம்-மன்னார்.**

□□

நீ அண்மைக் காலங்களாகப் பல புதுவித மாற்றங்களுடன் வெளிவருவது கண்டு உன்னைப் பாராட்டுகிறேன். ரசிகனின் கொலை விழும் நேரம் முடிவடைந்ததையிட்டு என்னால் பொறுக்க முடியாமல் இருக்கின்றது. காரணம், அவ்வளவு தேனமுதத் தமிழில் விளக்கம் நிறைந்த வார்த்தைகள் மூலம் ரசிகன் வழங்கினார். ரசிகனுக்கு சபாஷ்! இன்னும் ரசிகன் என்றால் யாரென்று தெரிவிக்காதது மிகவும் கவலையாக உள்ளது.

**எம். மசூத் அஹமத்-காத்தான்குடி-3.**

□□

வாரமொரு முறை வலம் வந்து வசந்தம் வீசும் தினமுரசே!

விறுவிறுப்பாய் வீறு நடை போட்ட ரசிகனின் கொலை விழும் நேரம் தொடர் முற்றுப் பெற்று விட்டாலும் எம் நெஞ்சை விட்டு என்றும் அகலா. ஒரு ஆங்கில மர்மத் திரைப்படம் பார்ப்பதைவிட திகிலாக-த்ரிலாக இருந்தது. ரசிகனுக்கு எமது மனம் நிறைந்த பாராட்டுகள். மீண்டும் ரசிகன் ஒரு க்ரைம் தொடரைத் தர வேண்டும் என அன்புக் கட்டளையிடுகிறேன்! மனம் கவர் ஆக்கங்களை அள்ளித் தரும் முரசே! நீ பல்லாண்டு வாழ்க!

**எஸ். தாஜுன்நிஸா றஹ்மான்-பிலியந்தலை.**

□□

"மாறாத மனக்காயமே கொலைகளுக்கான முதல் காரணம்", "தப்புப் புரிந்தோர் தண்டனையடைவர்" என்பவற்றை தெளிவாக உணர்த்திய ரசிகனின் கொலை விழும் நேரம் சுவையாகத் தொடங்கி சுபமாக முடிந்ததில் ரொம்ப சந்தோசம். ரசிகனின் அடுத்த தொடருக்காகக் காத்திருக்கும் ரசிகர்கள் நாங்கள்.

**எஸ். பத்மா, உமாஜினி, நவ்சாத்-கொழும்பு-10.**



கொலை விழும் நேரம் முடிவு சினிமாத்தனமாக இருந்தாலும், திடீர்த் திருப்பங்கள், எதிர்பாராத சம்பவங்கள், என்று ரசிகன் எழுதியிருந்தவிதத்தில் விறுவிறுப்புக்கும், அடுத்த வாரம் எப்பொழுது வரும் என்ற பரபரப்பிற்கும் பஞ்சம் இல்லாமல் இருந்தது. முரசிற்கும் ரசிகனுக்கும் பாராட்டுக்கள். (வெவ்வே...)

**து. சர்மிளாதேவி-கலஹா.**

□□

நாம் ரசித்துப் படித்து வந்த ரசிகனின் கொலை விழும் நேரம் தொடர்கதை முற்றுப் பெற்றது கவலைதான். இருப்பினும் அற்புதமாய் கதையில் பல திருப்பங்களைப் புகுத்தி விறுவிறுப்பு மாறாமல் கதையைக் கொண்டு சென்ற ரசிகனின் திறமை அபாரம். மேலும் இதுபோன்ற துப்பறியும் தொடரொன்றை ரசிகன் அவர் ரசிகைகளாகிய எம்போன்றோருக்குத் தரவேண்டும். அத்தோடு அவரைப் பற்றியும் வெளியிட வேண்டும். அதனை முரசு மட்டுமே தாங்கிவர வேண்டும்!

**நிஸ்வா ஸலாம்-தர்கா நகர்.**

□□

திகில்+திகைப்பு+திருப்பம்= கொலை விழும் நேரம்.

பலரை சந்தேகப்படவைத்து, எதிர்பாராத ஒரு முடிவைத் தந்த ரசிகன் பலே கில்லாடிதான். அவருக்கும், தரமான எழுத்தாளர்களை இனங்காட்டும் தினமுரசுக்கும் எனது மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

**கனேவல்பொல ரொஷான்-கெகிராவ.**

□□

ரசிகன் அண்ணாவின் கொலை விழும் நேரம் வெரி சூப்பர்...... முடிவைத்தான் எம்மால் புரிந்துகொள்ள முடியாத புதிர். ரசிகன் அண்ணாவின் மறுதொடரை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். மக்சீம் கார்க்கியின் புதிய தொடர் கதை, தாய் மனித நேயமுள்ள ஒவ்வொருவருடைய மனதையும் கனக்கச் செய்கிறது. வளர்ந்து வரும் எழுத்தாளர்களையும், அவர்களின் படைப்புக்களையும் தினமுரசு வாரமலர் தாங்கிவரும் தன்மையே தனிச் சிறப்பானது. இறைவா... வாழவேண்டும் என்றும் எந்தன் தினமுரசு வாரமலர்.

**ஷஹீர்ஷா தாஸிம்-தர்கா நகர்.**

# புலிகளின் ஒருமாத 'பட்ஜெட்' ரூ.10 கோடி

# விற்பனை வரி மூலம் பெருமளவு நிதி!

(யாழ்ப்பாணத்திலிருந்து வர்மா)

### மாத வருமானம்

தமிழ் விடுதலைப் புலிகள் வடக்கே தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கட்டுக்கோப்பான நிர்வாக முறையை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் பத்துக்கோடி ரூபாய் புலிகள் அமைப்புக்கு நிதியாகச் சேருகிறது.

கிளாலி வழியாக யாழ் குடாநாட்டுக்குச் செல்லும் பொருட்களுக்கு பெறப்படும் வரி, பின்னர் வியாபாரிகளிடம் அறவிடப்படும் விற்பனை வரி போன்றவை மூலம் அந்த நிதியில் பெரும்பகுதி சேருகிறது.

சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் சிறு வியாபாரிகள் 50 ரூபா விற்பனை வரியாகச் செலுத்தவேண்டும். இவ்வாறு வியாபாரத்தின் தன்மை, வருமானம் என்பவற்றை கருத்தில்கொண்டு விற்பனை வரி அறவிடப்படுகிறது.

சிறு கடைக்காரர்கள் மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபா வரியாக புலிகள் அமைப்புக்கு செலுத்தவேண்டும்.

### பெரும் வர்த்தகர்கள்

கொழும்பில் இருந்து நேரடியாக பொருட்களை தருவித்து மொத்த வியாபாரம் செய்யும் பெரும் வர்த்தகர்கள் இலட்சக் கணக்கான ரூபாய்களை செலுத்தவேண்டியிருக்கும்.

இது தவிர கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசால் அனுப்பப்படும் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியை புலிகள் அமைப்பினர் பெற்றுக்கொள்கிறார்கள்.

அந்தப் பொருட்கள் பின்னர் வெளிச் சந்தைகளில் இரு மடங்கு விலையில் விற்கப்படுகின்றன. அதன் லாபம் புலிகள் அமைப்பினருக்கு நிதியாகச் சேருகிறது.

யாழ் குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு வியாபாரியும் பற்றுச் சீட்டு உள்ள பொருட்களை மட்டுமே விற்பனை செய்யவேண்டும் என்பது புலிகளது கட்டுப்பாடாகும்.

விற்பனை வரியில் மோசடிகள் இடம் பெறாமல் செய்யவே அவ்வாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகளிடம் வரியை அறவிடுவதில் புலிகள் கண்டிப்புடன் செயற்படுகிறார்கள். அதே சமயம் பொருட்களின் விலை ஏற்ற விவகாரத்தில் அவர்கள் தலையிடுவதில்லை.

அரிசி விலையை மட்டும் குறிப்பிட்ட அளவைத் தாண்டாமல் இருக்க புலிகள் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

### தடையால் இலாபம்

டோர்ச் பற்றரி ஒன்று முன்னர் முன்னூறு ரூபாய்வரை விற்கப்பட்டது. தற்போது நூறு ரூபாய்வரை விற்கப்படுகிறது.

பற்றரித்தடை முழுமையாக அமுலில் இருந்தபோது ஒரு லொறி நிறைந்த பற்றரிகள் தாண்டிக்குளத்தை தாண்டி வந்தது என்று கிளாலியில் உள்ள படகோட்டி ஒருவர் நினைவு கூருகிறார்.

பொருளாதாரத்தடை பொருட்களின் தட்டுப்பாட்டை ஏற்படுத்தவில்லை. விலையேற்றத்தை ஏற்படுத்தி வியாபாரிகளும், லஞ்சப் பேர்வழிகளும் கொழுக்கவே உதவியது என்று அவர் சொன்னார்.

### நீண்டகாலத் திட்டங்கள்

பேச்சுவார்த்தைகள், தீர்வுத் திட்டங்கள் பற்றி எவ்வாறு பேசப்பட்டாலும் புலிகள் தமது தன்னாட்சி நிர்வாகங்களையும், நீண்டகால பொருளாதார திட்டங்களையும் வளர்த்து உறுதிப்படுத்தி வருகின்றனர்.

தற்போது ஆரம்பித்துள்ள தேக்குமரச் செய்கை மூலமாக எதிர்காலத்தில் யாழ்ப்பாண மக்களது விறகுத் தேவை முழுவதுமாக பூர்த்தி செய்யப்படும் என்று நம்பப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்காக 45 வருட கிராமிய வங்கி சேமிப்புத் திட்டத்தை புலிகள் ஆரம்பித்து நடத்திவருகின்றனர்.

### நிர்வாக அமைப்புக்கள்

புலிகள் அமைப்பின் முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையாவால் உருவாக்கப்பட்ட சிற்றூர் அவைகளில் புலிகள் அமைப்பு ஆதரவாளர்கள் பொறுப்புக்களில் இருந்தனர்.

அவர்கள் அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டதாக புகார்கள் எழுந்தன.

மாத்தையாவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையோடு 'புலிகள் மக்கள் முன்னணி' என்ற அரசியல் கட்சியும், சிற்றூர் அவைகளும் பிரபாகரனால் கலைக்கப்பட்டன.

தற்போது நீதிமன்றங்களை நிறுவியுள்ள புலிகள் அமைப்பினர் தமது உறுப்பினர்களையே நீதிபதிகளாகவும், ஜுரிகளாகவும் நியமித்துள்ளார்கள். 20 வயதுடையவர்களும் நீதிபதிகளாக இருக்கிறார்கள்.

இயக்க உறுப்பினர்களே பொறுப்புக்களில் இருக்கவேண்டும் என்ற கொள்கையை பிரபாகரன் நடைமுறைப்படுத்தி வருகிறார்.

### மக்களின் புகார்கள்

பிரபாகரன் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை. அதனால் மக்களை நேரடியாக சந்திக்க முடியாவிட்டாலும் யாழ் குடாநாடெங்கும் விசேஷமான தபால்பெட்டி ஒன்று இருக்கிறது.

மக்கள் தமது புகாரை எழுதி அதில் போட்டுவிடவேண்டும். அது நேரடியாக பிரபாகரனிடம் சேர்ந்துவிடும்.

பிரபாகரனின் நேரடிப் பொறுப்பில் உள்ள விசேஷ பிரிவு புகார் குறித்து உடன் விசாரித்து நடவடிக்கை எடுக்கும்.

### நேரடிக் கட்டுப்பாடு

மாத்தையாவின் பிரச்சனையின் பின்னர் மத்திய குழு போன்ற கட்டமைப்புக்கள் யாவும் செயலிழந்துவிட்டன.

பிரபாவே நேரடியாக சகல கட்டுப்பாடுகளையும் தன் கரத்தில் வைத்திருக்கிறார்.

முக்கிய பொறுப்பாளர்கள் சிலரை அடிக்கடி சந்தித்து கலந்துரையாடுகிறார்.

அரசியல் பொறுப்பாளர் தமிழ் செல்வன், துணைப் பொறுப்பாளர் கரிகாலன், நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா (முன்னாள் ஈரோஸ் தலைவர்களில் ஒருவர்) இராணுவ தளபதிகள்- பால்ராஜ், சொர்ணம், கடற்புலித் தளபதி சூசை போன்றவர்கள் பிரபாகரனை அடிக்கடி சந்திக்கும் பட்டியலில் உள்ளவர்கள்.

### விரைவில் ஈழம்

தமிழீழம் உருவாக்கப்படும் காலகட்டம் அண்மித்து வருவதாக புலிகள் மத்தியில் நம்பிக்கை பலமாக நிலவுகிறது.

தன்னாட்சி நிர்வாக கட்டமைப்புக்களும் அந்த நம்பிக்கையை உருவாக்கியுள்ளன.

பேச்சுவார்த்தைகளின்போது தமது நிர்வாக கட்டமைப்பு விவகாரங்களை அரச தரப்பு எழுப்பக்கூடிய சந்தர்ப்பத்தை புலிகள் தவிர்த்துவிடுவார்கள் என்று தெரிகிறது.

பேச்சைப் பொறுத்தவரை புலிகளின் நிலை இதுதான்- "எந்தப் பிரச்சனையை எடுத்தால் பேச்சு முறியுமோ அதனை எடுக்காமல் வேறு விவகாரங்களைப் பேசுவது."

## கடந்தமாதம் 13 பேர் பலி!

யாழ் குடாநாட்டில் 'செப்டி சீமியா' என்னும் நோய் கட்டுப்படுத்த முடியாதவாறு தொடர்ந்து பரவிவருகிறது.

கடந்த மாதம் மட்டும் 13பேர் அந்த நோயினால் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளனர்.

யாழ் பொது வைத்தியசாலை வட்டாரத் தகவலின்படி, பல்வேறு நோய்கள் காரணமாக 88 நோயாளிகள் இறந்துள்ளனர்.

நவம்பர் மாதத்தில் முப்பத்தாறாயிரத்தி அறுநூற்றி முப்பத்தொன்பதுபேர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். ஐயாயிரம்பேர் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

நோய்களின் தாக்கம் யாழ் குடாநாட்டில் வளர்ச்சியடைந்து வருவதை மேற்கண்ட தகவல் உறுதிப்படுத்துகிறது.

## ஒரு ஜனாதிபதி! இரு பாராளுமன்றம்-மூன்று இராணுவம்!

## புதிய சர்ச்சையைக் கிளப்ப வந்துள்ள தீர்வுத் திட்டம்!

(அரசியல் நிருபர்)

இனப்பிரச்சனைக்கு புதிய தீர்வுத் திட்டம் ஒன்றோடு யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறார் திரு.அருளர்.

ஈரோஸ் அமைப்பின் முக்கியஸ்தராக முன்னர் இருந்தவர் இவர். லெபனானில் இராணுவப் பயிற்சியும் பெற்றவர்.

சமாதான முயற்சிகளில் ஈடுபடப் போவதாக மூன்று வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்திருந்தார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் சென்ற அருளரை புலிகள் கொழும்பு திரும்பாமல் ஏறக்குறைய மூன்று வருடங்கள் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைத்திருந்தனர்.

கடந்தவாரம் கொழும்பு வர அனுமதி கிடைத்தது. புலிகள் பாஸ் வழங்கினார்கள்.

தற்போது கொழும்பில் உள்ள அருளர், முரசு நிருபரோடு பேசினார்.

புதிய தீர்வுத் திட்டம் ஒன்றோடு தான் வந்திருப்பதாக அவர் கூறினார்.

புலிகளின் முக்கியஸ்தர்கள் பலருக்கும் தனது தீர்வுத் திட்டம் பற்றி தெரிவித்திருப்பதாக அவர் கூறினார்.

தனது தீர்வுத் திட்டம் பற்றி அருளர் விளக்கும்போது: ஒரு ஜனாதிபதி இருப்பார். அவரின்கீழ் இரு பாராளுமன்றங்கள் இருக்கும். ஒரு பாராளுமன்றம் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கானதாக இருக்கும்.

மூன்று இராணுவம் இருக்கவேண்டும். ஒன்று சிங்கள இராணுவம். இரண்டாவது தமிழ் இராணுவம். மூன்றாவது பொதுவானதாக இருக்கும். சகல இன மக்களையும் கொண்ட அந்த இராணுவம் தேசிய இராணுவம் என்றழைக்கப்படவேண்டும்.

இவ்வாறான தீர்வு வருமானால் புலிகள் திருப்தியடைவார்கள் என்று தான் நம்புவதாக அருளர் கூறினார்.

தனியான இராணுவம், தனியான பொலிஸ்படை, நீதிமன்றம், வங்கிகள் போன்றவற்றை புலிகள் கட்டமைத்துள்ளார்கள்.

எனவே-அவற்றை செயலிழக்கச் செய்யும் எந்தவொரு தீர்விற்கும் புலிகளால் இறங்கிவர முடியாது. அந்த நிர்வாக மற்றும் அதிகார கட்டமைப்புக்களை அதிகம் பாதிக்காத தீர்வுத் திட்டத்தையே பிரபாகரன் பரிசீலிக்க முன்வருவார். அதனைக் கருத்தில் கொண்டே தனது தீர்வுத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக அருளர் மேலும் தெரிவித்தார்.

"இவற்றுக்கு குறைவான தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தால் சிரித்துக்கொண்டு பிரபாகரன் சொல்லுவார் "போய் வாருங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்றும் அருளர் விபரித்தார்.

## சந்திரிக்கா யோசனை—பிரபா வரவேற்பு!

## பாப்பரசர் விஜயம்வரை போர் நிறுத்தம்?

இரண்டுவார காலம் போர் நிறுத்தம் செய்வது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்த யோசனையை பிரபாகரன் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் புலிகள் விடுத்துள்ள செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"2 வார காலம் போர் இடை நிறுத்தம் செய்வது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்காவின் யோசனைக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இணக்கம் தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். 15.12.94 அன்று இக்கடிதம் கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

"போர் இடை நிறுத்த காலத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றி இரு தரப்பும் பேசித் தீர்மானிக்கப்படும்" என்று தலைவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். சிறிலங்கா அரசு பிரதிநிதிகளோடு நடைபெறும் பேச்சில் போர் இடை நிறுத்தம் குறித்து முக்கியமாக ஆராயப்படும். இவ்வாறு புலிகள் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

## -அரச பிரதிநிதிகள் தூதுக்குழு-

## இறங்குவதில் மாற்றம் ஏன்?

(யாழ்ப்பாணம்)

புலிகளோடு முதற்சுற்றுப் பேச்சு நடத்த யாழ் சென்ற அரச பிரதிநிதிகள் ஹெலிகொப்டர் மூலம் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் சென்று இறங்கினார்கள்.

அப்போது யாழ் மக்கள் திரண்டுவந்து முண்டியடித்து வரவேற்றார்கள். புலிகளது காவல்துறையினரால் மக்களைக் கட்டுப்படுத்த இயலவில்லை. தடியடிப் பிரயோகமும் செய்யவேண்டியதாகிவிட்டது.

மருத்துவபீட மைதானம் நான்கு திசைகள் மூலமும் மக்கள் உட்பிரவேசிக்கக்கூடியதாக இருந்ததே கட்டுப்படுத்த முடியாமல் போனதற்கான காரணமாகும்.

இதனையடுத்து இனிமேல் அரச பிரதிநிதிகள் வரும்போது சென் ஜோன்ஸ் பாடசாலை மைதானத்தில் ஹெலிகொப்டர் வந்திறங்கவேண்டும் என்று புலிகள் முடிவு செய்தனர்.

காமினி திசாநாயக்கா கொலையான போதும் அரசப் பிரதிநிதிகள் பேச்சுக்கு வருவார்கள் என்றே புலிகள் எதிர்பார்த்தார்களாம். அதனால் காமினி கொலைக்கு மறுநாள் சென் ஜோன்ஸ் மைதானத்தில் அரச பிரதிநிதிகளை எதிர்பார்த்து புலிப் பிரமுகர்கள் காத்திருந்துவிட்டு திரும்பிச் சென்றார்கள்.

## கூட்டணி எம்.பிக்கு பலத்த பாதுகாப்பு

(நமது நிருபர்)

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரான திரு.நீலன் திருச்செல்வத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய தமிழ் கட்சிகளது பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இதுவரை பிரத்தியேகப் பாதுகாப்பை அரசிடம் கேட்டுப் பெறவில்லை என்று தெரிகிறது.

திரு.நீலன் திருச்செல்வத்திற்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று உடனடியாக அறிய முடியவில்லை. அவரது உயிருக்கு யாராவது அச்சுறுத்தல் விடுத்திருக்கலாம். அல்லது வேறு ஏதாவது காரணமா என்று தெரியவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசாங்கத்தை ஆதரித்து வருகிறது. அவசரகால சட்டம் போன்றவற்றை கண்டித்து பேசினாலும்கூட, அவை நிறைவேற்றப்பட ஏகோபித்த ஆதரவு தெரிவித்து வருகிறது.

சம்பத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி, மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தது.

## வரிகொடுக்கிறோம்- வீடு எங்கே?

(திருமலை நிருபர்)

மாகாணசபை ஊழியர்களுக்குக் குடியிருப்புக்காக அரசாங்க வீடுகள் வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக பரவலான அபிப்பிராயம் எழுந்துள்ளது.

வீடு கேட்டு விண்ணப்பித்துப் பல ஆண்டுகளாகியும் தமது விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படவில்லையென்றும் அதே வேளை தங்களுக்குப் பிறகு விண்ணப்பித்தவர்களுக்கு அரச வீடுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை வீட்டு உடைமையாளர்களினால் வசூலிக்கப்படும் பெருந்தொகையான முற்பணம், உயர்ந்த வாடகை என்பவற்றால் தமது ஊதியத்தில் பெரும்பகுதியை தாரை வார்த்துவிட்டுப் பட்டினி கிடக்கவேண்டிய நிலைக்கு இவ் வூழியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வீட்டு வாடகை அழுத்தத்தால் நடைப்பிணமாக வாழும் தங்கள் குறைகளை 'தினமுரசு' செய்தி வெளியிட்ட பின்னராவது தீராதா என நிருபரிடம் வேதனையோடு இவர்கள் கூறுகிறார்கள்.

## "விடுதலையை விரைவுபடுத்த கலைகள் உதவும்"

(வர்மா)

யாழ்ப்பாணம் மருதனாமடம் நுண்கலைக் கல்லூரியில் புலிகள் அமைப்பின் வலிகாமம் பகுதி எழுத்தாளர்களை பாராட்டும் விழா ஒன்று நடைபெற்றது.

17.12.94 அன்று மாலை நடைபெற்ற அந்த விழாவில் புலிகள் அமைப்பின் யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி கலந்துகொண்டு உரையாற்றினார்.

"என்றுமேயில்லாத அளவுக்கு தமிழீழத்தில் கலைகள் இன்று ஆரோக்கியமாகவும், உயிர்ப்புள்ளவையாகவும் உள்ளன.

புதிய தொழில்நுட்பத்தோடு, அறிவியல் அணுகுமுறையோடு தமிழீழக் கலைஞர்கள் படைப்புக்களை மேற்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது.

"தமிழீழ விடுதலையை விரைவுபடுத்துவதற்கு கலைஞர்கள் உதவ முடியும். இதனை தமிழீழ தேசியத் தலைவரும் திடமாக நம்புகிறார்.

"கலைஞர்கள் ஒவ்வொருவருடைய பாதையும் விடுதலையை நோக்கி முன்னேற வேண்டும்" என்று இளம்பரிதி தனது உரையில் தெரிவித்தார்.

## உலகத் தமிழர் ஆவணக் கண்காட்சி!

(ஹரிஸ்பத்துவ நிருபர்)

தமிழகத்தில் தஞ்சாவூரில் ஜனவரி 1-5ஆம் திகதி வரை நடைபெறுகின்ற 8வது உலகத் தமிழர் தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி அங்கு உலகத்தமிழர் ஆவணக் காப்பகக் கண்காட்சி ஒன்றை நடாத்த குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் தம்பதியினர் முன்வந்துள்ளனர். மேற்படி மாநாடு முடிந்தபின் தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலும் இதுபோன்ற கண்காட்சிகளை ஏற்பாடு செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக திரு. கனகரத்தினம் 'முரசு'வுக்குத் தெரிவித்தார்.

போதியளவு இட ஒதுக்கீடு செய்வதில் பிரச்சனைகளை எதிர்நோக்குவதாய் தமிழக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து திரு. கனகரத்தினம் அவர்கள் தமது சொந்த முயற்சியுடன் இவற்றைத் தமிழகம் கொண்டுசென்று தஞ்சாவூரின் ஏனைய பகுதிகளிலும் மக்கள் பார்வைக்காக வைக்க ஏற்பாடு செய்து வருகிறார். புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு-தமிழ்ப்பேரவை டிசம்பர் 24-25ம் திகதிகளில் நடாத்தும் மாநாட்டிலும் இக் கண்காட்சி, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறவுள்ளதாகத் திரு. இரா. கனகரத்தினம் தெரிவிக்கிறார்.

## கண்டியில் உருமாறும் தமிழ்!

(ஹரிஸ்பத்துவ நிருபர்)

கண்டி மாவட்டத்தில் இயங்கும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவற்றின் அலுவலகங்களில் காணப்படும் பெயர்ப்பலகைகளில் நாளுக்கு நாள் தமிழ் எழுத்துக்கள் உருமாறியும் பிழையாகவும் எழுதப்பட்டுவருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

சிங்கள இனத்தைச் சேர்ந்தோர் எழுதும்போது இவ்வாறு பிழைகள் இடம்பெறுவதாக சில தமிழ் அதிகாரிகள் 'முரசு'வுக்குத் தெரிவித்தனர். பிரதேச செயலாளர் பிரிவுகள் மாகாணசபை நிருவாகத்திற்குட்பட்ட திணைக்களங்கள், கண்டி டெலிகொம் ஆகியன போன்ற எல்லா அலுவலகங்களிலும் கொட்டை எழுத்தில் எழுதப்பட்டுள்ள பிழையான தமிழ் எழுத்துக்களைத் திருத்த உதவுவோர் கண்டியில் ஒருவருமில்லையா? என்று தமிழ் பேசும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# பொருட்களின் விலையேற்றமும் வெள்ளப் பாதிப்பும்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பில் பொருட்களின் விலைகள் திடீரென உயர்ந்துள்ளன. பச்சை மிளகாய் ஒரு கிலோ 150/=, செத்தல் மிளகாய் 140/=, அரிசி ஒரு கொத்து 20/=, சீனி ஒரு கிலோ 32/=, பருப்பு 33-37/= ரூபா வரை, உருளைக்கிழங்கு 80/= ரூபா என்ற விதத்தில் உயர்ந்துள்ளன. தொடரான வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு துன்பத்தில் துவண்டு போயுள்ள மக்களுக்கு இதுவும் ஒரு சோதனையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதே வேளை 5 பேருக்கு மேற்பட்ட குடும்பமொன்றிற்கு வெள்ள நிவாரணமாக 180/= ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கப்படும் என்று கூறப்பட்ட போதும் இடத்துக்கிடம் நிவாரணப் பொருட்கள் குறைத்தும் வழங்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு புதூரில் 5 பேருக்கு மேற்பட்ட குடும்பமொன்றிற்கு அரிசி 3 கிலோ, மா 2 கிலோ, பருப்பு 1/4 கிலோ, சீனி 1/4 கிலோ, தீப்பெட்டி-1 உம் வழங்கப்பட்டுள்ளன. இதே வேளை ஏறாவூரில் 5 பேருக்கு மேற்பட்ட குடும்பமொன்றிற்கு 5 1/2 கிலோ அரிசியும், 2 கிலோ சீனியுமே வழங்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தின் அனேக பகுதிகளில் இன்னமும் வெள்ள நிவாரணம் கொடுபடவில்லை.

# அரச விழாவில் கட்சிக்கொடி?

(கண்டி நிருபர்)

கடந்த 01.12.94ல் பொகவந்தலாவை செண்ட் மேரிஸ் தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு ம.மா.தமிழ் கல்வி அமைச்சர் திரு புத்திரசிகாமணி அழைக்கப்படவில்லை. இந்த விடயம் தற்போது விவகாரமாகியுள்ளது. மாகாண சபையின் கல்வி அமைச்சின் கீழ்தான் பாடசாலை நிருவாகம் உண்டு. அப்படியிருந்தும் ஒரு தொழிற் சங்கத்தின் (மலையக மக்கள் முன்னணி) கொடியும் தேசியக் கொடியும் அப்பாடசாலையில் தொங்கவிடப்பட்டது சரியல்ல எனவும் பாடசாலையை அரசியல் மேடையாக்க வேண்டாமெனவும் புத்திரசிகாமணி சபைக் கூட்டத்தின்போது கண்டித்து பேசினார். இது குறித்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் சுட்டிக்காட்டினார். பிரதி அமைச்சர் ஒருவர் (திரு சந்திரசேகரன்) கண்டி உதவி இந்தியத் தூதுவர் ஆகியோர் அங்கு வந்ததன் மூலம் மாகாண ச[illegible] கல்வி அமைச்சர் புறக்கணிக்கப்பட்ட செயல் சரியல்ல எனவும் சபையில் உறுப்பினர்க[illegible]டிக்காட்டினார்.

# கப்பல் டிக்கட் பெறுவதில் சிரமம்

(மன்னார் நிருபர்)

கற்பிட்டியிலிருந்து மன்னாருக்கு கப்பலில் பயணம் செய்வோர் அதற்கான அனுமதிச் சீட்டைப் பெறுவதற்குப் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிகிறது.

காலை 9 மணிக்கு வழங்கப்படும் இந்த பயண அனுமதிச்சீட்டிற்காக நள்ளிரவு 12 மணி முதல் காத்து நிற்க வேண்டிய அவல நிலையுள்ளது.

அண்மையில் கப்பல் பயணச் சீட்டுக்காக நள்ளிரவு முதல் சுமார் 70 துக்கும் மேற்பட்டோர் காத்து நின்றனர்.

எனினும் டிக்கட் வழங்கும் நேரம்வரை காத்து நின்ற இவர்களில் 27 பேருக்கு மட்டுமே டிக்கட் வழங்கப்பட்டது. இது மன்னார் அரசாங்க அதிபரின் உத்தரவு என்றும் அறிவிக்கப்பட்டது.

# மாணவர் முன்னிலையில் ஆசிரியை தகராறு!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர்-ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியைகள் நால்வர் வாய்த் தர்க்கத்திலீடுபட்ட நகைப்பிற்கிடமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இறுதித் தவணைப் பரீட்சை நடந்துகொண்டிருக்கும்போது மூன்று ஆசிரியைகள் பலமாகக் கதைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். இதைக் கண்ணுற்ற மற்றொரு ஆசிரியை கதைத்துக்கொண்டிருந்த மூவரையும் எச்சரித்திருக்கிறார். இவ்வேளையில் பலமான வாய்த் தர்க்கம் ஏற்பட்டிருக்கிறது. இச்சம்பவம் பல வளர்ந்த மாணவர்கள் முன்னிலையில் இடம் பெற்றிருக்கிறது. மாணவர்கள் இச்சம்பவத்தைக் கண்டு திகைப்படைந்து பரீட்சையில் திணறிப்போயிருந்திருக்கிறார்கள். மாணவர்களையும் பாராது பரீட்சையையும் பாராது ஆசிரியைகள் தர்க்கத்திலீடுபட்டு சம்பவம் முற்றியதை அறிந்த அதிபர் சம்பந்தப்பட்ட ஆசிரியைகளை அழைத்துக் கண்டித்திருக்கிறார்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த பெற்றார்; ஆசிரியர்களின் சொல்லும் செயலும் மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்; இவ்வாறு மாணவர்கள் முன்னிலையில் ஒழுக்கம் தவறி நடந்துகொள்வது கண்டிக்கத் தக்கதும் வேதனைக்குரியதுமாகும். ஒழுக்க நெறிமுறைகளைக் கற்பிப்பவர்கள் ஒழுக்கம் தவறலாமோ என்று கேட்கிறார்கள்.

## தேனகச் செய்திகள்-தேனீ

# அமைச்சர் பௌஸி உடனடி நடவடிக்கை

**சுற்றாடல் குழு:** காத்தான்குடி பிரதேச சுற்றாடல் ஊக்குவிப்புக் குழுக் கூட்டம் காத்தான்குடி-பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது. குழுவின் நோக்கம், செயற்பாடு, சுற்றாடல் பிரச்சினை ஆகிய தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

**நகரை அழகுபடுத்தும் திட்டம்:** மட்டக்களப்பு-நகரை அழகுபடுத்தி துப்புரவாக வைத்திருக்கும் திட்டமொன்றை மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன்.ஜே.பேரின்பநாயகம் மேற்கொண்டுள்ளார். புதிய திட்டத்தின்படி-நகரின் கடைத் தெருப் பகுதி-இரு தடவைகள் தினமும் 'சுத்தப்படுத்தப்படும்'. சுகாதார, மராமத்துப் பகுதி தொழிலாளர்களை இணைத்து ஒரே வேளையில் நகரின் பல்வேறு பகுதிகளையும் துப்பரவு செய்யும் திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

**சோலைவரி அறவீடு:** மட்டக்களப்பு மாநகரசபைப் பிரிவில்-பல ஆண்டுகாலமாக அறவிடப்படாது தேக்க நிலையிலிருந்த சோலைவரியை அறவிடும் பணியை மாநகரசபையின் வரி அறவிடும் உத்தியோகஸ்தர்கள் மேற்கொண்டுள்ளனர். 37 இலட்ச ரூபா மாநகர சபைக்கு வரியிறுப்பாளர்களால் செலுத்தப்படாது இருந்து வந்துள்ளமையை மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகம் அவர்கள் அறிந்துகொண்டபின் சபையின் ஒருமுகமான தீர்மானத்தின்படி வரியை அறவிடும் இம்முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

**புதிய கட்டிடம்:** மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் சிக்கனக் கடனுதவிச் சங்கம் இருமாடிக் கட்டிடமொன்றை மாமாங்கத்தில் அமைத்து வருகிறது. இதற்கென 5 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. முதல்கட்ட வேலைகள் பூர்த்தியாகி, இரண்டாங்கட்ட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

**நிவாரணம்:** மட்டக்களப்பு மாநகர சபைப் பிரதேசத்தில் மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜம் கூட்டுறவுக் கிளைகளின் ஊடாக வெள்ள நிவாரண உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது. உலர் உணவாக தலா ஒருவருக்கு 12 ரூபா பெறுமதியான அரிசிமாவை விநியோகித்து வருகிறது. இத்தகவலை மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜ இயக்குநர் சபைத் தலைவர் திரு.என்.சுந்தரேசன் தெரிவித்தார். முதலில் கருவப்பங்கேணி பகுதிக்கு இந்நிவாரணம் வழங்கப்பட்டதாகவும், சீனி, பருப்பு போன்ற பொருட்கள்-மட்டக்களப்பு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் கையிருப்பில் இல்லையென்றும் கொழும்பிலிருந்து இப்பொருட்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

**பரிசளிப்பு விழா:** மட்டக்களப்பு-செயின்ட் மேரிஸ் மொன்டிசூரி பாடசாலையின் வருடாந்த கிறிஸ்மஸ் விழாவும், பரிசளிப்பு வைபவமும் டிசம்பர் மாதம் 3ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாநகர முதல்வர் திரு.செழியன் ஜே.பேரின்பநாயகம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

**மூன்று இலட்சம் உதவி:** மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களுக்கு உபத்திரவமாகவுள்ள நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்த மலத்தீனுக்குப் பதிலாக பேகோன் தெளிமருந்தை மாற்றீடாக பாவிப்பதற்கு மூன்று இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் சமூக நலத்துறை சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இத்தகவலைத் தெரிவித்தார்.

**A.M.Pமாருக்கு வேலைவாய்ப்பு:** மட்டக்களப்பு மேற்குப் புறக் கிராமங்களின் மருந்தகங்களில் கடமையாற்ற ஏ.எம்.பிமார் இல்லாத குறையை நீக்குவதற்கு சுகாதார நலத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளார். தோட்டப் பகுதிகளிலிருந்து வேலை வாய்ப்பை இழந்துள்ள 59 பேர் இப்பிரதேசத்தில் நியமிக்கப் படுவரென தெரிவிக்கப்பட்டது.

**பரிசளிப்பு விழா:** மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா மகளிர் மன்ற மண்டபத்தில் டிசம்பர் மாதம் 3ந் திகதி நடைபெற்றது. மட்டக்களப்பு மாநகர முதல்வர் திரு.செழியன் ஜே.பேரின்பநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

# விலை குறைப்பு அறிவிப்பும்-நிலை மாறா விலைகளும்!

(மன்னார் நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர் சில அத்தியாவசிய பொருட்களுக்கு விலைகளைக் குறைத்தது.

இவ்விலை குறைப்பின் பயனை அனுபவிக்க முடியாத நிலையில் மன்னார்த்தீவு மக்கள் காணப்படுகின்றனர்.

மண்ணெண்ணை, அரிசி, பருப்பு, மா, மாவினால் ஆக்கப்படும் பாண், பணிஸ் என்பவைகளின் விலைகள் பெருமளவில் குறைக்கப்பட்டள்ள போதிலும் சிவில் நிர்வாகத்திற்குட்பட்ட மன்னார்த் தீவில் மட்டும் இந்த விலைக் குறைப்பு நடைமுறைக்கு வராதது ஏன் தான் என்று விளங்கவில்லை.

தாராபுரம் பகுதியில் ஒரு இறாத்தல் பாண் 6 ரூபாவாகவும் ஏனைய மாவினால் ஆக்கப்பட்ட பொருட்களின் விலைகள் கூடுதலாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

மன்னார் ச.தோ.ச. மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணையைத் தவிர ஏனைய சகல பொருட்களும் அதற்கான கட்டுப்பாட்டு விலைகளில்தான் வழங்கப்படுகின்றன.

கூட்டுறவு சங்கங்களில் மண்ணெண்ணை ஒரு லீட்டர் ரூபா 16.50 ஆகும். தனியார் கடைகளில் 30 ரூபா வரையும் விற்கப்படுகின்றது.

மின்சாரம் இல்லாத மன்னார்ப் பகுதியில் அதிகளவில் மண்ணெண்ணை பயன்படுத்தப்படுகின்றது. எனவே ஏனைய பகுதிகளைப் போன்று மன்னாரிலும் உடனடியாக விலை குறைப்பு செய்யப்படுவது அவசியமாகும்.


## விளம்பரப் பகுதி

**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX, P.O. BOX 162
COLOMBO - 11. T.P. - 434770

**BRIGHT ன் தபால் மூலம் கல்வி நெறிகள்**

- ☆ 90 நாட்களில் பேச்சு ஆங்கிலம் ☆ 90 நாட்களில் பேச்சு சிங்களம்
- ☆ 5ம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி பயிற்சியும் வெகுமதியும்
- ☆ கடைக் கணக்கு எழுதும் முறை (Method of Book -Keeping)
- ☆ Association certified Book - Keepers (London Exam)
- ☆ Effective English with Grammar (Senior/Junior) Scheme (பாடசாலை மாணவர்களுக்கான இலக்கணப் பயிற்சி
- ☆ G.E.E. (O.L)முன்னோடி பயிற்சி

## மாபெரும் மலிவு விற்பனை

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையிலான அனைத்து வகை புத்தகங்களும் மலிவு விலையில் கிடைக்கும்.

**50% கழிவு நீக்கி ஆங்கில பாட கற்கை நெறி**

| | | |
|---|---|---|
| Follow Me - | 12 | 16.00 |
| Follow On - | Mayurei I | 20.00 |
| | Mayurei II | 20.00 |
| Follow Me | Exam Guide I | 25.00 |
| | Exam Guide II | 25.00 |
| | Exam Guide III | 25.00 |
| Follow Me Again I | | 20.00 |
| Follow Me Again II | | 20.00 |
| | | 171.00 |

171/- பெறுமதியான புத்தகத் தொகுப்பு 85/- விற்கப்படும்.

**50% கழிவு நீக்கி ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடி பயிற்சி**

| | |
|---|---|
| கணிதம் | 60.00 |
| தமிழ் | 55.00 |
| கட்டுரை மஞ்சரி | 25.00 |
| மும்மொழி | 20.00 |
| | 160.00 |

160/-பெறுமதியான புத்தகத் தொகுப்பு 80/- விற்கப்படும்.

90 நாட்களில் சிங்களம்
25% கழிவு நீக்கி
60/- புத்தகம் 45/- ரூபாவுக்கு விற்கப்படும.

இத்தோடு
சகல விதமான வெளியீடுகளும் பாடசாலை பாடப் புத்தகங்களும்
10% கழிவு நீக்கி விற்கப்படும.

**தில்லை மோகனின் OMOS Selection 25% கழிவு நீக்கி**

| | | |
|---|---|---|
| OMOS . | 1 | 20.00 |
| OMOS - | 2,3,4 | 75.00 |
| OMOS - | 5 | 37.50 |
| OMOS - | 6 | 37.50 |
| | | 170.00 |

170/-பெறுமதியான புத்தகத் தொகுப்பு 127.50/- விற்கப்படும்.

எமது மலிவு விற்பனை BRGHT BOOK CENTRE (PVT) LTD ல் மாத்திரமே 31.1.1995 வரை நடைபெறும். மாணவர்கட்கு நேர அட்டவணை, வாய்ப்பாடு இலவசமாக வழங்கப்படும்.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX, P.O. BOX 162 COLOMBO - 11. T.P. - 434770
77/24 JAMPATTA LANE (SRI PONNAMBALA VANESAR KOVIL EAST SIDE ROAD) COLOMBO - 13



இலங்கைக் குடியரசின் மூன்றாம் நிலை தொழில் வாய்ப்பு கல்வி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. R/NO. W/A 3596

FTB

## DIPLOMA IN FINANCIAL TRAINING

### நிதித்துறையில் டிப்ளோமா பயிற்சிப் பாடநெறி

**யாருக்கு?**

1. தொழில் தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு, பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு.
2. சுய தொழில் பார்ப்பவர்களுக்கு அல்லது சுயதொழிலில் ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு.
3. தொழில் செய்து கொண்டிருப்பவர், எனினும் முன்னேற வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு தமிழ் மொழி மூலம் முதன் முறையாக இப்படியான ஒரு பாடத்திட்டத்தை வகுத்து, இதுவரையில் ஏழு தொகுதியினர்களை வெற்றிகரமாகப் பயிற்றுவித்த, அனுபவமிக்க பட்டயக் கணக்கறிஞர்களால் (CHARTERED ACCOUNTANTS) இந்த 06 மாதகாலப் பயிற்சிப் பாடநெறி மீண்டும் 15.01.1995ல் ஆரம்பமாகின்றது. ஆகக் குறைந்த கல்வித் தகைமை G.C.E. O/L. ஆனால் கட்டாயமில்லை. உயர்தர வகுப்பில் கற்போருக்கான உசாத்துணை பாடநெறி.

மாணவர் பதிவும் புலமைப்பரிசில் பரீட்சையும் 15.01.95, அன்று காலை 9.00 மணியளவில்
இடம்:- பிரின்ஸ் கல்லூரி (கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தையடுத்து)

**500 புலமைப் பரிசில்கள்** **இலவச ஆங்கில பாடநெறி Business English**

பொது விவேகம், எளிய கணிதம் கொண்டமைந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு இலவசமாகவும், அரை கட்டணத்திலும் இப்பயிற்சி பாடநெறியினை பின்பற்றலாம்.

பின்வரும் தொழில்களைப் பெறவும் பதவி உயர்வு பெறவும் இப்பயிற்சி நெறி பெரிதும் உதவும்.

| | | |
|---|---|---|
| * Accounts Clerks | * Tax Assistants | * Accounts Executives |
| * Bank Clerks | * Wages Clerks | * Accounts Assistants |
| * Cost Clerks | * Store Keepers | * Audit Clerks |
| * Stores Clerks | * Book Keepers | * General Clerks |

**கற்பிக்கப்படும் பாடங்கள்**

| | |
|---|---|
| * நிதிக்கணக்கியல் | Financial Accounting |
| * கணக்காய்வு | Auditing |
| * வரி விதிப்பு | Taxation |
| * கிரயக் கணக்கியல் | Cost Accounting |
| * ஆங்கிலம் | Business English |

- ஞாயிறு தினங்களில் மட்டும் வகுப்புக்கள் நடைபெறுவதால், தூர இடங்களில் இருப்பவர்களும் இலகுவில் பங்குபற்றலாம்.
- பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வோருக்கு பெறுமதியான சான்றிதழ்.
- செயன்முறை பயிற்சியும் வழங்கப்படும். • தமிழ் மொழி மூலமான பூரண விளக்கம்.

இலவசமாக ETF., EPF., GRN, PRO, MRF, INVENTORY RECORD, LEDGER SHEETS, VOUCHERS, CASH MEMOS, CREDIT INVOICE போன்றவை வழங்கப்படும். இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர் இடையில் வேறு ஏதேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் (உ+ம்) GOVERNMENT CLERICAL EXAM, GOVT. TEACHERS EXAM, BANKERS ENTRANCE EXAM etc. எவ்வித கட்டணமும் இன்றிப் பயிற்சி அளிக்கப்படும்.

**DIRECTOR OF STUDIES, FINANCIAL TRAINING BASE,**
S-71, 3rd FLOOR, (CENTRAL SUPER MARKET COMPLEX)
COLOMBO-11

விபரங்களைக் கொண்ட கையேட்டினைப் பெற விரும்புவோர் தெளிவாக சுயமுகவரியை எழுதி ரூபா 8/= முத்திரையுடன் தொடர்பு கொள்ளவும். (நேரில் பெற விரும்புவோர் ஞாயிறு தினங்களில் மட்டும் பிரின்ஸ் கல்லூரிக்கு வருகை தரவும்)

முக்கிய கவனிப்பு- இலங்கையில் எமக்கு வேறு எந்த இடத்திலும் கிளைகள் கிடையாது. Advt.

# சந்திரிக்காவின் சமாதான முயற்சி

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# என்ன செய்ய நினைக்கிறார்கள் புலிகள்?

நாரதா

எதிரணியில் இருந்து விமர்சிப்பதுபோல் வசதி ஆளும்கட்சியான பின்னர் கிடைப்பதில்லை.

பொதுஜன முன்னணிக்கு தெளிவாகப் புரிந்துள்ள விசயம் அது.


ஆட்சியை ஸ்திரப்படுத்துக்கொள்ள முன்னரே வேலை நிறுத்தங்கள் வெடித்து அரசாங்கத்திற்கு தலைவலியை ஏற்படுத்தி வருகின்றன.

இடதுசாரி சிந்தனை கொண்ட அரசாங்கம் என்ற கருத்தை வேலை நிறுத்தங்கள் பலவீனப்படுத்தி வருவது தான் அரசாங்கத்திற்கு கவலை தரும் விடயமாக இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சிதான் வேலை நிறுத்தங்களின் பின்னணியில் இருப்பதாக ஜனாதிபதியே குற்றம்சாட்டியிருக்கிறார்.

அதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆளும் கட்சிக்கு மிக வசதியான சூழ்நிலையை எதிர்க்கட்சி ஏற்படுத்திக்கொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

'நீங்கள் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் சுலபமாக ஆட்சி நடத்துங்கள். நாங்கள் எதிர் வரிசையில் கைகட்டிக்கொண்டிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம்' என்று எந்தவொரு எதிர் கட்சிதான் சொல்லப்போகிறது?



ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் வேலை நிறுத்த இயக்கங்களில் முன்வரிசையில் நின்றார்கள்.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சியும் இது மாதிரித்தான் சொன்னது- "ஆட்சியை குழப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிடுகிறார்கள். தொழிலாளர்களைத் தூண்டி விடுகிறார்கள்" என்று சொன்னது.

ஆனாலும் இன்றைய வேலை நிறுத்தங்கள் அனைத்துக்கும் ஐ.தே.கட்சி மீது மட்டுமே அரசு முழுப் பழியையும் போடுமானால் அரசியல் சாயம் பூசும் முயற்சியாகிவிடும்.

திட்டமிட்டு காய்களை நகர்த்துமளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் தன்னைத் தயார்படுத்தவில்லை என்றே தெரிகிறது.

காமினி உயிரோடிருந்திருந்தால் இன்றைய வேலைநிறுத்தங்களில் புகுந்து விளையாடியிருப்பார் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

தட்டிக்கொடுத்து, தூண்டிவிட்டு காய்களை நகர்த்தி வித்தைகாட்ட ரணில் விக்கிரமசிங்க இனித்தான் அனுபவம் பெறவேண்டியிருக்கிறது.

அதற்காக தூண்டிவிடும் கலை தெரிந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இல்லையென்று கூறிவிட முடியாது.

இருக்கிறார்கள்; ஆனால் தேர்தலில் பட்ட அடிகளில் இருந்து மீள்வதற்கு அவர்களுக்கு அவகாசம் தேவைப்படுகிறது.

அந்த அவகாசத்தை தேடிக்கொண்டிருந்தபோது வேலை நிறுத்தங்கள் வெடித்தமையானது அவர்களுக்கு உற்சாகமான காரியமாகிவிட்டது.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு கிடைத்த அமோக பெரும்பான்மையால் அதிர்ச்சியடைந்துபோயுள்ள தனது கட்சியை நம்பிக்கையூட்டி தட்டியெழுப்பவேண்டிய பொறுப்பை ரணில் சுமக்கிறார்.

பொதுஜன முன்னணியை பிடித்து உலுக்குவது ஒன்றும் பெரிய விசயமல்ல. பெரும்பான்மை வாக்குகளைக் கண்டு அஞ்சத் தேவையில்லை என்று ரணில் தனது கட்சியினருக்கு உறுதியூட்ட வேலை நிறுத்தங்கள் சாதகமாக உள்ளன.

அரசாங்கம் தனது திறமையை நிரூபித்தாக வேண்டும்.

எதிர்க்கட்சியின் வேலை என்று சொல்வதோடு மட்டும் நிறுத்திக்கொண்டால் நெருக்கடி தொடரவே செய்யும். எனவே-தொழிற் சங்கங்களோடு பேசி தீர்வு காண்பதில்தான் அரசாங்கத்தின் திறமை தங்கியுள்ளது.

ஆட்சிக்கு வந்தவுடன் எதிர்கொள்ளும் முதல் நெருக்கடி என்பதால் அரசாங்கம் நெளிவு சுழிவாக நடந்தேயாக வேண்டும்.

இல்லாவிட்டால் 'முதற்கோணல் முற்றும் கோணல்' என்பதுபோல அரசின் திறமைமீது மக்களது சந்தேகம் ஏற்பட்டுவிடும். அதனை அரசு விரும்பாது. எனவே தமது கோரிக்கைகளை நிறைவேற்ற இதுவே தருணம் என்று தொழிற்சங்கங்கள் நினைக்கின்றன.

அதே சமயம், ஆட்சிக்கு வந்தவுடன் முச்சுவிடவே சந்தர்ப்பம் கொடுக்காமல் கழுத்தைப் பிடித்தால் எப்படி என்று மக்கள் நினைப்பது அரசுமீது அனுதாபம் ஏற்படுத்தவும் செய்யும்.

அதனால்தான் ஐ.தே.கட்சி வேலை நிறுத்தங்கள் பற்றி தனக்கு அறவே தொடர்பில்லாத மாதிரி காட்டிக்கொள்கிறது.

நியாயமாகப் பார்த்தால் கடந்தகால அரசாங்கத்திற்கு எதிராக வெடித்திருக்க வேண்டிய வேலை நிறுத்தங்களும், மாணவர் விடுதிப் பிரச்சனைகளையும் புதிய அரசாங்கம் எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்தங்கள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும்போது கடந்தகால அரசின் காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு இலக்கானவர்களின் தொழிற்சங்க ஆரம்பக் கூட்டத்தை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவும், பிரதியமைச்சர் அலவி மௌலானாவும் நடத்தி முடித்திருக்கிறார்கள். இருவருமே அந்த அமைப்பின் தோற்றத்திற்கான மூலவர்களாக இருக்கிறார்கள்.

பொருட்களின் விலைவாசியை கட்டுப்படுத்தும் விவகாரமும் அரசின் கையை மீறிப் போய்க்கொண்டிருக்கிறது.

'பாண் விலையை இப்படி குறைத்திருக்கத் தேவையில்லை. அவசரப்பட்டுவிட்டோம்' என்று ஆளும் கட்சி வட்டாரத்திலேயே பேசப்படுகிறது. பாணின் தரம் பற்றிய பரவலான அதிருப்திகள்தான் அதன் காரணம்.

பத்திரிகைச் சுதந்திரத்தை அரசு வற்புறுத்திக் கூறிவரும்போது பத்திரிகைக் காகித விலை வாரா வாரம் ஏறிக்கொண்டிருப்பதை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது.

உலக சந்தையில் பத்திரிகை காகித விலை ஏறியிருப்பது உண்மை என்றாலும் கூட, அதனை சாக்காக வைத்து பத்திரிகை அச்சடிக்கும் தாள் விலையை உள்ளூர் வியாபாரிகள் தம் எண்ணம்போல் உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

தாள் விலையேற்றம் பத்திரிகை விலைகளை உயர்த்திவிட்டது. சில பொருட்களின் விலை குறைப்பை வேறு பொருட்களின் விலை ஏற்றம் சரிசெய்ய மக்கள் சலித்தும் போகிறார்கள். விலை குறைப்பின் பயன் செலவைக் கட்டுப்படுத்தும் அம்சமாக இல்லாமல் போகிறது. அதிருப்திகள் வழக்கம் போல் அரசுமீது சேருகிறது.

உதாரணமாக பாண் விலை ஒரு ரூபாவால் குறைந்திருக்கிறது. தாள் விலை ஏற்றத்தால் பத்திரிகைகள் யாவும் ஒரு ரூபாயை அதிகரிக்கவேண்டி ஏற்பட்டுவிட்டது. பாண் வாங்குபவர்தான் பத்திரிகையும் வாங்குகிறார்.

இவ்வாறுதான் ஏனைய பொருட்களின் விலையேற்றமும் மக்களை பாதிக்கின்றன.

உலக சந்தையில் ஏறும் விலைகளை அரசால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் உள்ளூரில் விலைகளை ஒருஅளவுக்கு மேல் செல்லாமல் கட்டுப்படுத்த வேண்டிய தேவையும் பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது.

ஒரு வருட கால அவகாசம் கேட்டிருக்கிறார் ஜனாதிபதி.

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ஹரோல்ட் வில்சன் பாராளுமன்றத்தில் நெருக்கடி ஒன்றை எதிர்கொண்ட சமயத்தில் பின்வருமாறு கூறினார்: "ஒரு வாரம் என்பது அரசியலில் நீண்ட காலம்".

நமது ஜனாதிபதி ஒரு வருடம் அவகாசம் கோருகிறார். புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசுக்கு அது அவசியம்தான். எல்லாவற்றையும் தட்டி சீர்படுத்தி, கழிக்க வேண்டியதைக் கழித்து கால்களை திடமாக ஊன்றிக்கொள்ள ஒரு வருடம் தேவைப்படும்தான்.

ஆனால், எல்லாமே அரசின் கையில் இல்லை. அந்த ஒரு வருடத்திற்குள் எதிர்க் கட்சி கைகட்டிக்கொண்டிருக்கப் போவதில்லை. புதிய பிரச்சனைகள், அரசு எதிர்பார்க்காத கோணத்தில் இருந்து வரக்கூடும்.

மிக முக்கியமாக இருக்கவே இருக்கிறது இனப்பிரச்சனை.

தமிழ் கட்சிகள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் ஆளும் கட்சிக்கு எதிராகக் கை உயர்த்தப் போவதில்லை.

வேண்டுமானால் பொது மேடைகளில் "அரசை வீழ்த்த தயங்கோம்" என்று 'ஜோக்' விடக்கூடும். பின்னர் பின் கதவால் சென்று கைகுலுக்கிக்கொள்வார்கள்.

ஆனால், புலிகள் அப்படியல்ல. தன் வலி மாற்றான் வலியறிந்து வியூகம் வகுத்து செயற்படும் உத்தியில் தேறியிருக்கிறார்கள்.

தென்னிலங்கையின் அரசியல் தலைவிதியை தான் நினைப்பதுபோல் எழுதக் கூடிய ஒரே ஒருவர் பிரபாகரன்தான்.

அரசாங்கம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் புலிகளால் கவனிக்கப்படுகிறது.

முன்னர் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி- பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகள் யாவும் அரசுக்கு எதிராகப் பேசுவார்கள். தமிழ் பகுதிகளுக்கு அரசு பிரதிநிதிகள் சென்றால் கறுப்புக்கொடி காட்டுவார்கள்.

பின்னர் ஒருநாள் தாமே முன்நின்று அமைச்சர்களுக்கு வரவேற்புக் கொடுப்பார்கள்.

ஆனால், இப்போது நிலைமை வேறு விதமானது. அரசோடு பேச தயார் என்று புலிகள் சொன்னாலும்கூட, அரசின்மீது தமிழர்கள் நம்பிக்கை கொள்வதை புலிகள் விரும்பவில்லை.

முதற்கட்ட பேச்சுக்கு யாழ் சென்ற அரசுப் பிரதிநிதிகளை கையசைத்து யாழ் மக்கள் வரவேற்றது புலிகளுக்கு கசப்பைக் கொடுத்திருக்கிறது.

அதனால் அந்த பிரதிநிதிகளை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர்கூட புலிகளின் பிரசார சாதனங்களிடம் வாங்கிக்கட்டிக் கொண்டிருக்கிறது.

அரசிடம் பல ஹெலிகொப்டர்கள் இருக்கின்றன. சாவகச்சேரியில் பொது மக்கள்மீது ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

உடனே 'புலிகளின் குரல்' வானொலி இப்படி சொன்னது: "சிறிலங்கா அரசுப் பிரதிநிதிகளை பேச்சுக்காக ஏற்றிவந்த ஹெலிகொப்டர்தான் சாவகச்சேரியில் அப்பாவி மக்களை சுட்டது" என்று அறிவித்தது.

இலங்கை அரசின் பிரதிநிதிகள் மட்டுமல்ல, அவர்களை ஏற்றிவரும் வாகனங்கள்கூட அபிமானத்தைப் பெற்றுவிடக்கூடாது என்பதில் புலிகள் கவனத்தோடுதான் நடந்துகொள்கிறார்கள்.

தமிழர்கள் தங்களைத்தவிர- தாங்கள் கூறுவதைத் தவிர வேறு எவரையும், எந்த கருத்தையும் ஏற்கமாட்டார்கள்; என்னும் நிலமையை எவர் மீற நினைத்தாலும் புலிகள் அனுமதிக்கத் தயாரில்லை.

புலிகள் மட்டுமல்ல, எந்தவொரு போராடும் அமைப்பும் இவ்வாறான ஒரு நிலையைத்தான் மேற்கொள்ளும்.

தமிழ் சினிமாவில் வருவது போல, எதிரியிடம் ஒரு வாளைத் தூக்கி கொடுத்துவிட்டு சண்டையிடுவது மாதிரி போர்த் தந்திரம் அமைய முடியாது.

ஆனால், தமிழர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டுமானால் அரசு தனது நம்பகமான செயற்பாடுகள்மூலம் செல்ல வேண்டும்.

அரசின் துரதிஷ்டம் என்னவென்றால், புலிகளின் ஊடாகத்தான் தனது செயற்பாடுகளை தமிழர்களிடம் கொண்டுசெல்ல வேண்டிய நிலையில் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு செங்கல்லை நகர்த்திவைக்க வேண்டுமானாலும் புலிகளது அனுமதியைப் பெற்றாக வேண்டும். அதற்காகவே நிகழ்ச்சி நிரல் தயாரித்து ஹெலிகொப்டரில் போய் பேசிவிட்டு வரவேண்டியிருக்கிறது.

இரண்டாம் கட்ட பேச்சுக்கு அரசு தயாரானபோது புலிகள் தரப்புக்கு முன்பிருந்ததைவிட சாதகம் அதிகம்.

தென்னிலங்கை வேலை நிறுத்தங்கள். அமைதியின்மை காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் காட்டி வரும் தயக்கங்கள், ஆட்சிக்கு வந்த பின்னர் ஜனாதிபதி சந்திரிக்கா இனப் பிரச்சனை பற்றிய பேச்சுக்களை குறைத்துக்கொண்டுவிட்டது போல ஏற்பட்டுள்ள கருத்துக்கள், புலிகள் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம் செய்ததாக படையினர் மூலமாகவே வெளியான செய்திகள், அதன்பின்னர் படையினரே போர் நிறுத்தத்தை மீறிவிட்டதாக புலிகள் குற்றச்சாட்டு சுமத்த வசதிசெய்து கொடுத்த படையினரது நடவடிக்கைகள், எல்லாவற்றுக்கும் மேலாக பாப்பரசரின் கொழும்பு விஜயம் ஏற்படுத்தியுள்ள மோதல் நிறுத்த அவசியம்......!

ஆக, மொத்தத்தில் புலிகளின் பொறுமை இப்போது அரசுக்கு தேவை.

முறைத்துக்கொள்ளவோ, முரண்பாடுகளை பற்றிப்பேசவோ அரசுக்கு எந்த வகையிலும் ஏற்ற தருணமல்ல இது.

ஆனால், புலிகள் நிபந்தனைகளை விதிக்க முடியும். அரசாங்கம் விட்டுக் கொடுத்துப்போக வேண்டித்தான் இருக்கும்.

புலிகளுக்கும் உடனடித் தேவைகள் சில இருக்கத்தான் செய்கின்றன.

புதிய உறுப்பினர்கள் தொகை பெருகியிருக்கிறது. அவர்களை போர் நிலமைகளுக்கு ஏற்ப வார்த்தெடுக்க

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## அதிரடி அய்யாத்துரை



யாழில் இருந்து வணக்கத்துக்குரியவரை தரிசிக்க வர அனுமதி கேட்கிற ஆட்கள் தொகை நாளும் பொழுதும் அதிகரிக்குதாம். அதாலை பாருங்கோ 'அவர் இங்கும் வருவார் அங்கு ஏன் போக வேண்டும்' எண்டமாதிரி ஒரு கதையை அரசல் புரசலா அடிபடவிட்டிருக்கினமாம்.

தனித்துவ மலையாருக்கு இதுவரை ஒரு அலுவலகம்கூட கொடுக்கப்படாதது தனித்துவ கட்சிக்காரர் மட்டத்தில் வருத்தத்தைக் கொடுத்திருக்காம். வெகுஜன சபை பேச்சுக்களிலும் அது பிரதிபலிக்குதாம். வேலை நிறுத்த எச்சரிக்கையும் கசப்பின் வெளிப்பாடுதானாம்.

அம்பாறையிலை கூட்டான கட்சி ராசா கூடுதல் வாக்கு பெற்றது தேனக சிங்கத்தாருக்கு திருப்தியில்லாத விசயமாம். ராசாவை எதிர்த்து நின்று மூக்குடைபட்ட லீலைக் கிருஷ்ணனை சிங்கத்தார் தட்டிக்கொடுத்து அடுத்த தேர்தலிலை நீதான் கேட்கவேணும் எண்டு சொல்லி வருகிறாராம். லீலையாரின் உறவினர் ஒருத்தருக்கு கல்வி சம்பந்தப்பட்ட பதவியும் அதிகார வட்டாரத்தோடு வீரமாய் (?!) சிபாரிசு செய்து பெற்றுக் கொடுத்திருக்கிறாராம். சிங்கத்தார் நல்லவர்தான். ஆனால் ஒரு பலவீனம்- தன்னைவிட யாரும் கிழக்கிலை செல்வாக்கு பெறுவதை மட்டும் சத்தியமாச் சொல்லுறன்- அவர் பொறுக்கமாட்டார்.

வடக்கு-கிழக்கில் உள்ள சபையின் ஊழல் விவகாரம் ரெண்டு எழுத்தாராலை விபரமாய் திரட்டப்படுகுதாம். பிள்ளையாரின் பெயர் கொண்டவரின் லீலைகளும் பிரபலமாகி வருகுதாம். அண்ணர் நல்லாச் சுருட்டிப் போட்டாராம். அப்பனே என் கனேசப்பெருமாளே ஏன்தான் இந்த கலிகாலத்திலை இப்படியெல்லாம் நடக்குதோ? ஏன் நாதா எல்லாம் உன் திருவிளையாடலோ அப்பனே?!

வன்னியிலை இருந்த அதிகாரமான ஒருத்தரைக் கிளிநொச்சிக்கு தூக்கிப்போட ஒரு தமிழ் கட்சிதான் காரணமாம். ரெண்டு எழுத்தாரின் பிரசாரகர் மாதிரியே அவர் பேசவும், எழுதவும் வெளிக்கிட்டது குறிப்பிட்ட கட்சிக்குப் பிடிக்கேல்லையாம். அண்ணரும் லேசுப்பட்ட ஆளில்லை. அதுதான் தாஜா பண்ண ரெண்டு எழுத்தாரைப் பற்றி நல்லாப் பேசினவர். அவைக்குத் தெரியாதோ அவரின் பம்மாத்து வேலைகள்? எப்ப கழுத்திலை பிடிக்கினமோ தெரியேல்லை.

குடா நாட்டிலை பொருள் விலை ஜெட் வேகத்திலை ஏறிக்கொண்டு போகுதாம். வாங்கும் சக்தியில்லாத சனத்தின்ர பாடுதான் கஷ்டம்.

கிழக்கின் தனித்துவக் கட்சியின் மாநாட்டில் பச்சை அணி கலந்துகொள்ளவில்லை. பச்சை அணி மாநாட்டிலை தனித்துவக்கட்சி கலந்துகொண்டிருக்கு. இதைப் பனிப்போரின் ஒரு கட்டம் எண்டு சொன்னால் குழப்பிவிடுற ஆட்களின் பட்டியலில் என் பெயரையும் சேர்த்துப் போடுவினம். அதாலை அபிப்பிராயம் சொல்ல நான் விரும்பேல்லை.

பச்சை அணி மாநாட்டிலை கலந்தா நீல அணி கோபிக்கும். கலந்துகொள்ளாமல் விட்டால் பச்சை அணி ஒரு காலத்திலை அதிகாரத்திற்கு வந்தால் சிபாரிசுக்கு போகேலாது. கூட்டான கட்சி புத்திசாலித்தனமா செய்த வேலை என்ன தெரியுமோ? வாழ்த்துச் செய்தி அனுப்பி வைச்சப்போட்டு நேரில் வர வசதியில்லை மன்னித்துக்கொள்ளுங்கோ எண்டு சொன்னவையாம். மீனுக்கு வால் பாம்புக்கு தலை. உதாரணம் எங்கையெல்லாம் பொருந்துது பாத்தியளோ?

கொழும்பிலிருந்து வரும் தமிழ் தினசரி ஒன்றின் நீண்டகால ஆசிரியர் ஒய்வுபெறப் போகிறாராம். அவர் ஜனவரியில் ஒய்வுபெறும் செய்தியறிஞ்ச சிலர் அந்தப் பதவிக்கு குறிவைச்சு சிபாரிசுகளை நாடியிருக்கினமாம். யாருக்கு கிடைக்குதோ?

ஒரு பாட்டு- சிந்திச்சுப் பார்க்க செய்கையாய் மாற்றவேண்டிய பாட்டு. எழுதியது தமிழக கவிஞர் மோகனரங்கன்.

"............................................ கோழிக் குஞ்சாய்
மட்டுமே வாழ்ந்தால் வையகம் நசுக்கும்
தொட்டால் நெருப்பாம்: சூழ்ந்தால் வேங்கையாம்:
முட்டினால் புயலாம்: மோதினால் மலையாம்!
என்றே வாழ்ந்திட எண்ணுவோமானால்
சின்ன மனிதரின் சேட்டைகள் அடங்கும்!"

வன்முறையைத் தூண்டுற பாட்டு எண்டு நினைக்கப்படாது- வாழும் முறையைச் சொல்லுற பாட்டு.

# 7

# அரசியல் தொடர்

## அற்புதன் எழுதுவது

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### உமாவின் பாத்திரம்

திரு.பிரபாகரனை பொலிசார் தேடிக் கொண்டிருந்தபோதும் அவரது தோற்றத்தை அடையாளம் காணும் புகைப்படம் எதுவும் பொலிசாரிடம் இருக்கவில்லை.

அதனால் பிரபா கொழும்புக்கு வருவது சுலபமாக இருந்தது.

1978ம் ஆண்டு கொழும்பில் பிரபாகரனுக்காக காத்திருந்தவர் திரு. உமா மகேஸ்வரன்.

நில அளவையாளராகக் கொழும்பில் கடமையாற்றியவர் திரு.உமா மகேஸ்வரன்.

கியூ வரிசைகளில் இளைஞர்கள் காத்திருப்பார்கள்.

தமது வீரத் தலைவர்களுக்கு கைகளை பிளேட்டால் கீறி இரத்தப் பொட்டு வைப்பதில் போட்டி போட்டு முண்டியடிப்பார்கள்.

தலைவர்கள் தடுக்கமாட்டார்கள். 'கத்தியின்றி இரத்தம் இன்றி யுத்தம் ஒன்று நடத்துவதே நமது நோக்கம். இரத்தப் பொட்டு வைப்பது அகிம்சையை கறைப்படுத்தும்' என்று எந்தவொரு தலைவரும் அன்று சொன்னதே கிடையாது.

இதனை ஏன் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது என்றால், தற்போது கூட்டணித் தலைவர்கள் சிலர் கேட்கிறார்கள், "நாங்களா ஆயுதம் ஏந்தச் சொன்னோம்? நமது வழி அகிம்சை என்று நாடே அறியும் அல்லவா?" என்று கேட்கிறார்கள்.

இன்றைய கூட்டணியில் உள்ளவர்களில் திரு.மாவை சேனாதிராஜாவுக்கு மட்டும்தான் தீவிரவாத குழுக்களோடு கூட்டணி நடத்திய பேச்சுக்கள் பற்றியும், உறவு பற்றியும் தெரிந்திருக்கும்.

சாந்தன், யோகேஸ்வரன் ஆகிய மூவரும் கியூபா மாநாட்டில் கலந்துகொண்டனர்.

கியூபா மாநாட்டில் காசி ஆனந்தன் வாசித்த கவிதையில் சில வரிகள்-

**"நாங்கள் இதழ்கள் உள்ள பறவைகள்**
**ஆனால் பாட முடியவில்லை.**
**நாங்கள் சிறகுகள் உள்ள பறவைகள்**
**ஆனால் பறக்க முடியவில்லை.**
**நாங்கள் அடிமைகள்..."**

கியூபா மாநாட்டில் புலிகள் சார்பாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் இருந்த கையொப்பம் உமா மகேஸ்வரனுடையது.

இளைஞர் பேரவையினர் என்று இலங்கை அரசை ஏமாற்றி கூட்டணியினர் புலிகள் மூவரை 1978ல் கியூபாவுக்கு

# கியூபாவுக்கு கூட்டணி அனுப்பிய புலிகள்!

## இரத்த திலகமிட்ட இளைஞர்களும் தலைவர்களின் புன்னகையும்!

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையிலும் தீவிரமாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

உமா மகேஸ்வரன் பின்னர் புளொட் அமைப்பின் செயலதிபராக இருந்தவர் என்பது பரவலாக தெரிந்த விசயம்.

பரவலாக அறியப்படாத விசயமும் ஒன்று இருக்கிறது. சிலருக்கு அதிர்ச்சியாகவும்கூட இருக்கலாம்.

தமிழ் புதிய புலிகள் (T.N.T.) இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாக மாறியபோது ஐந்துபேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டது.

அந்த செயற்குழுவில் பிரபாகரனும் அங்கம் வகித்தார்; முக்கியமானவராக இருந்தார். ஆனால் செயற்குழுவின் தலைவராக இருந்தவர் உமா மகேஸ்வரன்.

1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் புலிகளுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் கலந்துகொண்டவர் 'தளபதி' அமிர்தலிங்கம்.

புலிகளில் மட்டுமல்ல. அக்காலகட்டத்தில் இயங்கிய சகல தீவிரவாத தமிழ் குழுக்களில் இருந்த சகல இளைஞர்களின் விபரமும் அவருக்குத்தெரியும்.

திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும் 1977 பொதுத்தேர்தலில் இரத்தப் பொட்டு வைக்கப்பட்டவர்தான்.

### காந்திகளின் கோபம்

கூட்டணியில் இன்றுள்ள திரு.ஆனந்த சங்கரி கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.

இவரது வீட்டில்தான் பரந்தன் ராஜன் போன்ற தீவிரவாத இளைஞர்கள் நடமாடினார்கள்.


தமக்கு செல்லப்பிள்ளைகளாக இருந்த வரையும் தீவிரவாத இளைஞர்களைப் பார்த்து தலைவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்களைப் பார்த்து கேள்வி கேட்க ஆரம்பித்தபோதும், தங்கள் கட்டுப்பாட்டை மீறி இளைஞர்கள் தனிவழி சென்றபோதும் மட்டும் தலைவர்கள் 'காந்தி'களாக மாறி விட்டார்கள்.

'சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்று போதிக்கத் தொடங்கினார்கள்.

வேளாண்மை தங்கள் வீடுகளுக்கு வந்து சேரும் என்றால் இந்தக் காந்திகள் தீவிரவாத இளைஞர்களைக் கட்டியணைத்துக் கொண்டே இருந்திருப்பார்கள்;

சிறு பிள்ளைகளை சிங்கக் குட்டிகள் என்று சிரசு தொட்டு வாழ்த்தியிருப்பார்கள்.







அனுப்பியது அகிம்சைக்கு ஆரத்தி எடுக்கத்தான் என்று சொன்னால் விழுந்து சிரிக்கத்தான் வேண்டும்.

கூட்டணித் தலைவர்கள் காந்தியின் அகிம்சையை மறந்தது பற்றி வருத்தமில்லை. ஆனால் காந்தி சொன்ன சத்தியத்தையும் மறந்துவிட்டு பேசுவதுதான் வருத்தமாக இருக்கிறது.

வேண்டும்.

ஆனால் கூட்டணி உட்கட்சிப் பூசலால் முஸ்லிம்களை மறந்தது. இரண்டு தமிழ் வேட்பாளர்களை நிறுத்தியது. ஆனால் வெற்றி பெற்றது இராசதுரைதான்.

இராசதுரை தீவிரமாக இயங்கவில்லை என்ற குறை இளைஞர்களிடம் அப்போது இருந்தது உண்மை.

தினசரிகளின் நெற்றியில் ஒரு செய்தி.

**"பொத்துவில் கனகருக்கு துப்பாக்கிச் சூடு!"**

**பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கனகரத்தினம் இனம் தெரியாத இரு இளைஞர்களால் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து சுடப்பட்டார்.**

**திரு.கனகரத்தினத்திற்கு நெஞ்சிலும், வலது காதிலும், முதுகிலுமாக மூன்று சூடுகள் மட்டுமே பட்டதாக தெரிவிக்கப் படுகிறது."**

பத்திரிகைச் செய்திகளைப் படித்த மக்கள் அது கூட்டணி இளைஞர்களின் வேலை தான் என்று நினைத்துக் கொண்டனர்.

கூட்டணியினர் கண்டிப்பது என்பது மக்களைப் பொறுத்தவரை ஒரு புத்தி சாலித்தனமான நடவடிக்கையாகவே கருதப்பட்டது. உண்மையும் அதுதான்.

கனகர்மீது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் பங்குகொண்டவர்கள் இருவர். ஒருவர் பிரபாகரன்; மற்றவர் உமா மகேஸ்வரன்.

கனகரத்தினம் மீதுவைத்த குறி தப்பியது. அவர் உயிர் தப்பிக்கொண்டார்.

எனினும் சூடுபட்ட காயங்கள் காரணமாக பின்னர் அவர் மரணமானார்.

அமுதர் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவான ஒருவராகவே தீவிரவாத இளைஞர்கள் பலரால் கருதப்பட்டார்.

அமுதரும் அந்த கருத்துக்கு ஏற்பவே நடந்துகொண்டார்.

தந்தை செல்வா காலத்தோடு அகிம்சை வழியில் மட்டுமே பிரச்சனைகளைத் தீர்க்கும் காலகட்டம் முடிந்து விட்டது.

தளபதி அமுதர் தலைமையில் ஆயுதப் போர் மூளும் என்று இளைஞர்கள் நம்பினார்கள்.

77ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தை அடுத்து அமுதர் பொதுக் கூட்டங்களில் ஆவேசமாகப் பேசினார்:

"தமிழர்கள் சிங்களப் படைகள் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர். தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள தமிழர்கள் தமக்கென்று ஒரு சொந்தப் படையை உருவாக்கிக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டு விட்டது."

கரகோசம் வானைப் பிளக்கும்.

### இரத்தத் திலகம்

அமுதர் உட்பட மு. சிவசிதம்பரம் போன்றவர்களும் அமர்ந்திருந்த பொதுக் கூட்ட மேடைகளில் கவிஞர் காசி ஆனந்தன் பேசுவார்:

"பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் போல் இங்கும் ஓர் இயக்கம் உருவாகும். அது வானை அதிரவைக்கும்."

தலைவர்கள் புன்னகைத்தபடி இருப்பார்கள்.

பொதுக்கூட்ட மேடைகளில் நீண்ட

திரைமறைவில் நடந்தவற்றை இந்தத் தொடரில் சொல்லும்போது 'உண்மை தானோ?' என்று சிலருக்கு சந்தேகம் வரலாம்.

அதனால்தான் பகிரங்கத்தில் நடந்த நடைமுறைகளில் இருந்தும் எடுத்துக்காட்ட வேண்டி ஏற்பட்டது.

இனி திரைமறைவில் நடந்தவற்றுக்கு செல்வோம்.

### கூட்டணி அனுப்பிய புலிகள்

1977ம் ஆண்டு கூட்டணியின் செயலதிபர் அமுதரோடு நடந்த பேச்சுவார்த்தையில் புலிகளின் சார்பில், உமா மகேஸ்வரன், பிரபாகரன், நாகராசா, விச்சுவேஸ்ரன் போன்றோர் பங்குகொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு தலைமறைவு இயக்கமாக செயற்படுவது என்றும்,

கூட்டணியினர் நிதி மற்றும் ஆயுத உதவிகளை பெற்றுக்கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அமுதர் ஒப்புக்கொண்டார்.

1978ம் ஆண்டு கியூபா நாட்டில் 'இளைஞர் மாணவர் மாநாடு' ஒன்று நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஐந்து பேரை அந்த மாநாட்டுக்கு அனுப்பி வைத்தது.

தீவிரவாதத்தை என்றுமே தாம் ஆதரித்தது கிடையாது என்று இன்று சொல்லும் கூட்டணியினர் அன்று அனுப்பிவைத்த ஐந்து பேரில் மூன்றுபேர் புலிகள்.

தமிழ் இளைஞர் பேரவை சார்பில் மாவை சேனாதிராஜா, காசி ஆனந்தன் ஆகியோரும், புலிகள் சார்பாக, சிங்கநாயகம்,

### கட்சிமாறிய பட்சி

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டணி அறிமுகப்படுத்திய வேட்பாளர்களில் ஒருவர் திரு. கனகரத்தினம்.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டு அவரும் தமிழ் ஈழம் அமைக்க ஆணை கேட்டார்.

நல்ல விசயம். தமிழ் ஈழத்தை அமையுங்கள் என்று கூட்டணியினரை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்தார்கள் வாக்காளப் பெருமக்கள்.

கனகரத்தினமும் தெரிவானார். போராட்ட வரலாற்றில் அனுபவமும், ஈடுபாடும் உள்ள பலர் இருக்க கனகரை வேட்பாளராக நியமித்தபோதே அதிருப்தி எழுந்தது.

'வடலி வளர்த்தவர்கள் யாரோ பயனை அனுபவிப்பது யாரோ' என்ற கதையாக எம்.பி.பதவி கிடைத்தது கனகருக்கு.

அவரிடம் பணம் இருந்தது. அதுதான் தகுதி.

கூட்டணியில் ஊறி வளர்ந்த திரு. இராசதுரை வெற்றி பெறுவதைக்கூட அமுதரால் சகிக்க முடியாதிருந்தது.

போட்டிக்கு காசி ஆனந்தனையும் மட்டக்களப்பில் நிறுத்தினார்.

இராசதுரை உதயசூரியன் சின்னத்திலும் காசி ஆனந்தன் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்திலும் போட்டியிட்டனர்.

அப்போது மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதி.

நியாயமாக ஒரு தமிழரும், ஒரு முஸ்லிம் உறுப்பினருமாக இருவர் தெரிவாக

ஆனால், இராசதுரைமீது தீவிரம் காணாது என்ற கோபம் கூட்டணிக்கு இருந்திருந்தால் கனகரத்தினம் என்ற போராட்ட அனுபவம் அற்ற ஒருவரை பொத்துவிலில் எப்படி நிறுத்த முடிந்தது?

தேர்தல் முடிந்தது. பொத்துவில் கனகர் குத்துக்கரணம் அடித்தார்.

கட்சியை வளர்த்திருந்தால் அல்லவா கட்சி விசுவாசம் இருந்திருக்கும்? தவறு கனகர் மீதல்லவே. தவறான ஒருவரை தெரிவு செய்தவர்கள் மீதுதானே!

ஆனால், கூட்டணியினர் கனகர் துரோகி என்றார்கள்.

அப்போது கூட்டணியின் குரலாக வெளிவந்த 'சுதந்திரன்' பத்திரிகை தனது முன் பக்கத்தில் சவப்பெட்டிக்குள் கனகர் இருப்பதுபோல் கருத்துப்பட அவரது படத்தை வெளியிட்டது.

"பொத்துவில் கனகரத்தினம் குத்துக் கரணம். ஐ.தே.கட்சியில் சேர்ந்துவிட்டார்" என்று செய்தி போட்டது சுதந்திரன்.

மன்னார் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் திரு.சூசைதாசன்.

கனகர் கட்சிமாறிய பின்னர் யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. சூசைதாசன் நன்றாகப் பாடக்கூடியவர். அவர் மேடையில் பாடியது இது;

**"போகாதே போகாதே என் கனகா**
**பொல்லாத சொர்ப்பனம்**
**நானும் கண்டேன்"**

கூட்டத்தினர் இரசித்துச் சிரித்தார்கள். சூசைதாசன் என்ன சொல்கிறார் என்று மக்கள் புரிந்துகொண்டனர்.

1978ம் ஆண்டு 28ம் திகதி காலையில்

உமா மகேஸ்வரன் சரியாக ஒத்துழைக்காத காரணத்தால் குறி தப்பியதாக புலிகள் தற்போது தமது உறுப்பினர்களுக்கு நடத்தும் வகுப்புக்களில் கூறி வருகின்றனர்.

பொலிசார் வலை விரித்து தேடினார்கள். பிரபா தப்பி யாழ்ப்பாணம் சென்றார்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஓர் உயரமான இளைஞர் சம்பந்தப்பட்டதாக பொலிசாருக்கு ஒரு தகவல் கிடைத்தது.

அவர்கள் மாவை சேனாதிராசாவைப் பின்தொடர்ந்தார்கள். இளைஞர் பேரவைத் தலைவராக இருந்த மாவை சேனாதிராசா உயரமாக இருந்தமையால் ஏற்பட்ட சந்தேகம் அது.

கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் குறித்து பின்னர் பொலிசார் ஓரளவு விபரம் அறிந்தனர்.

### பஸ்தியாம்பிள்ளை குழுவினர்

பொத்துவில் கனகர் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களை வளைத்துப்பிடிக்கவும், தீவிரவாத இளைஞர்களை மடக்கிப் பிடிக்கவும் யாழ்ப்பாணத்தில் ஒரு பொலிஸ் குழு தயாரானது.

அதன் தலைவர் சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை.

பஸ்தியாம்பிள்ளை தனது குழுவினருடன் 07.04.78 அன்று ஒரு தேடுதல் வேட்டைக்குப் புறப்பட்டார்.

தாம் எங்கே போகிறோம் என்று சக அதிகாரிகளுக்கு அவர் கூறவில்லை.

அது ஏன்? காரணம் இல்லாமல் இல்லை. (தொடர்ந்து வரும்)

## எக்ஸ்ரே ரிப்போர்ட் (தொடர்ச்சி)

வேண்டிய அவசியம் இருக்கிறது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் புலிகளே என்பதையும், புலிகள் அரசியல்-இராணுவ சக்தி என்பதையும் நடைபெறும் பேச்சுக்கள் வெளிப்படுத்திக்காட்டும்.

ராஜீவ் காந்தி கொலையோடு பிரபாவை தேடப்படும் ஒருவராக இந்தியா அறிவித்திருக்கிறது.

அதன் மூலம் பிரபா ஒரு குற்றவாளி என்று இந்தியா மறைமுகமாக சுட்டிக்காட்டி நிற்கிறது.

பேச்சுவார்த்தைகள் எப்படி முடிந்தாலும், அதன் முடிவில் யாசீர் அரபாத்-நெல்சன் மண்டேலா போன்றவர்களுக்கு இணையான ஒருவராக (வெறுமனே இராணுவக் கண்ணோட்டம் கொண்ட ஒருவராக கருதப்படாமல்) அரசியல் தலைமைத்துவம் கொண்டவராக பிரபா வெளியுலகில் அடையாளம் காட்டப்படவும் பேச்சுவார்த்தைகள் உபயோகமாகும்.

அதனைத்தான் பேச்சுவார்த்தையின் மூலம் செய்யக்கூடிய அதிகபட்ச அரசியல் ஆதாயமாக புலிகள் நினைப்பதாகத் தெரிகிறது.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் தீர்வுத் திட்டம் ஒன்றை அரசால் முன்வைக்க முடியாமல் போனால் இறுதியில் புலிகளிடம் பொல்லைக்கொடுத்துவிட்டு திரும்பி வர வேண்டியிருக்கும்.

வேறு நெருக்கடிகள் காரணமாக இனப்பிரச்சனை விவகாரத்தை ஆறப்போட்டு தீர்வு காணலாம் என்று அரசு முயலுமானால், தமிழர்களது நம்பிக்கையையும் அரசும் ஜனாதிபதியும் இழக்கவேண்டி ஏற்படும். அதுமட்டுமல்ல சந்திரிக்கா மீதான தமிழர்களது நம்பிக்கையே சிங்கள தலைவர்கள் மீதான கடைசி நம்பிக்கையாக மாறவும் வழி ஏற்படும்.

இனப்பிரச்சனை தீர்வுக்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை ஐ.தே.கட்சி தற்போதைக்கு பெரும் கண்டனத்திற்கு உள்ளாக்காது என்பதுதான் அரசாங்கத்திற்கு ஆறுதலான விசயம்.

## கடைசிக் கடிதம்

**புலிகள் அமைப்பின் தலைவர் திரு.வே. பிரபாகரன் தனது உறுப்பினர்களை எவ்வாறான உணர்வுகளோடு உருவாக்கியுள்ளார் என்பதற்கு இக்கடிதம் ஓர் உதாரணமாகும். பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதலில் பலியான புலிகள் அமைப்பின் பெண் போராளி துளசிராவால் எழுதப்பட்ட கடிதம் இது:**

தமிழீழம்
1993.07.19

என்றும் என் அன்பின் நண்பிக்கு,

எங்களுக்கு வேவு எடுக்கும் வாய்ப்புத் தரப்பட்டதையிட்டுப் பெருமைப்படுகிறேன். தமிழீழ வரலாற்றில் மகளிர் வேவு அணியின் சாதனை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். என் உடலிலிருந்து உயிர் பிரியும்வரை இதற்காகப் பாடுபடுவேன்.

நான் பூநகரி மண்ணில்தான் விதையாகிறேனோ, தெரியாது. சுதந்திரத் தமிழீழ விடியலை என் கண்களால் கண்டு மகிழவேண்டும். என் அன்னையின் வளர்ச்சியை- அவளின் எழுச்சிக் கோலத்தை என் கண்களால் பார்க்க வேண்டும். இது நிறைவேறாது போகலாம். நண்பி, நான் இறந்தால் என் கண்களை பார்வை இழந்த ஒரு போராளிக்குப் பொருத்தச் சொல்லுங்கள். அதன்மூலமாவது என் தமிழீழத் தாயின் சுதந்திர விழாவைக் காணுவேன்.

இப்படிக்கு
துளசிரா (கப்டன் துளசிரா)

அலசுவது—இராஜதந்திரி

# எதிர் நீச்சலுக்கு தயாராகவேண்டிய சந்திரிகா

## இரு தரப்புக்குமிடையே உடன்பாடு காணமுடியாத பாதைத் திறப்பு விவகாரம்

சந்திரிகாவின் அரசு தற்போது பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்நோக்கியிருக்கக் காணப்படுகின்றது.

முன்னைய அரசின் குறைபாடுகள், மோசடிகள் குறித்து ஆராய ஆணைக்குழுக்களை நியமிப்பதில் சந்திரிகா அரசு பெரும் ஆர்வங்காட்டி வருகின்றது.

ஆயினும் நாட்டின் புதிய பொருளாதாரக் கொள்கை, மற்றும் தற்போதைய அரசியல் நிலவரம் என்பன தொடர்பாக ஒரு மந்தகதியிலான போக்கில் ஆட்சியாளர்கள் சென்று கொண்டிருப்பதனையே காணமுடிகின்றது.

விலைவாசி உயர்வு, வேலை நிறுத்தங்கள் என்பன குறித்த தகவல்களே இன்று நாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கக் காணப்படுகின்றன.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பலவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன. சிலவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் விலைவாசி உயர்வுகள் விரிவடைந்து 'பட்டினிப் படலம்' ஒன்றை எதிர்கொள்ள நேரிடுமோ என்ற பீதி நாட்டுமக்களிடையே காணப்படுகின்றது.

சந்திரிகா அரசு திறந்த பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து அமுல்நடத்தப் போவதாக உறுதியளித்துள்ளது. அத்துடன் நாட்டில் பலபகுதிகளில் காலநிலைச் சீர்கேடு காரணமாக விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டமை, உல சந்தையில் சில உணவுப் பொருட்களின் விலை உயர்வு போன்றனவே இலங்கையிலும் பொருட்களின் விலைகளை உயர்த்தி விட்டுள்ளன என்று அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இருந்தபோதிலும் புதிய ஆட்சியாளர்கள் ஆணைக்குழுக்கள், விசாரணைக் கமிட்டிகளை அமைப்பதில் காட்டும் வேகமும், தீவிரமும் நாட்டின் பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் மிகவும் மெதுவான போக்கைக் கொண்டிருப்பதனையே அறியமுடிகின்றது.

பொருளாதார ரீதியிலான சிக்கல்களை தகுந்த வகையில் கையாள மாற்றுத் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்த வேண்டிய தன்மையே இன்று இலங்கையில் தேவைப்படுகின்றது.

வேலைநிறுத்தங்கள் குறித்து அரசு பீதி கொண்டிருக்கக் காணப்படுகின்றது. வேலை நிறுத்தங்கள் ஏற்படுத்தும்போது நிலைமைகளைக் கையாள விசேட பொலிஸ் படைப்பிரிவொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த 17 வருடகால ஆட்சி பல்வேறு குளறுபடியான தன்மைகளைக் கொண்டிருந்தது. ஆயினும் தொழில் துறையில் பல்வேறு மாற்றங்களை முன்னைய ஆட்சியாளர்கள் கொண்டுவந்திருந்தனர்.

வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவில் இருந்தன. தொழிற்சாலைகள், சுதந்திர வர்த்தக வலயங்கள் என வேலைவாய்ப்பு வசதிகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் புதிய ஆட்சியாளர்கள் ஒரு விரிவான பொருளாதாரத் திட்டத்துடன் கூடிய அரசியல் சூழ்நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாகவே இருக்கின்றனர்.

பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் என்பன இலங்கையில் இன்று ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்திருக்கக் காணப்படுகின்றன.




"வடபகுதி எவ்வளவு தூரம் இராணுவமயப்படுத்தப் பட்டுள்ளதென்பதையே ஆனையிறவுப் பாதை திறப்பது குறித்த விடயம் புலப்படுத்துவதாக இருக்கின்றது."

ஒன்றில் ஏற்படும் தாக்கம், மற்றையதில் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

கடந்த ஆட்சியில் பொருளாதாரக் கொள்கை விரிவான முறையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் அப்பொருளாதார நடைமுறையின் பலாபலன்களை நாடு முற்று முழுதாக அனுபவிக்க முடியாத சூழ்நிலையை வடக்கு-கிழக்கின் முடிவற்ற யுத்தம் உருவாக்கி விட்டிருந்தது.

பொருளாதார ரீதியாகக் கிடைத்த இலாபங்கள், வருவாய்கள் என்பவற்றைவிட பன்மடங்கு தொகையை முன்னைய ஆட்சியாளர்கள் போர்ச் செலவீனங்களாக 'தாரைவார்த்து'க் கொண்டிருந்தனர்.

வருடா வருடம் வரவு-செலவுத் திட்டத்தின்போதுகூட பெருமளவு பணம் பாதுகாப்புச் செலவீனங்களுக்காகவே ஒதுக்கப்பட்டு வந்தது.

புதிய ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்குப் பிரச்னையையே இந்நாட்டின் முக்கிய பிரச்னையாகக் கருதுகிறார்கள். இப்பிரச்னை தீர்க்கப்பட்டால் நாட்டின் ஏனைய பிரச்னைகளை இலகுவாகக் கையாளலாம் என்ற நோக்கத்தில் ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

ஆனால் நாட்டில் ஏற்படக் கூடிய பொருளாதார ரீதியிலான பிரச்னைகளும் சாமான்யமானவையல்ல. அப்பிரச்னையும் பெரும் நெருக்கடிகளைக் கொண்டுவரக் கூடியவை என்பதனையே விலைவாசி உயர்வு, வேலை நிறுத்தம் மற்றும் பொருட் தட்டுப்பாடு என்பன குறித்த தகவல்கள் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

இந்நிலையில் 'களி மண்ணால் பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காக மாறிய நிலை'க்கு முகங்கொடுத்த ஒரு சூழ்நிலையிலேயே சந்திரிகா அரசு இருப்பதை உணர முடிகின்றது.

சந்திரிகா அரசு புதிய ஆண்டில் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமரசப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் சந்திரிகா அரசு ஆர்வங்காட்டி வருகின்றது.

அண்மையில் அமெரிக்க டைம் (TIME) சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் ஜனாதிபதி சந்திரிகா, வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் தமக்கிருக்கும் விருப்பத்தை வெளியிட்டிருந்தார். அதில் தெளிவான முறையில் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது குறித்த தமது நிலைப்பாட்டை அவர் விளக்கியிருந்தார்.

இதே 'டைம்' சஞ்சிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனும் சமாதான முயற்சிகளில் தமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார். கூடவே வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, நிரந்தரமான, உறுதியான சமாதானம் ஒன்று ஏற்படுவதற்கு தாம் தடையாக இருக்கப்போவதில்லை எனவும் திரு. பிரபாகரன் தமது பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் அரச தரப்பில் சந்திரிகாவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக ஒரு தீர்வொன்றைக் காண்பதில் தமக்குள்ள விருப்பத்தை கருத்தொருமித்த கண்ணோட்டத்துடன் வெளியிட்டிருப்பதனையே இருவரது டைம் (TIME) பேட்டிகளின் மூலம் அறியமுடிகின்றது.

இருந்தபோதிலும் இருசாராரும் தமக்கிடையே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தி பரஸ்பர விசுவாசத்தைக் கட்டியெழுப்புவதற்கு இராணுவ ரீதியிலான கூட்டமைப்பே ஓர் இடைஞ்சலாக இருப்பதையே உணரக் கூடியதாக இருக்கின்றது.

இருசாராருமே இராணுவ ரீதியாகத் தம்மைக் கட்டியெழுப்பியுள்ளனர். இந்நிலையில் அரசியல் ரீதியான பலத்தைவிட இராணுவரீதியாக இருசாராரும் பலமடைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

எனவே ஒரு நிரந்தர சமாதானத்தை நோக்கிய அணுகுமுறைகள் அரசியல் ரீதியாகப் பலமடைவதற்கு இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளை இரு தரப்பினருமே கைவிட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

அரச தரப்பும், விடுதலைப் புலிகள் இயக்கமும் தத்தமது இராணுவ ரீதியிலான நிலைப்பாடுகளில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதனையே பரிசுத்த பாப்பரசரின் விஜயம் தொடர்பாக ஆனையிறவு பாதையைத் திறந்து விடுவது குறித்த விவகாரம் விளங்குகின்றது.

வடபகுதி கத்தோலிக்க மக்கள் கொழும்பு வந்து பரிசுத்த பாப்பரசரைத் தரிசிக்கும் வகையல் ஒரு பாதுகாப்பான பாதையைத் திறக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் படையினரோ அல்லது புலிகளோ இவ்விவகாரத்தில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரமுடியாதவர்களாக இருந்தனர்.

ஆனையிறவுப் பாதை வடக்கே யாழ்குடாவை நாட்டின் பெருநிலத்துடன் இணைக்கின்றது. ஆனால் இப்பாதையும் அதனை அண்டிய பிரதேசமும் ஒரு யுத்த வலயமாகவே காணப்படுகின்றது.

இப்பாதையைத் திறந்து விடுவதற்கு பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க சம்மதித்திருந்தார். ஆயினும் ஆனையிறவு ஊடாகச் செல்லும் அனைத்து வடபகுதிப் பயணிகளும் படையினரால் சோதனைக்குள்ளாக்கப்படுவார்கள் என்று ஜெனரல் வணசிங்க நிபந்தனை விதித்திருந்தார்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆனையிறவுப் பதையைத் திறப்பதனால் அதனூடாகச் செல்லும் பயணிகள் சோதனையிடப்படலாகாது என்று தமது தரப்பில் நிபந்தனை விதித்திருந்தனர்.

தென்னிலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை கருத்திற்கொண்டே வடபகுதியிலிருந்தும் ஆபத்துக்கள் வந்துவிடக் கூடாது என்ற ரீதியில் ஜெனரல் வணசிங்க தமது தரப்பு நிபந்தனையை வலியுறுத்தியிருந்தார்.

மறுபுறத்தே யுத்தநிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மக்கள், படையினரால் தொடர்ந்து சோதனைக்குள்ளாக்கப்பட்டு, கெடுபிடிகளுக்கு ஆளாகக் கூடாது என்ற ரீதியில் ஆனையிறவில் சோதனைகளைத் தவிர்க்க வேண்டுமென்று புலிகள் தமது நிபந்தனையை வலியுறுத்தியிருந்தனர். கூடவே படையினர், மக்களின் நடமாட்டத்தைப் பயன்படுத்தி வடக்கே மேலும் முன்னேறலாம் என்ற பயமும் அவர்களிடமுண்டு.

ஒருபொதுவான நிலையில் இருந்து நோக்குகையில், இரு தரப்பினரும் வெளியிட்டுள்ள நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாகவே இருக்கின்றன.

ஆயினும் ஒரு பாதுகாப்பான பாதையை திறப்புது தொடர்பாக எந்தவகையிலும் ஒரு வெற்றிகரமான இணக்கப்பாட்டை இருசாராரும் எட்டவில்லை என்பதும், வெறுமனே வாயளவில் இரு தரப்பினரும் தமது நிபந்தனைகளை வெளியிட்டதோடு நின்றுவிட்டனர் என்பதே உண்மையாகவுள்ளது.

அரச தரப்பின் உயர்மட்டமோ, அல்லது இலங்கையின் கத்தோலிக்க மதபீடத்தின் உயர்மட்டமோ பரிசுத்த பாப்பரசரின் வருகை குறித்த விடயத்தில் வடபகுதி பயணிகளுக்கான ஒரு பாதுகாப்பான பாதையை திறப்பதில் எந்தவொரு வகையிலும் பரந்துபட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கவில்லை.

யுத்தப் பிரதேசத்தில் இரவு, பகலாக ஒருவரது நடமாட்டத்தை மற்றொருவர் கண்காணித்துக் கொண்டிருக்கும் நிலைமையே படையினர், மற்றும் புலிகள் தரப்பில் காணப்படுகின்றது.

இருசாராரும் தத்தமது கேந்திரப் பகுதிகளில் மாற்றங்களையோ, அல்லது நகர்வுகளையோ இலகுவில் ஏற்படுத்துவார்களென எதிர்பார்க்க முடியாதென்பதனையும், வடபகுதி எவ்வளவு தூரம் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதென்பதனையுமே ஆனையிறவுப் பாதை திறப்பது குறித்த விடயம் புலப்படுத்துவதாக இருக்கின்றது.

அரச தரப்பினரோ அல்லது புலிகளோ இப்பாதை திறப்பு விடயத்திலேயே ஓர் உடன்பாட்டுக்கு வர முடியாத நிலையில், ஏனைய சிக்கலான அரசியல் விடயங்களில் எவ்வளவு தூரம் வெற்றிகரமான முன்னேற்றங்களை அடைவார்கள் என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது.

தென்னிலங்கையில் பொருளாதாரச் சிக்கல்கள் துளிர்விட ஆரம்பித்துள்ளன; வடக்கு, கிழக்கு பிரச்னை ஒரு கெடுபிடியான தன்மையில் தொடர்ந்து இருக்கின்றது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா ஒரு பெரும் எதிர்நீச்சலுக்குத் தயாராக வேண்டியுள்ளார் என்பது மட்டும் நாடறிந்த உண்மையாக இருக்கின்றது.

# கிரைம் டயரி



# 1916 மே பீப்பாய்க்குள் பிணங்கள்

**உலக அரங்கில் நடைபெற்ற முக்கியமான கொலை முயற்சிகள், கொலைகள் பற்றிய விபரங்களை சுவையாக—சுருக்கமாக உங்களுக்கு தரப்போகிறோம். தொடர்ந்து வாசியுங்கள்.**

## ஏலம்போன வீடு

அது ஹங்கேரி நாட்டின் தலைநகரான புடாபெஸ்ட் அருகேயுள்ள சிங்கோட்ட என்னும் சிறிய கிராமம்.

பனி மெல்ல மெல்ல விலகிக்கொண்டிருந்த 1916 மே 16ம் திகதி காலையில் அந்த பழைய வீட்டைச் சுற்றி பலர் கூடத் தொடங்கிவிட்டார்கள்.

மிகப் பழைய வீடு. அருகிலே ஒரு தொழிற்பட்டறை. அதுவும் வீட்டோடு சேர்ந்ததுதான்.

நீதிமன்ற அலுவலர்களும், பொலிசாரும் சுறுசுறுப்பாக வந்திறங்கியது எந்த வழக்கையும் விசாரிக்கவல்ல...........

அந்த வீட்டை ஏலத்தில் விற்க!

ஏலத்தில் குறைந்த விலையில் வீட்டைப் பெற்றுக்கொள்ள வந்தவர்களுக்கு நடுக்கம்.

குளிரால் வந்த நடுக்கமல்ல- அந்த பழைய வீடு இருந்த நிலை பயங்கரமாகத் தெரிந்தது; திகில் படங்களில் வரும் பேய் வீடு மாதிரித் தெரிந்தது; அதுதான் நடுக்கம்.

மெல்ல நழுவிச் சென்றுவிட்டார்கள். ஒரே ஒருவர் மட்டும் தைரியமாக முன்வந்தார். அவர் பெயர் இஸ்ட்வான் மொல்னார்.

ஏலத்தில் எடுத்த வீட்டில் தொழிற்பட்டறையும் இருந்தது அவருக்கு வசதியாக தெரிந்தது. இரும்பு பட்டறை நடத்தும் திட்டத்தோடு குறைந்த விலையில் வீடு கிடைத்த மகிழ்ச்சியும் சேர்ந்துகொள்ள இஸ்ட்வான் மொல்னார் பாடு கொண்டாட்டமாகிவிட்டது.

புதர் மண்டிக்கிடந்த வீட்டு வளவினை படு வேகமாக துப்பரவு செய்துவிட்டார்.

அடுத்தது தொழிற் பட்டறை! கதவைத் திறந்தார்.

உள்ளே இரும்புத் தகடுகள் பல அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

மேலும் மகிழ்ச்சி. ஓசியில் இரும்பும் கிடைத்தால் தொழிலுக்கு லாபம்தானே!

இரும்புத் தகடுகளை ஒரு புறமாக எடுத்து அடுக்கத் தொடங்கியவர் கண்ணில் பட்டன சில பீப்பாய்கள். அவை இரும்புத் தகடுகளின் கீழே இருந்தன.

அசைத்துப் பார்த்தார். அசைக்க முடியவில்லை! இது தனித்து செய்யக்கூடிய காரியமல்ல. உதவிக்கு ஆட்கள் தேவை என்று நினைத்தார்.

இன்னொரு நினைப்பும் எழுந்தது. 'அப்படி என்னதான் இதற்குள் இருக்கிறது? ஒருவேளை புதையல் ஏதாவது........?'

நினைக்க நினைக்க ஆசை நெஞ்சில் அலைமோதியது. பொறுத்தது போதும். உடைத்துப் பார்த்து விடலாம். ஒரு பீப்பாயை இரும்புத் தகட்டால் ஓங்கி ஒரு போடு போட்டு உடைத்தார்.

## உள்ளே பிணம்

'டமால்' உடைந்துவிட்டது. உள்ளே எட்டிப் பார்த்தார். உடல் முழுக்க 'ஷாக்' அடித்தது மாதிரியான திடுக்...திடுக்...

உள்ளேயிருந்தது

ஒரு நிர்வாணப் பெண்!

உயிர் படு நிச்சயமாய் பிரிந்திருந்தது!!

கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. பொலிசாருக்கு தகவல் பறந்தது.

ஏனைய பீப்பாய்களுக்குள்ளும் பிணங்கள் இருக்கலாமோ? பொலிஸ் சந்தேகப்பட்டது.

பீப்பாய்கள் உடைக்கப்பட்டன. பொலிஸ் நினைத்தது மெத்தச் சரி!

சகல பீப்பாய்களிலும் சடலங்கள்! எல்லாமே பெண்களின் சடலங்கள்!

உயிரும் இல்லை! துணியும் இல்லை!

பொலிஸ் உஷாரானது. விசாரணை முடுக்கிவிடப்பட்டது.

"பல வருடங்களுக்கு முன் ஒரு நபர் இந்த வீட்டில் இருந்தான். நாங்கள் பார்த்திருக்கிறோம்"

என்றனர் சிலர்.

"நல்லதாய் போச்சு. யார் அவன்?"

"தெரியாது! யார் என்று மட்டும் தெரியாது"

என்றனர் அவர்கள். பொலிசுக்கு ஏமாற்றம்.

## யார் கொலையாளி?

துப்பறியும் பொலிஸ் அதிகாரி பியலோகோட்சி வழக்கை பொறுப்பேற்றார். அவர் திறமைசாலி.

கொலையான பெண்கள் அழகான இளம் பெண்கள்!

கொலைக்கு காரணம் காதலும் காமமும். அல்லது காமம் மட்டும்.

காணாமல் போனோர் பட்டியலை எடுத்து துருவினார் அதிகாரி.

அதில் ஒரு பெண் அன்னா நெமாக் வயது 36. ஐந்து வருடங்களுக்கு முன்னர் காணாமல் போய்விட்டாள்.

அவளது வீட்டுக்குப் போனார் அதிகாரி. துணிப் பெட்டி இருந்தது. கொட்டிக்கிளறினார். ஒரு பத்திரிகை கண்ணில் பட்டது.

ஒரே ஒரு பத்திரிகை மட்டும் எதற்கு பெட்டியில் பத்திரமாகக் கிடக்கிறது? கவனமாய் பத்திரிகையை தனது எக்ஸ்ரே கண்களால் ஆராய்ந்தார்.

ஒரு விளம்பரம் கண்ணில்பட அதிகாரியின் மூளையில் உறுத்தல். கூர்ந்து படித்தார்.

## ஏமாற்றம்

அது ஒரு மணமகள்தேடும் விளம்பரம்.

"நான் மனைவியை இழந்தவன். எனக்கு ஒரு துணை தேவை. விதவை என்றாலும் சம்மதம். திருமணமாகாத பெண் என்றாலும் தொடர்பு கொள்ளலாம்,"

என்றிருந்தது. விளம்பரத்தில் அதைக் கொடுத்தவரின் முகவரி இல்லை. தபால்பெட்டி இலக்கம் மட்டுமே இருந்தது. சந்தேகம் வலுத்தது. நகர தபாலகத்தில் விசாரிக்க விளம்பரம் கொடுத்தவர் பெயர் எல்மோர் என்று மட்டும் அறிய முடிந்தது.

பத்திரிகை அலுவலகம் சென்று முதல் விளம்பரம் வந்த காலத்திற்குரிய பத்திரிகைகளை அதிகாரி புரட்டிப் பார்த்தார்.

அதே போன்ற விளம்பரங்கள் 2 வருடத்திற்கு தொடர்ந்து வெளியிடப்பட்டிருந்தன. விளம்பரம் கொடுத்தவரின் பெயர் மட்டும் அடிக்கடி மாறியிருந்தது.

விளம்பரக் கட்டணம் எவ்வாறு செலுத்தப்பட்டது? அதிகாரி விசாரித்தார். நேரில் செலுத்தப்பட்டது. ஒருமுறை மட்டும் தபால் கட்டளையாகச் செலுத்தப்பட்டது.

தபாற் கட்டளை விபரத்துடன் தபாலகம் சென்றார் அதிகாரி. அங்கு முகவரி இருந்தது. அதிகாரிக்கு படு சந்தோசம்.

முகவரியை தேடிப் பார்த்தார். ஆனால் கொலையாளி புத்திசாலி! போலி முகவரி கொடுத்திருந்தான்.

அதிகாரிக்கு ஏமாற்றம்! ஆனாலும் சளைக்காமல் யோசித்து ஒரு காரியம் செய்தார்.

தபாற் கட்டளையில் இருந்த கையொப்பத்தை பத்திரிகையில் வெளியிட்டு தகவல் தெரிந்தோரின் உதவி கோரினார்.

## கைதிக் காதலன்

முயற்சி பயன் தந்தது. ரோசா டி.யோசி என்ற பெண், அதிகாரியைத் தேடி வந்தாள். தன்னுடைய முன்னாள் காதலனின் கையொப்பமே அது என்று கூறினாள்.

ஒரு கடிதத்தையும் நீட்டினாள்.

"அன்பே ரோசா, நான் இப்போது யுத்தக் கைதி. உன்னால் முடிந்தால் உடுப்புகள் அனுப்பிவை. வந்து சந்திக்கிறேன். உன்னவன்-பெலா கிஸ்."

என்று கடிதத்தில் இருந்தது. 1914 அக்டோபரில் எழுதப்பட்ட கடிதம் அது. கடிதத்தில் இருந்த கையொப்பமும் தபாற்கட்டளை கையொப்பமும் கச்சிதமாகப் பொருந்தி வந்தது.

விபரங்கள் வெளியாக மேலும் பல பெண்கள் பெலா கிஸ் பற்றிய தகவல்களை கொடுத்தார்கள். அவனது புகைப்படமும் கிடைத்தது.

பெலா கிஸ் பெண் ஆசை உள்ளவன். தினம் ஒரு பெண் வேண்டும். விபச்சார விடுதிகளுக்கு தினசரி செல்ல பணம் வேண்டும். அதனால் சொத்து வசதியுள்ள பெண்களை விளம்பரம் போட்டு பிடித்தான். சொத்துக்களை சுருட்டியபின் அவர்களது கதையை முடித்தான் என்ற விபரமும் கிடைத்தது.

குற்றவாளி யார் என்று தெரிந்துவிட்டது. ஆனால் முடிவு ஏமாற்றம்!

காரணம் குற்றவாளியான பெலா கிஸ் யுத்தக் கைதியாக இருக்கும்போதே இறந்துவிட்டான் என்று தகவல் கிடைத்தது. மேலும் சிலர் அவனை அமெரிக்காவில் கண்டதாக கூறினார்கள்.

குற்றவாளி யார் என்று தெரிந்துவிட்டது. குற்றவாளி என்ன ஆனான் என்பது மட்டும் மர்மமாக நீடிக்கிறது.

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## நீரிழிவு நோயும் உணவுக் கட்டுப்பாடும்

நீரிழிவு நோயாளர்களுக்கு கொடுக்கப் பட்டுவரும் மருந்துகள் மூலம் மாத்திரம் அந்நோயைக் கட்டுப்படுத்திவிட முடியாது. அந்நோயாளர்களுக்கு சிபார்சு செய்யப்படும் மருந்துகளுடன் உணவுக் கட்டுப்பாட்டையும் வலுவாக கடைப்பிடிப்பதன் மூலமுமே அந்நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். இவ்வாறு வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.



**நீரிழிவு நோயாளர் முழுமையாக தவிர்க்க வேண்டிய ஆகாரங்கள்:**

- மாப்பொருள் கலந்த உணவு வகைகள்
- கிழங்கு வகைகள்
- சாம்பல் வாழை
- பூசணி
- ஈரப் பலாக்காய்
- கரட்

**அளவாக உட்கொள்ளவேண்டிய ஆகாரங்கள்:**

- தானியப் பொருள் கலந்த உணவுகள்
- பாண் 3/4 அங்குல கன அளவு அல்லது மூன்று செதில் பாண் துண்டுகள்
- சிறு கிண்ணத்தின் அளவைக் கொண்ட சோறு.
- பருப்பு,கௌபி, பாசிப்பயறு, போஞ்சி.
- கோதுமை மா கலந்த சிறிதளவு பண்டங்கள்
- அரிசி மா கலந்த சிறிதளவு பண்டங்கள், அல்லது மூன்று அப்பம், அல்லது மூன்று இடியப்பம் அல்லது சிறிதளவு பிட்டு அல்லது சிறிதளவு ரொட்டி.
- ராபு, நோக்கல் போன்ற காய்கறிகள் சிறிதளவு.

**தாராளமாக உட்கொள்ளக்கூடிய ஆகாரங்கள்:**

- வெண்டி, பீர்க்கு, புடோல், முருங்கை, பாகற்காய் போன்ற காய்கறிகள்
- கருவாடு, புதிய மீன் வகைகள்
- கோழியிறைச்சி, ஆட்டிறைச்சி
- கீரை வகைகள் போன்றவைகளாகும்.

## எழுபதில் பயம் ஏன்?



70 வயதைத் தாண்டியவர்களின் உதிரத்தில் காணப்படும் கொலஸ்ட்ரோல் (கொழுப்பு) அவர்களின் இருதயதுக்கு எந்த வழியிலும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை யென மருத்துவ ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

99% வயோதிபர்களைக்கொண்டு கோல் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடத்தப் பட்ட பரிசோதனையின் போதே இவ் உண்மை தெரிய வந்ததாக அப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித் துள்ளனர்.

மேலும் இதுபற்றி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் வயோதிபர்களின் உதிரத்தில் கலந்து காணப்படும் கொலஸ்ட்ரோல், அவர்களின் இருதயத்தை பாதிக்காமல் இருப்பதற்கு, அக்காலப் பகுதியில் அவர்களின் உடலில் சுரக்கப்பெறும் எதிர் இரசாயனம் காரணமாக இருக்கக் கூடும் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இது பற்றிய தீர்க்கமான காரணத்தை அறிந்துகொள்ளும் பொருட்டு மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுதல் அவசியமென சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இவர்கள் ஊமைகளா?

பிறப்பிலே செவிடானவர்களுக்கு சூழலில் ஒலிக்கப்படும் சத்தத்தை உணர முடியாதிருப்பதாலேயே அவர்கள் உச்சரிப்புக்கான வார்த்தைகளைத் தெரியாதிருந்து வருகின்றனர். இதன் காரணமாகவே இவர்கள் தமது உணவுகளை சைகைகள் மூலமும் சத்தத்தின் மூலமும் வெளிப்படுத்தி வருகின்றனரே தவிர இயற்கையான புலனமைப்பின்படி அவ்வாறானவர்கள் ஊமைகள் அல்ல என ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன.

குறைந்த உறுப்பினர்களைக் கொண்டு குறைவான பேச்சுப் புழக்கத்தைக்கொண்ட குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள் பேச்சு திறனையடைய நீண்டகாலம் செல்வதையும் அதிக உறுப்பினர்களைக் கொண்ட அதிகளவு பேச்சு வழக்கம் கொண்ட குடும்பத்தை சார்ந்த குழந்தைகள் குறுகிய காலத்திலேயே பேச்சுத் திறனை அடைந்து விடுவதையும் நாம் இதற்கு உதாரணமாக கொள்ளலாம்.

இவற்றைப்போல் பிறப்பிலே ஊமையானவர்களுக்கு செவிப் புலன்கள் இயங்கியும் கூட சொற்களின் உட்கருத்தை விளங்கிக் கொள்ளும் திராணியற்று காணப்படுவதால் அவர்களும் தமது உணர்வை சைகை மூலமே வெளிப்படுத்த தலைப்படுகின்றனர்.

## இரசித்தபடி அறுவைச் சிகிச்சை

சத்திர சிகிச்சை நடைபெறும் பொழுது அக்கூடத்திற்குள் சங்கீதம் ஒலிக்க வைப்பதன்மூலம் சத்திர சிகிச்சையில் ஈடுபடும் வைத்தியர்களுக்கு ஏற்படும் மன அழுத்தங்கள் குறைந்து காணப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளன.

இவை குறித்து நியுயோர்க் பல்கலைக் கழகத்தினால் சமீபத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளின்படி மேலும் தெரிய வருவதாவது:

சத்திர சிகிச்சையிலீடுபடும் வைத்தியர்கள் அப்பணியில் ஈடுபடும் தருணம் தாம் விரும்பி இரசிக்கும் பாடல்களை கேட்கும்பொழுது அத் தருணத்தின் சூழ்நிலையில் அவர்களுக்கு அளவான மன ஆறுதலும், உற்சாகமும் கிடைக்கப்பெறுகின்றதெனவும் இதன் நிமித்தம் வைத்தியர்கள் தமது கடமையை மேலும் பொறுப்புடனும், நிதானத்துடனும் மேற்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் ஏற்படுகிறதெனவும் வைத்திய ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது ஒரு புறமிருக்க அமெரிக்க சத்திரச் சிகிச்சை வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ள கருத்துப்படி சத்திர சிகிச்சையின்போது ஒலிக்கப்படும் சங்கீதம் அத் தருணத்தில் வைத்தியர்களுக்கு ஏற்படும் இரத்த அழுத்தம் குறைவதற்கும் நாடித் துடிப்புகளின் வேகம் தணிந்து சமநிலை அடைவதற்கு உறுதுணை புரிந்து வருவதாக குறிப்பிட்டுள்ளது.

சத்திர சிகிச்சையிலீடுபடும் வைத்தியர்கள் விரும்பி இரசிக்கும் பாடல்களை ஒலிபரப்பு செய்வது மிக மிக அத்தியாவசியமானதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## எய்ட்ஸ் எதிர்ப்பில் புதுமை

தற்போது உலகத்தையே அச்சுறுத்தும் நோய் எது? உடனே பதில் சொல்லி விடலாம் எய்ட்ஸ்.

ஜப்பானில் சமீபத்தில் நடத்தப்பட்ட சோதனை ஒன்றில் 764 பேருக்கு எய்ட்ஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கலங்கிப்போன ஜப்பான் அரசாங்கம் எய்ட்ஸ் எதிர்ப்பு பிரசாரத்தில் தீவிரமாக இறங்கியிருக்கிறது.




ஜப்பான் நாட்டு மாணவர்கள் எய்ட்ஸ் எதிர்ப்பு பிரசாரத்தில் ஒரு புதுமையை கையாளுகிறார்கள்.


ஆண் கருத்தடை உறையை தலையில் போட்டுக்கொண்டு வீதிகளில் பிரசாரம் செய்கிறார்கள். வேடிக்கை பார்ப்பவர்களிடம் விசயத்தை விளக்கி நுட்பத்தை, அதாவது எய்ட்ஸ் தடுப்பு நுட்பத்தை சொல்லிக்கொடுக்கிறார்கள்.

# தகவல் பெட்டி

## அய்யோ.... அய்யய்யோ....!

இந்துக்கள் நேர்த்திக்கடன் தீர்க்க தீமிதிப்பது தெரிந்த சங்கதி. சிங்கப்பூரில் உள்ள இந்துக்களும் தீமிதிப்பு திருவிழா ஒன்று நடத்தினார்கள். பலர் தீமிதித்து செல்ல, படத்தில் இருக்கும் ஜாம்பவானும் தீயில் இறங்கினார். மறுநொடியே பாதத்தை பதம்பார்த்துவிட்டது தீ! பதறியடித்து அபயக்குரல் எழுப்பிக்கொண்டு தீயைத் தாண்ட ஓடினார் பாருங்கள் ஒரு ஓட்டம்! அப்போது எடுக்கப் பட்ட தத்ரூப படம்தான் இது. “தனக்கிடா உத்தியோகம் தன் பிடரிக்குச் சேதம்” என்று தெரியாமலோ சொன்னார்கள்....?





## என்ன நடந்து -இப்படி ஆச்சு?

பூகம்ப அதிர்வின்போது பொல பொலவென்று ஆடி உதிரும் கட்டிடமே இதுவென்று நினைக்கிறீர்களா? தப்பு! எந்த பூகம்பத்தையும் அலட்சியமாகச் சந்திக்கும் வகையில் ஜப்பான் கட்டிடக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட கட்டிடமே இதுவாகும். ஜப்பான் தலைநகரான டோக்கியோவின் புறகரில் இக் கட்டிடம் கண்களுக்கு வியப்பாக காட்சி தருகிறது.

## சிறிது ஆனால் வசதி!

விதம் விதமான கார்கள் உலகெங்கும் உலா வருகின்றன. காரில் இருந்தபடியே சிறு கலந்துரையாடல் நடத்திச் செல்லுமளவுக்கு வசதியான நீண்ட கார்கள்கூட வலம் வருகின்றன. படத்தில் பளிச்சென்று சிரிக்கும் பாவை அமர்ந்திருக்கும் காரில் என்ன புதுமை இருக்கிறது என்று நீங்கள் யோசிக்கலாம். உலகிலேயே மிகவும் சிறிய கார் இது. சுவீடன் தயாரிப்பு. எடை 1000 இறாத்தல் மட்டுமே. 2 யார் நீளமான இக்காரை நெரிசல் மிகுந்த சாலைகளில் சுலபமாய் செலுத்தலாம். வாகனங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் இடப் பற்றாக்குறை இருந்தாலும் மெல்ல நுளைத்து நிறுத்தி விடலாம். ‘கடுகு சிறிது காரம் பெரிது.’ கார் சிறிது. கச்சிதமான வசதி பெரிது!




## ஒரு வித்தியாசம்




மற்றவர்களைவிட வித்தியாசமாக வாழவேண்டும் என்று நினைத்த ஸ்வான்கன் என்கிற கிழவரிடமிருந்து ஒரு புதிய காரை விலைக்கு வாங்கிய ஜார்ஜ் என்கிற அமெரிக்கர் எதிர்பாராத விதமாக மரணமடைந்தார். அவரது விருப்பப்படி அவரது காரை புதைத்து, அதன் ஓட்டுநர் இருக்கையில் ஜார்ஜின் சாம்பலையும், காருக்குமேல் அவருடைய இரண்டு ஓட்டுநருக்குரிய தொப்பிகளையும் வைத்தார்கள். இதைப் பார்த்து மற்றவர்கள் கதறி அழுதார்கள். உலகில் காரில் ஒரு கல்லறை அமைவது இதுதான் முதல்முறையாக இருக்கும்.

## கண்டவர் யாவரும் கலங்கி எடுத்தனர் ஓட்டம்







பொதுக் கூட்டங்களுக்கும், விழாக்களுக்கும் அலங்கார வளைவுகள் அமைக்கப்படுவது தற்போது சர்வ சாதாரணம். படத்தில் இருப்பதும் அலங்கார வளைவுதான். ஆனால் அசாதாரணமான வளைவு. நேரத்திற்கு நேரம் தன் தோற்றத்தை மாற்றிக்கொள்ளும்.

வேல்ஸ் நாட்டில் நடைபெற்ற வெல்ஷ் தோட்டத் திருவிழாவில் இந்த வளைவு அமைக்கப்பட்டிருந்தது. இந்த அலங்கார வளைவை நிமிர்ந்து பார்த்தவர்களில் சிலர் அலறியடித்துக்கொண்டு ஓடத் தொடங்கிவிட்டார்கள். உடைந்து விழப்போகிறதோ என்ற பயம்தான் ஓடக் காரணம். பின்னர்தான் தெரிந்தது வித்தியாசமாக அமைக்கப்பட்ட வளைவு என்ற சமாச்சாரம். தானாகவே அடிக்கடி மாறும் வளைவின் மூன்று விதமான தோற்றங்கள் ‘கமராவால்’ பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

30 அடி உயரமான இந்த வளைவை உருவாக்க ஆன செலவு கொஞ்ச நஞ்சமல்ல, 2 1/2 இலட்சம் டொலர்- வேடிக்கை காட்ட விரயமான பணம்.

## இழப்பு

ஒருவர் ஆண்ரூ, மற்றவர் ரிச்சர்ட், இருவரும் இரட்டையர்கள். ஒரே பள்ளி, ஒரே வகுப்பு. பள்ளி கிரிக்கெட் அணியிலும் இருவரும் ஒன்றாய் விளையாடினார்கள். கிரிக்கெட் போட்டியொன்றில் பந்தை அடித்துவிட்டு தடுக்கி விழுந்தான் ஆண்ரூ. எழுந்திருக்கவேயில்லை. சகோதரன் ரிச்சர்ட் (இடதுபக்கம் உள்ளவர்) கதறினான். விதியின் விளையாட்டு. சிறந்த வீரனை இழந்துவிட்டதாக இங்கிலாந்து பத்திரிகைகள் எழுதின.



# மினிசினி

- ரஜினிக்காக 'படைத் தலைவன்' என்ற தலைப்பை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பிலிம் சேம்பரில் பதிவு செய்து வைத்திருக்கிறார் ஆர்.வி.உதயகுமார். இந்தப் படத்தை ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்கும் என்று தெரிகிறது.
- ஆர்.கே.செல்வமணி இயக்கத்தில், விஜயகாந்த் தயாரித்து நடிக்க இருந்த 'மாஸ்டர் நேதாஜி' படம் தற்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
- விஜயகுமார் முக்கிய வேடத்தில் நடிக்கும் 'இளவரசி' படத்தில் இந்துமதி என்ற புதுமுக நாயகி அறிமுகமாகிறார். கதாநாயகனாக ராஜசுந்தர் நடித்துவருகிறார்.
- தமிழில் படங்கள் எதுவுமின்றி, சில இந்திப் படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் கௌதமி தற்போது இரண்டு தெலுங்குப் படங்களில் நடித்து வருகிறார். இவற்றில் ஒரு படத்தில் ஜெகபதிபாபு கதாநாயகனாக நடிக்கிறார்.
- 'ரெயிலுக்கு நேரமாச்சு', 'ஒரு தொட்டில் சபதம்' ஆகிய படங்களை இயக்கியவர் பாரதிமோகன். இவர் தற்போது முரளி கதாநாயகனாக நடிக்கும் 'சந்தனக் கருப்பன்' என்ற படத்தை இயக்குகிறார்.
- கதாநாயகன், வில்லன் என பலர் சினிமாவுக்காக மொட்டை அடித்துள்ளனர். ராம்கி கதாநாயகனாக நடிக்கும் 'சாம்ராட்' படத்தில் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கும் மாஸ்டர் அஸ்வின் என்னும் சிறுவன் மொட்டை அடித்து நடிக்கிறான்.
- ராதாரவியின் 'இளைஞர் அணி' படத்தில் நடித்துள்ள ஹரிஷ் ஒரு திரைப்படக் கல்லூரி மாணவர் ஆவார். 'இளைஞர் அணி'யைத் தொடர்ந்து ஹரிஷ் மூன்று புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.
- மாதுரி டிக்ஷித் - சல்மான்கான் இணைந்து நடித்த 'ஹம் ஆப்கே ஹேன் கோன்' படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தப் படத்தில் பதினான்கு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
- மலையாளத்தில் வெற்றி பெற்ற 'சைன்யம்' தமிழில் 'ஜெய் இந்தியா' என்ற பெயரில் வெளிவருகிறது. இப்படத்தில் உளவாளி வேடத்தில் மோகினி நடித்துள்ளார்.
- இந்தியில் ராம் கோபால் வர்மா இயக்கும் 'ரங்கீலா' படத்திற்கு இசையமைத்து வரும் ஏ.ஆர்.ரகுமான், பிரபல இந்தி இயக்குநர் சுபாஷ் கை இயக்கும் 'ஷிகார்' என்ற புதிய படமொன்றிற்கும் இசையமைக்கிறார்.

## தற்போதைக்கு 5 கோடி

அர்ஜுன்-விஜயசாந்தி ஜோடியாக நடிக்கும் தமிழ் படத்திற்கு இன்னமும் பெயரிடப்படவில்லை. ஆனால் 5 கோடி ரூபா செலவுக்கு பட்ஜெட் போட்டுவிட்டார்கள். கதை-திரைக்கதை இயக்கம் அர்ஜுன். ஒளிப்பதிவு கே.எஸ்.செல்வராஜ். சினிமாஸ்கோப்பில் ஹொலிவூட் படங்களுக்கு நிகராக உருவாக்கப் போகிறார்களாம். பிரபல தயாரிப்பாளர் சுதாகர் ராஜு போதுமானவரை பணம் கொட்ட தயாராக இருக்கிறார். [illegible]





கமல்-கோவைசரளா
படம்-சதிலீலாவதி

புதுமுகம் இந்துஜா, ரம்பா, ஆம்வி
படம்-ஹலோ பிரதர்

## 'சதிலீலாவதி' கதைச் சுருக்கம்!

'சதி லீலாவதி' படத்தில் கமல் கோவை சரளா ஜோடி அசத்தப்போகிறது.

சில காட்சிகளில் மட்டுமே நடிப்பதாக இருந்த கமல் தற்போது படம் முழுக்க ஆக்கிரமித்துவிட்டார். கமல் படமாக மாறிவிட்டது சதிலீலாவதி. படத்தின் கதை பற்றி இயக்குநர் பாலுமகேந்திரா சுருக்கமாய் சொல்லியுள்ள தகவல்: "இவள் ஒரு நவீன சாவித்திரி. கை நழுவிப்போன கணவனை தனது புத்திசாலித்தனமான அதிரடி நடவடிக்கைகளால் திரும்பப் பெறுகிறாள் லீலாவதி. கணவன் ஒரு கோவலன் என்று அறிந்தும், கண்ணீரால் வீட்டை நனைக்காமல் தனது மதியால் சதிசெய்து விதியை வெல்லுகிறாள் லீலாவதி. ஒரு சராசரி குடும்பப் பெண் தன்னை விட்டு விலகிப்போன கணவனை திரும்பி தன்வீட்டிலே வரும்படி செய்கிறாள்.

அதையும் சவால் விட்டுச் சாதிக்கிறாள். இதை வைத்து கதை உருவாக்கப்பட்டுள்ளது. பெண்களுக்குத் தன்னம்பிக்கை தரும் படமாக அமையும்.

கோவைத் தமிழ் பேசி நகைச்சுவையால் குலுங்கவைக்கப் போகிறார் கமல். பாலுமகேந்திரா பெரிய நம்பிக்கையோடு படப்பிடிப்பில் இருக்கிறார் என்று தெரிகிறது.

## கூட்டுக் குடும்பம்

பிரபு கதாநாயகனாக நடிக்கும் 'பெரிய குடும்பம்' படத்தின் கதை கூட்டுக்குடும்ப பந்தைப் பற்றியதாகும். பிரபுவுக்கு ஜோடியாக ரஞ்சிதா-வினிதா நடிக்கும் இப்படத்தில் விஜயகுமார், லட்சுமி, கல்யாண குமார், ரேகா, மனோரமா, சத்தியப்பிரியா, விஜயசக்ரவர்த்தி, விசித்ரா, கவுண்டமணி, செந்தில் என ஒரு நட்சத்திரப் பட்டாளமே நடிக்கிறது. 'நாட்டாமை' வெற்றிப் படத்தை இயக்கிய கே.எஸ். ரவிக்குமார் முக்கிய வேடமொன்றில் நடிப்பதுடன், இப்படத்தை இயக்குகிறார்.

## டிஸ்கோவின் திறமை

நடிகைகளில் வெறி ஆடக்கூடிய நடிகை யார் தெரியுமா? கவர்ச்சி நடனமாடும் டிஸ்கோ சாந்திதான். ஒரு கன்னடப்படத்தில் நடிப்பதற்காக இவர் லோரி ஓடப் பழகிக் கொண்டாராம்.

## ராஜா உள்ளே ராணி வெளியே

சஞ்சய் தத்- இந்தி திரையுலகில் வருங்கால சிறைக்கும் [illegible] உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. அவரது ரசிகர்கள் ஆடிப் போய்விட்டார்கள். ஆனாலும் அரசும், நீதிமன்றமும் வெளியே விடமாட்டோம் என்று பிடிவாதமாக இருக்கின்றன. 'கல்நாயக்' படத்தில் வில்லத்தனமான ஹீரோவாக வந்தார் சஞ்சய்தத். உண்மையாகவே அவர் அப்படித்தான் என்று நம்புகிறது இந்திய உளவுத்துறை! [illegible]



ஜூகி சாவ்லா



விஜயசாந்தி-கார்த்திக்
படம்-மிஸ்டர் மகாராணி



சஞ்சய்தத்-ஐஸ்வர்யா ராய்

## மீன் வளர்க்கிறார்

நடிகைகள் நாய், பூனை, குரங்கு, கிளி, லவ்பேர்ட்ஸ் வளர்த்து வருவது தெரிந்த சங்கதி. சரண்யா மீன் வளர்த்து வருகிறார். இவரிடம் சுமார் நான்கு மீன் தொட்டிகளில் விதவிதமான மீன்கள் இருக்கின்றன.

லேடீஸ் ஸ்பெசல்

# அ ழ கு க் கு றி ப் பு க ள்

# முக அழகை மெருகூட்ட கை கொடுக்கும் யோசனைகள்

ருக்கா—நாதன்



**மாஸ்க்–** 'மாஸ்க்' என்ற ஆங்கிலச் சொல் எந்த வகையிலும் புதுமையானதல்ல. பண்டைக் காலத்திலிருந்தே தங்கள் முகங்களை அழகுபடுத்துவதற்கு பயன்படுத்திய **முகக்காப்பு** முறையே இன்று 'மாஸ்க்' என்ற பெயருடன் விளங்குகிறது.

பண்டையகாலப் பெண்கள் ஒரு வகைக் களிமண்ணை சுத்தமான ஊற்று நீருடன் கலந்து களிம்பு போலாக்கி தங்கள் முகத்தில் தடவி காப்பு போல் ஒட்டவைத்துக் கொள்வார்கள். இதனால் முகத்திலுள்ள தசைகள் வலுவடைவதுடன் புதுப் பொலிவையும் பிரகாசத்தையும் முகம் பெறுகிறது.

இதுவே இன்று ஜலோ மெற்றிக்– ஃபேஸ் லிஃப்ட்' (Face Lift) என்ற நவீன பெயருடன் உலவுகிறது.

முகக்காப்பினை முறைப்படி பயன்படுத்தி வருவதனால் உள் அழுக்குகள் வெளியேறவும் கரும்புள்ளிகள்– சுருக்கங்கள் மறையவும், இறந்த தோல்கலங்கள் நீங்கி துரிதகதியில் புதிய தோல் கலங்கள் உற்பத்தியாகவும் வாய்ப்பேற்படுகிறது. முகக்காப்பில் பலவகை உண்டு.

தேர்மல் மாஸ்க் (Thermal Mask) இதனைப் பயன்படுத்துவதன் மூலம் முகத்தில் வெப்பம் அதிகரிக்கிறது. முகத் தசைகள் வலுவடைகின்றன. ஈரப்பசைப் பிடிப்பு உண்டாவதனால் முகம் புதுப்பொலிவினைப் பெறுகிறது.

**இம்முகக்காப்பினைத் தயாரித்துப் பயன்படுத்தும் முறையினைப் பார்ப்போம்.**

1. முகத்தை நன்றாகச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.
2. விட்டமின் ஈ களிம்பு கடைகளில் கிடைக்கும். இதனை முகத்தில் அழுத்திப் பூசிக் கொள்ளவேண்டும்.
3. இது முகத்தில் நன்றாக ஊறியபின்னர் வெதுவெதுப்பான நீரினால் கழுவி விடுங்கள்.

## வறட்சியான சருமம் உடையவர்களுக்கு:

தரமான மூலிகை கிறீம். இதனைக் கொண்டு முகத் தாடைகளின் இருபுறங்களிலும் உள்ள தசையை மேல்நோக்கி அழுத்திக் கொண்டே கண்களைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சுழற்சியாக அழுத்திவிட வேண்டும். பின்பு நெற்றிப் பகுதியினையும் கசக்கி அழுத்தலாம்.

பொதுவாக இவை எல்லாவகையான சருமங்களுக்கும் ஏற்றவையே. முகத்தில் உள்ள சுருக்கம்– சிறப்பாக கண் அருகேயுள்ள சுருக்கம் மற்றும் கருவளையம் நீங்கிவிடும்.

முகத்தில்– அதிலும் மூக்குப் பகுதியிலும் வாய்ப்பகுதியின் கீழ்ச் சருமத்திலும் கரும் புள்ளிகளாக சொரசொரப்பான சருமம் காணப்பட்டால், 'பிளாக் ஹெட்ஸ் றிமூவர்' (Black Heads Remoover) மூலம் அவற்றினை அகற்றிவிடலாம்.

எல்லா வகையான சருமத்திற்கும்

## முகக்காப்பு (Face Pack) தயாரிக்கும் முறை–

முள்தாங்கி மட்டி (களி மண்) - 1 ஸ்பூன்
தேன் - 1/2 ஸ்பூன்
சந்தனம் - 1/2 ஸ்பூன்
சிவப்பு சந்தனம்-1/2 ஸ்பூன்
பன்னீர் - 1 ஸ்பூன்
ஹைட்ரஜன் பெரொக்சைட் - 1 ஸ்பூன்



இவைகளை ஒன்றாகக் கலந்து கலவையை முகத்தின் கீழிருந்து மேல் நோக்கி முகம் முழுவதும் பூசி சுமார் 1/2 மணிநேரம் ஊறவிட்டு பின் குளிர்ந்த நீரில் நன்றாகக் கழுவவும். சுத்தமான துவாயினால் மென்மையாக முகத்தினை ஒற்றி விட்டு, 1/2 ஸ்பூன் முட்டை மஞ்சட் கருவினை தனியே எடுத்து முகத்தில் பூசிவிட்டு பத்து நிமிடங்களின் பின் நன்றாகக் கழுவிவிடவும். ■

# கருதாங்கும் காலத்தில் உட்கொள்ளும் உணவு



**க**ர்ப்பமுற்றுள்ள தாய்மார்களைப் பொறுத்தவரை அவர்கள் தமக்கு மாத்திரமன்றி தனது வயிற்றில் வளரும் குழந்தைகளுக்கும் சேர்த்து உணவளிக்க வேண்டியுள்ளதால் வழக்கத்திற்கு மாறாக அதிகமான உணவை உட்கொள்வது அவசியமென்று அநேகமானோர் கூறிவருவதை நாம் கேட்டிருக்கிறோம்.

ஆனால் கர்ப்பமுற்றுள்ள தாய்மார்களுக்கு அக்காலப் பகுதியில் ஏற்படும் வாய் குமட்டல், வாந்திக்குணம், உணவு வெறுப்புப் போன்ற காரணங்களினால் அதிக உணவைவிட்டு சிறிதளவு உணவைக் கூட சிலவேளை உண்ண முடியாதவர்களாக காணப்படுகின்றனர்.

எனவே கர்ப்பமுற்றுள்ள தாய்மார்களைப் பொறுத்தவரை மூன்றுவேளை ஆகாரம் என்ற நியதியை மாற்றி சிறிய அளவில் ஐந்து அல்லது ஆறுவேளை ஆகார முறையை கடைபிடித்தொழுகுவது சிறந்ததாகும். இவ்வாறு சிறிய அளவில் ஆகாரங்களை உட்கொள்வதன்மூலம் தாயின் உடல் நிலைமை இலகுவாவதோடு ஒழுங்கான ஜீரணத்திற்கு வாய்ப்பளிக்கின்றது. இதன்மூலம் வயிற்றில் உள்ள குழந்தையும் ஆரோக்கியமடைகின்றது.

நள்ளிரவு நேரங்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகாரம் உட்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுதல் சிறப்பாகும். அவ்வாறான நேரங்களில் உண்ணப்படும் ஆகாரங்களினால் நெஞ்சு எரிச்சல், குமட்டல் போன்ற குணங்கள் ஏற்படக்கூடும். ●

# தாய்மார்களுக்கு

## இதோ சில ஆலோசனைகள்

**கு**ழந்தை பிறந்து இரண்டு தொடக்கம் நான்கு வாரங்களுக்குட்பட்ட காலப்பகுதியில் சில குழந்தைகளுக்கு அவர்களின் முகத்தின் இரு புறங்களிலும் சிவந்த நிறமுடைய படையைப் போன்று பத்துக்கள் ஏற்படக் கூடும். இவற்றை நம் நாட்டு தாய்மார்கள் அக்கி அல்லது செங்கிரந்தி எனக் கூறுவது வழக்கமாகும்.

இந்தச் செங்கிரந்தியை கண்டு சில தாய்மார்கள் பதட்டமடைந்த் நிலையில் கண்டு–கேட்ட மருந்துகளை தமது குழந்தைகளுக்கு புகட்டும் வழக்கத்தை கடைப்பிடித்து வருகின்றனர். வைத்திய ஆலோசனையின்றி சிறு குழந்தைகளுக்கு மருந்து மாத்திரைகளை புகட்டவிளைவது பிழையான நடவடிக்கையாகும்.

குழந்தை பிறந்து இரண்டு மூன்று வார காலப்பகுதியில் ஏற்படும் இந்தச் செங்கிரந்தி தோன்றிய வேகத்திலேயே ஒரு சில வாரங்களில் எதுவித மருத்துவமுமின்றி மறைந்துவிடக் கூடியதாகும். இவ்விதம் மறையப்படாத பட்சத்தில் வைத்தியரை அணுகுவது பொருத்தமாகும்.

இவற்றைப்போல் பச்சிளங் குழந்தைகள் மத்தியில் பால் சத்தி ஏற்படுவது (அதாவது பருகிய பால் வாய்மூலம் வெளியேறுவது) பொதுவான நிகழ்ச்சியாகும். இவ்வாந்தியை தாய்மார்கள் இலகுவாக சமநிலைப்படுத்திக் கொள்ள முடியும். பால் அருந்தியவுடன் குழந்தை இவ்வித வாந்தியை எடுக்குமானால் அக்குழந்தை பால் அருந்துவதற்கு முன்பு அதன் வயிற்றில் காற்று நிறைந்திருந்தமையே குழந்தை பாலை வாந்தி எடுப்பதற்கு காரணமாகும். ஆகவே தாய் அக் குழந்தையின் வயிற்றில் உள்ள காற்றை வெளியேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அதற்குத் தாய் செய்யவேண்டியது என்னவென்றால் வழக்கம்போல் குழந்தைக்கு பால் ஊட்டிய பின்பு குழந்தையின் முகம் குப்புறும்படி செய்து, நெடுங்கிடையாக தாயின் மார்போடு அணைத்து அவர்களின் முதுகுப்புறம்– கழுத்திலிருந்து இடுப்புப் பகுதி ஈறாக இலகுவாக அழுத்தி பலதடவைகள் தடவிவிடுவதன் மூலம் குழந்தையின் வயிற்றில் உள்ள காற்றை வெளியேற்றிவிட முடியும்.

சில சமயங்களில் குழந்தைக்கு பால் திட்டு முட்டு ஏற்பட்டு பால் அருந்த மறுக்கக் கூடும். அவர்களின் சுவாசப் பகுதியிலோ அல்லது இருதயப் பகுதியிலோ அல்லது குடல் பகுதியிலோ கோளாறு காரணமாக இவ்வாறு ஏற்படக்கூடும். இந்த அறிகுறிகளுடன் குழந்தையின் வாயிலிருந்து பச்சை நிறமாக வாந்தி வெளியேறுமானால் இக்கோளாறு அதிகரித்துக் காணப்படுகிறது என்பதே பொருளாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் தாமதமின்றி மிக அண்மையில் அமைந்த குழந்தை வைத்திய நிபுணரிடம் சிகிச்சை பெற்றுக்கொள்ளுவது முக்கியமாகும்.

சில பெற்றோர்களின் ஆண் குழந்தைகளுக்கு சொட்டுச் சொட்டாக சிறுநீர் வெளியேற்றம் காணப்படக்கூடும். இதன் மூலம் குழந்தைக்கு அதிக வேதனை ஏற்படாததன் காரணமாக அவர்களும் வலியுறுத்தி விபரிக்காதிருக்கக் கூடும்.

ஆனால் பெற்றோர்கள் இவ் வறிகுறிகள் காணப்பட்டதும் உடனடியாக குழந்தை வைத்தியரை அணுகி ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

திண்ம ஆகாரம் அருந்தும் வரை நாள் ஒன்றுக்கு 6-8 தடவைகள் குழந்தைகளுக்கு மலக்கழிவு நிகழக்கூடும். இவற்றுக்கு கோளாறுகள் காரணம் என்று கருதுவதற்கில்லை.


குழந்தையின் வயிற்றிக்குப் போதிய பால் ஊட்டப்படும்பட்சத்தில் இருந்து விளையாடும் காலம்வரை சுமார் 16-18 மணித்தியாலங்கள் வரை நித்திரையில் ஆழ்ந்து விடுகின்றனர். குழந்தைகள் அடிக்கடி அழுவதற்கும் ஆகாரக் குறைவும் ஒரு காரணமாகும். ●

# நீங்களும் தைத்துப்பாருங்கள் எஸ்—எஸ்

## 3 வயதுப் பெண்பிள்ளைக்கான பொம்மைச் சட்டை

### எடுக்கப்படவேண்டிய அளவுகள்:

**மேல் உடம்பின் நீளம்– 14 அங்குலம்**
**அகலம்– 15–16 அங்குலம்**
**பாவாடையின் நீளம்– 14 அங்குலம்**
**அகலம்– 36+36 அங்குலம்**
**கையின் அகலம்– 20 அங்குலம்**
**நீளம் – 7 அங்குலம்**





### வெட்டும்முறை:

சட்டையின் மேற் பகுதியின் முன்பின் பக்கத்திற்கான 15+15 அங்குல அகலமும் 14 அங்குல நீளமுமான துணியை எடுத்து சமனாக மடித்துக்கொள்வோம். மடித்த அப்பகுதிகளுக்கு A B C D எனக் குறிப்பிடுக. அதன் பின்னர் Aயிலிருந்து 2 1/2 அங்குலம் உள்நோக்கி E எனக் குறிக்கவும். Eயிலிருந்து 3 அங்குலம் அளந்து F எனக் குறிப்பிடவும் Fலிருந்து 3 அங்குலம் கீழ்நோக்கி அளந்து 'ப' வடிவத்தில் கழுத்துப் பகுதியை வெட்டவும். விரும்பினால் பிற்பகுதிக்கு படம் 2ல் காட்டியபடி சிறு அரைவட்டம் வெட்டவும். 'ப' வடிவமும் வெட்டலாம்.

• குறிப்பு: (பின் பக்கத்திற்கு எடுக்கும் அளவில் இருந்து 1 1/2 கூடுதலாக எடுக்க வேண்டும். காரணம் மூடித் திறப்பதற்கு சுலபமாக பட்டின் அல்லது சிப்ஸ் போடுவதற்கு)

முன் பக்கத்திற்கு 3/4 அங்குலம் அல்லது 1 அங்குலமுடைய பேபி றிபன் இரு கலரில் எடுத்து படம் 4ன் வடிவத்தின் முன் பக்கத்தை கவனத்தில் கொண்டு மாறி மாறி பாய் பின்னுவது போன்று பின்னிக்கொண்டு அடுத்த பகுதிகளை மூட்டவும்.




### பாவாடையின் அளவு:

14 அங்குல நீளமும் 36+36 அங்குல அகலமும் கொண்ட சதுரத் துணியினை எடுத்துக்கொள்ளவும். இதன் இரு பக்கத்தினையும் மூட்டிக்கொண்டு லைனிங்குடன் சேர்க்கவும். லையினிங்கை குறைத்து எடுத்தல் போதுமானது. இதற்கான துணி மிகவும் பளபளப்பான துணியாக இருந்தால் அழகினைத் தரும். இதற்கு படம் 4 இனை பார்த்தால் புரியும். அதற்கேற்ப 6 அங்குல நீளமும் 36+36 அங்குல அகலமுமான சதுர 'நெற்' அல்லது 'ஓகன்ரி' துணியினை எடுத்து இரு பக்கங்களையும் மூட்டிவிட்டு கீழ் மடிப்பிற்கு 'தங்கூஸ்நூல்' கொடுத்து மடிப்பினை இட்டால் கீழ் பக்கம் சுருண்டு சுருண்டு அழகாக இருக்கும்.

### கையினை வெட்டும் முறை:

முதலில் படம் 3இனை கவனத்திற் கொள்ளவும். 20 அங்குல அகலமும் 7 அங்குல நீளமுமான இரண்டு துணிகளை எடுக்கவும். எடுத்த அத் துணிகளை சமனாக மடிக்கவும். மடித்த அப்பகுதிகளுக்கு AB CD எனக் குறித்துக்கொண்டு Bயிலிருந்து 2 அங்குலம் பதித்து Fஎனக் குறிக்கவும். F CE பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதியை படத்தில் கவனித்து அதன்படி சரித்து வெட்டவும். கைப் பகுதிக்கு லைனிங் தேவையில்லை. இதற்கு ஓகன்ரி அல்லது நெற்துணி நன்று. கீழ் மடிப்புப் பகுதிக்கு சிறிய லேஸ் வைத்தல் நன்று. லேசினை வைத்துவிட்டு லாஸ்ரிக்போட்டு தைத்தல் சுலபமாகவும் அழகாகவும் இருக்கும். இக் கையினை உடம்புப் பகுதியுடன் பொருத்தும் போது அப்பகுதியில் சிறு சிறு சுருக்கிடவும்.

இவ்வாறு கூறப்பட்டதுபோன்று கவுண் முற்றுப் பெற்றதும் சட்டையின் முன் பக்கத்திற்கு அழகிய 3 பூவினை வைத்து அழகுபடுத்தவும். பூவோடு இரு கலர் பேபி றிபனும் தொங்க விடவும்.

- நாரிப் பகுதி இறுக்கமாக இருந்தால்தான் அழகாக இருக்கும். எனவே அகலமான றிபன் வைத்து தைத்து பின் பக்கத்தில் பூக்கட்டவும்.

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

# முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 21
உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

# காதிலபூ கதை 2

தெரியாத விசயங்களை தெரிந்த மாதிரி கதைவிடும் பழக்கம் சிலருக்கு இருக்கிறதல்லவா? அதுபோல் இரு கதைகள்–

## 'சேக்ஸ்பியர் தமிழர்'

சேக்ஸ்பியர் பற்றி கல்லூரி மாணவர்கள் சிலர் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

"சேக்ஸ்பியர் பற்றி தெளிவான வரலாற்றை அறியமுடியாமல் இருக்கிறது" என்று சொன்னான் ஒரு மாணவன்.

உடனே இன்னொரு மாணவன் "எனக்குத் தெரியுமே; சொல்லவா" என்று கேட்டான்.

"சரி சொல்லடா மச்சி!"

மாணவன் விளக்கினான்:

"திரைகடல் ஓடித் திரவியம் தேடியவர்களில் ஒருவர் சுப்பையர். அவர் இங்கிலாந்துக்குச் சென்று திரும்பிவரும்போது தனது குடுமியை வெட்டிவிட்டு சேக் (கிராப்) வைத்துக்கொண்டு வந்தாராம்.




அன்று முதல் அவரை சேக் சுப்பையர் என்று அழைக்கத்தொடங்கி விட்டார்கள். சுப்பையர் மீண்டும் இலண்டனுக்கு போய் அங்கு நாடகங்கள் நடத்தினார். அப்போது அங்குள்ளவர்கள் சேக் சுப்பையர் என்பதை சேக்ஸ்பியர் என்று உச்சரிக்கத் தொடங்கி விட்டார்கள். அன்று முதல் சேக் சுப்பையர் சேக்ஸ்பியராகிவிட்டார்."

மாணவனின் விளக்கம் புருடா என்று தெரிந்தும் சிரிக்க முடிந்தது சக மாணவர்களால்.

## "கிளியைப் பார்டா"

உலக அழகி கிளியோபாத்ரா ஒரு தமிழ்ப் பெண் என்றார் கவியரசு கண்ணதாசன்.

"எப்படி?"


என்று கேட்டார் நண்பர்.

விளக்கம் சொன்னார் கண்ணதாசன்:

"கிளியோ பாத்ரா தமிழ்நாட்டுப் பெண். அவள் அழகைப் பார்த்தவர்கள் "கிளியைப் பார்டா... கிளியைப் பார்டா" என்று கூறுவார்கள். தமிழ்நாட்டுக்கு வந்த வணிகர்கள் அதைக்கேட்டு, "கிளியைப் பார்டா" என்று உச்சரிக்க முடியாமல் 'கிளியோ பாத்ரா' என்று உச்சரித்தார்கள். அதன்பிறகுதான் கிளியோபாத்ரா கப்பல் மூலம் எகிப்து சென்றாராம்."

சொல்லிவிட்டுச் சிரித்தாராம் கண்ணதாசன்.

# தேன்கிண்ணம்



## கந்தல் சிந்தனை

சோக சஞ்சாரம்
நிரம்பியதான
நீண்ட ஒரு வாழ்வு.
நைந்து போகும்
என் ஹிருதயம்.

விலாசமில்லாத கற்கள்
யார் வீசுகிறார்கள்!?
மண்ணில் 'பூர்வீகம்'
பேசுபவர்கள்
யார் இவர்கள்...!?

இடி இன்று இறங்காதா?
இவர்களின் எண்ணங்களில்.....

நாங்களும் மனிதர்கள்தான்
மறந்துவிட்டனரா!?

ஜாதிகள்; ஜனங்கள்
அவரவர் கிழித்துக்கொண்ட
கோடுகள்.

தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ள
தமது கரங்கள் வரைந்த
விலாசங்கள்.

சவரம் செய்ய வேண்டும்,
கந்தல் சிந்தனைகளை!
கூடவே– அதற்கு
கூந்தல் அமைப்பவர்களையும்.

இஸ்லாஹிய்யா கே. முனாஸ்.

## சாகாவரம்

எனக்குள்ளும்
ஒரு கலிபோர்னியா
காட்டுத்தீ
மகாராஷ்டிராவின்
ஊழிப்பூகம்பம்
பங்காளதேசத்தின்
வடிச்சலில்லா
ஆழி வெள்ளம்
இத்தனைக்கும்
நீ.....?

••

இனியும்
தாங்காது
உனக்காக
மூச்சிழுக்கும்
என்
மூடப்படாத இதயம்
இதழ்களுக்கு
ஸ்பரிசத்தை
கணிப்பிட்டுக் கொடுத்தவளே
ஏன்
எனக்குள் மட்டும்
கண்ணீர்
மின்னேற்றத்தை
கணக்கிட்டு
வைத்திருக்கின்றாய்?

••

ஓட்டை போட
நினைக்காதே
ஏனெனில்
காதல் ஒன்றும்
இதயத்தை அரிக்கும்
கரையான்
அல்ல.

அதுதானடி
ஆயிரம் தாஜ்மஹால்களையும்
ஆக்ராவின்
நாட்டிய
அனார்க்கலிகளையும்
இவ்வுலகுக்கு
அறிமுகப்படுத்திய
கல்லறைச் சிற்பி!

••

பூப்போன்றவளே
என் கவிதைகள்
கனாவில்கூட
உன்னையே
பூஜிக்கும்.........!
அதனால்
கண்ணீரில்
ஒற்றைக் கீதம்
பாடுவதை
நிறுத்திவிட்டு
வந்துவிடு........!
மூங்கில்களிலிருந்து
நாம்
புல்லாங்குழலாகி
புழகாங்கிதம்
அடைவோம்.

••

மறுப்புக்களால்
என் கவிதை
அணுக்களுக்கு
மரண சாசனம்
எழுதுவதை
மறந்துவிடு.

••

தாமதிக்காதே
ஏனெனில்
நாம்
வாழும் நிமிடங்கள்
உத்தரவாதம்
அளிக்கப்படாத
ஊழித்துப்பாக்கிகளின்
வினாடிகள்!
ஒரு நிமிடமாவது
ஒன்றிணைவோம்!
அதுவே
என் கவிதைகளுக்கு
உயிர் அறுந்து
நான்
கல்லறையில் ஊர்வலம்
செய்கின்ற போதும்
உலகில்
அது பெற்ற
சாகாவரமாகலாம்.

••

கிண்ணியா சபறுள்ளா.



## 'பட்ஜெட்' போடுகிறேன்!

1. பட்டணத்தில் நான்வேலை பார்த்த போதும்
பலநூறை வேதனமாய் பெற்ற போதும்,
'பட்ஜெட்'டே போடுகிறேன் மாதா மாதம்
பணத்தேவை முற்றாகத் தீர்ந்த தில்லை!
கட்டிய என் மனைவிக்கு எட்டு நூறு
கருணைமிகு அன்னைக்கு ஐந்து நூறு,
பட்டணத்து வாழ்வுக்கு ஏழுநூறு
பாக்கிசில ரூபாய்கள் (பை)கையில் மிஞ்சும்!.

2. நீளக்காற் சட்டையது முன்னர் உள்ள
நிறம் மங்கிக் கிழிந்திட்ட போதும்; தைத்து
வேலைக்குப் போடுவதென் (ப)வழக்கமாச்சு!
வேறென்ன செய்திடலாம்! உத்தியோகம்,
வாழத்தான் அண்டிடுமா? வயல்கள் தோட்ட
வருமானம் இல்லாத வாரிசாச்சே!
காலத்தை ஓட்டுகிறேன், 'பீ.எம்' என்ற
கௌரவந்தான் வேறெதையும் காணவில்லை!

3. காதலுடன் பழகுகின்ற ஏ.சி.எல்.எம்'
கடைக்குரிய நிர்வாகி 'ரவூப்' மட்டும்,
வேதனையை உணர்கின்றான்! கையில் இல்லா
வேளையிலும் உதவுகிறான்! மற்றோரெல்லாம்
போதனையில் வள்ளல்களே காக்கைகூடப்
புசிக்கின்ற வேளையிலே துரத்த மாட்டார்
ஆதனங்கள் இல்லாத என்னைப் போன்ற
ஆருக்கும் உதவிதர ஆட்கள் இல்லை!

4. கண்டவுடன் பற்காட்டிக் கதைகள் பேசும்
கயவர்களை இனம்கண்டேன்! புவியின்மீது,
உண்டவர்க்கே உபசரித்து உணவு நல்கும்
உளம்பெற்ற மனிதர்களே உலவக் கண்டேன்!
பண்பு மட்டும் இருந்திட்டால் பயனொன்றில்லை
பணம் கையில் இலையென்றால் வாழ்வே தொல்லை
உண்மையிதை உணர்கின்றேன்! மாதா மாதம்
உலகத்தில் நான் 'பட்ஜெட்' போடுகின்றேன்!

அ. கௌரிதாசன்– ஆலங்கேணி கிழக்கு.

## வசந்தமே வா.....

உயிரை அடகு வைத்து
உள்ளத்தைக் கேட்கிறேன்
மறுக்காதே கிளி
நனைகிறது விழி.

நிம்மதியை விற்று உன்
நினைவினை வாங்கி
வாழ்கிறேன் நான்
வசந்தமே வா...

கனவின் மலர்வில்
உன்
காலடி சத்தம்
கேட்குது நித்தம்.

நிழலாய் போன
உன் தரிசனங்களாலே
நெஞ்சோடு யுத்தம்
கண்ணீர் முத்தம்!

காமத்தின் தேடலல்ல
என்
இதயத்தின் பாடல்; அது
அன்பின் ராகம்
ஆத்மாவின் கீதம்.

கே.எம். மர்சூக்
தோப்பூர்.

## வானம் எப்போது வெட்டாரும்?

இடிமழை அடைமழை!
இடைவிடா தொடர் மழை!
குடிமனை உடைதகர்
குளம் வயல் அழிமழை!

இடர்துயர் எனும்கதை
இதுவரை முடிவிலை!
அடயிது மழையிலை!
அழிமதி அழிநிலை!

காடெது மேடெது?
களனிகால் வாயெது?
வீடெது வெளியெது?
வெள்ளமே ஓடுது!

அடுத்தடுத்தகதியாய்
ஆவதேன் நியதியா?
கெடுத்தழித் தோடிடும்
காலமோர் காலனா?

உடுதுணி உலர்பொருள்
உயர்பெறு மணிக்கதிர்

கொடுமழைக் குளிரிலே
கொடுகொடுத் தோடுதே!

மழையினி விலகுமோ?
மண்தரை தெரியுமோ?
பிழையிதால் விளையுமேல்...
பெருகுமெம் பிணங்களே!

எழில்வளம் அழிவுறில்
எவர்சுகம் அடைவரோ?
பொழிமழை விடும்வரை
புலம்பலே தொடர்கதை!

–செ. குணரத்தினம்–



## மக்கள் விருப்பம்

மொழியால்
இரண்டுபட்டு
முதிர்ந்த நிலையில்
போர் முரசம்.

•

விழி பிதுங்க
மக்கள்
வேதனைச் சுமை
தாங்காது–
சமாதான தேவதையை
தரிசிக்க
தவிக்கிறார்கள்.

•

தேசமும்
மக்களும்
ஒரு வித்தியாசமான
திருப்பத்தில்....

நிச்சயமில்லாத
பேச்சில்
சொச்சமாவது
போர் அச்சம்.

•

போர் எழுதுகோலில்
தீர்வு எழுதுமுன்
சமாதான நீரால்
உரிமைத் தாகம்
தீர்க்க–

இலக்குகளிலும்
இதய சுத்தி
இருக்க வேண்டும்
இதுவே–
மக்கள் விருப்பம்.

ஜனன்யா.

# தோல்வி காணா வெற்றி வேள்வி!

## எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்து

எம்.ஜி.ஆர்–மூன்றெழுத்து மந்திரம்.

நடிகன் நாடாள முடியுமா? தொழிலை வைத்து கேலி செய்தார்கள்.

கேலிக்கு காரணம் கேள்வி. கலைஞர் கருணாநிதியிடம் கட்சியின் கணக்குக் கேட்டார் எம்.ஜி.ஆர்.

"என் கேள்விக்கு என்ன பதில்?" கலைஞர் பதில் சொல்லவில்லை. கட்சியை விட்டு நீக்கினார்.

எம்.ஜி.ஆர். கலங்கவில்லை. பால் பாயாசம் சாப்பிட்டார். தனிக்கட்சி தொடங்கினார்.

அ.தி.மு.க. உதயமானது.

"கொஞ்சநாள் கத்துவார்கள் கூத்தாடிப் பயல்கள்" என்றாராம் கண்ணதாசனிடம் கலைஞர் கருணாநிதி.

அவர் கணக்குப் பொய்த்தது. கட்சி வளர்ந்தது. ஆட்சிக் கோட்டையைப் பிடித்தார் எம்.ஜி.ஆர்.

"வெறும் கவர்ச்சி. மக்கள் ஏமாந்து விட்டார்கள். விரைவில் கவர்ச்சி மறையும். ஆட்சி கவிழும்."

அரசியல் விற்பந்நர்கள் வியாக்கியானம் செய்தனர். கனவு முகடுகளில் நின்று கற்பனை நெய்தனர்.

1977ல் ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். சாவை அணைத்து சரித்திர நாயகராகும் வரை 10 ஆண்டுகள் தோல்வியே காணாத முதல்வராக ஆட்சிபீடத்தை அலங்கரித்தார்.

இப்போது ஆந்திர முதல்வராகியுள்ள என்.டி. ராமராவ்கூட தோல்வி கண்டு ஆட்சி இழந்திருக்கிறார்.

ஆனால்– எம்.ஜி.ஆர். வெற்றிக்கு அடையாளமாக விரித்துக்காட்டிய இரட்டை விரலை மடித்துக்கொள்ள மக்கள் அனுமதிக்கவேயில்லை.

ஏனெனில் அவர் மக்கள் திலகம்! இலங்கை இனப்பிரச்சனையில் எம்.ஜி.ஆர். எடுத்த நிலைப்பாடுகள் எல்லோராலும் ஏற்கப்படாமலிருக்கலாம்.

எனினும் அவர் இலங்கைத் தமிழர்களுக்கு தன்னால் இயன்றதைச் செய்தார் என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது.



டிசம்பர் 24 மூன்றெழுத்து நாயகனின் 7வது நினைவுநாள்.

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் அது முடிந்தபின்னாலும் என் பேச்சிருக்கும்" எம்.ஜி.ஆர். படப்பாடல் வரிகளாக இருந்தாலும், இன்று அவை வரலாற்றால் மெய்ப்பிக்கப்பட்டிருப்பது சத்தியம்.



# இந்த வாரம் உங்கள் பலன்

(25.12.94 முதல் 31.12.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வெள்ளி, வியாழன் |
| சிம்மம் | - செவ்வாய் |

★ சந்திரன்– கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக் குழப்பம், பணப் பிரச்சினை. | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | காலை 6 மணி |
| புதன்- பெரியோர் உதவி, துன்பம் நீங்கும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தன விரயம், கௌரவம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- பணக்கஷ்டம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு-தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், மனக்குறை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில்கேடு, கவலை மிகுதி. | காலை 6 மணி |
| சனி- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- துன்பம் நீங்கும், பணவரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- துன்பம் நீங்கும், செய்தொழில் நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| சனி- பெரியோர் நட்பு, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவநிலை. | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| செவ்வாய்- துன்பம் நீங்கும், பணவரவுத்தடை. | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- மனமகிழ்ச்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, மனக்கவலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, காரியம் கைகூடல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனப்போராட்டம், துயர் அதிகம். | காலை 6 மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, பணச்செலவு. | பகல் 12 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | காலை 7 மணி |
| வியாழன்- துன்பம் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பணவரவு, காரியசித்தி. | காலை 6 மணி |
| சனி- பயனற்ற செயல், அலைச்சல். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணவிரயம். | காலை 8 மணி |
| திங்கள்- இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- துன்பம் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | காலை 9 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், பயனுள்ள செயல். | காலை 7 மணி |
| சனி- பெரியோர் சகாயம், மனக்கவலை நீங்கும். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம் -4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பணக்கஷ்டம், காரியத்தடை. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நோக்கம், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| புதன்- முயற்சி தடை, வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| சனி- கௌரவ நிலை, உயர்ந்த வாழ்க்கை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- இனசன விரோதம், வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| வியாழன்- துன்பம் நீங்கும், காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மனக் கவலை நீங்கும். | காலை 6 மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, முயற்சித்தடை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக் குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்-தொழில் விருத்தி, இனசனக் கொண்டாட்டம். | காலை 7 மணி |
| புதன்- வீண் பகை, காரியத்தடை. | பகல் 12 மணி |
| வியாழன்- துயர்நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| சனி- பயனுள்ள செயல், பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, வெளியிடப் பயணம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் மந்தம், கௌரவக் குறைவு. | காலை 8 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 6 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனக் கவலை நீங்கும். | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- கௌரவநிலை, தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த நோக்கம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| சனி- துன்பம் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 2





## ஆக்கம்

செம்பரிதி ஒளி கண்டு
செங்கமலம் கண் மலரும்
சேற்று நிலத்தில்தான்
செங்கதிர் துளிர் விடும்!

மடை தடுத்த வெள்ளமதே
வயல் தொழில் வாழ்த்தும்
மக்கள் திரண்ட சக்தியதே
ஊர், மனை ஆக்கும்!

அறிவுடையோர் உழைப்பு
அரிய செல்வம் சேர்க்கும்
புறம் மதிக்கும் மனிதனை
அகம் வருத்திக் கொல்லும்!

ஏர் பிடிக்கும் உள்ளமதில்
இன்பம் என்றும் தங்கும்
இலட்சியத்தோடு வாழ்வோருக்கு
என்றும் இல்லை துன்பம்!

போதையில் மயங்கினால்
பொல்லாங்கு விளையும்
பாதைகள் மாறினால்
பார் கண்டு நகைக்கும்!

-தில்லையடிச் செல்வன்-

**புதிய ஆத்திசூடி**

"செய்வது துணிந்து செய்
சேர்க்கை அழியேல்
சைகையில் பொருளுணர்
சொல்வது தெளிந்து சொல்."

-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# துரோகத்திற்கு பரிசு

**அ**ந்த நாட்டின் உயர்ந்த பதவியிலிருந்த சங்கரலிங்கத்திற்கு தன் அந்தரங்க உதவியாளனான நாகேந்திரன்மீது திடீரென்று சந்தேகம் தோன்றியது. தனக்கு வரும் அந்தரங்கத் தபால்களை அவன் மிகவும் சாமர்த்தியமாகப் பிரித்துப்படித்து, அந்த இரகசியங்களைச் சம்பந்தப்பட்டவர்களுக்குக்கூறி அவர்களிடமிருந்து லஞ்சம் பெற்றுவருவதாக அவர் மிகவும் இரகசியமாகக் கேள்விப்பட்டார்.

அது உண்மையா என்று கண்டறிய விரும்பிய சங்கரலிங்கம், மற்றுமொரு அதிகாரியான மணிமாறனை அழைத்து அதுபற்றிப் பேசினார். இருவரும் சேர்ந்து நாகேந்திரனின் திருட்டுத்தனத்தைக் கண்டுபிடிக்க ஒரு திட்டம் போட்டார்கள்.

மறுநாள்...

சங்கரலிங்கம், நாகேந்திரனை அழைத்து ஒரு கடிதத்தைக் கொடுத்து, "இதை மணிமாறனிடம் கொடுத்து விட்டுவா!" என்று சொல்லி அனுப்பினார்.

கடிதத்துடன் புறப்பட்டுச் சென்ற நாகேந்திரன் வழக்கம்போல் அந்தக் கடிதத்தில் இருக்கும் விசயங்களைத் தெரிந்துகொள்ள நினைத்தான். ஓரிடத்தில் நின்று சுற்றிலும் ஒரு பார்வை பார்த்து விட்டு, கடித உறையை மிகவும் சாமர்த்தியமாகப் பிரித்தான். பிறகு உள்ளே இருந்து மடிக்கப்பட்ட கடிதத்தை எடுத்து படித்தான். அதில், 'அன்பிற்குரிய மணிமாறா! என் அந்தரங்க உதவியாளனான நாகேந்திரன் எனக்காகச் சிறந்த முறையில் சேவை செய்து வருகிறான். அவனது சேவையைப் பாராட்டி அவனுக்கு அன்பளிப்பு கொடுக்க முடிவு செய்துள்ளேன். ஆகவே, இக்கடிதம் கொண்டு வரும் நாகேந்திரனை நீரும் பாராட்டி, அவனுக்கு ஆயிரம் ரூபாய் பரிசாகக்கொடு. இப்படிக்கு சங்கரலிங்கம்.

விஷயத்தைப் படித்துத் தெரிந்து கொண்ட நாகேந்திரன், பிரித்த கடிதத்தை மறுபடி திறமையாக ஒட்டினான்.



தனக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கப் போகும் மகிழ்ச்சியில், மணிமாறனிடம் சென்று அந்தக் கடிதத்தைக் கொடுத்தான். கடிதத்தைப் பிரித்துப் படித்த அதிகாரி, "கடிதத்தைக் கொடுத்து விட்டாயல்லவா, பிறகு ஏன் இன்னும் இங்கு நிற்கிறாய்? சரி போ. போய் உன் வேலையைப் பார்," என்று எரிந்து விழுந்தார்.

. நாகேந்திரனுக்கு எதுவுமே புரியவில்லை. ஆனால் புரிந்து கொண்டதாகக் காட்டிக்கொண்டால் அதுவும் ஆபத்து என்று எண்ணி பெரிய குழப்பத்தோடு திரும்ப சங்கரலிங்கத்திடம் வந்தான்.

அவனால் தனது ஆத்திரத்தை அடக்கிவைக்க முடியவில்லை. அவன் சங்கரலிங்கத்திடம் வந்து,

"ஐயா! அந்த மணிமாறன் மிகவும் மோசம். தங்களுடைய கட்டளைக்கு அவர் கீழ்ப்படியவில்லை. தங்களை அவமானப்படுத்தும் விதமாக நடந்து கொண்டார். ஆகவே, அவரை உடனே வேலையிலிருந்து நீக்குங்கள்," என்று கூறினான்.

சங்கரலிங்கம் அவனை மேலும் கீழும் பார்த்துவிட்டு, "நாகேந்திரா! அவர் அப்படி நடந்து கொண்டாரா? என்னால் நம்பமுடியவில்லையே? பதினைந்து ஆண்டுகளாக என்னிடம் வேலை பார்த்து வருகிறார். ஒரு தடவைகூட அவர் என்னை அவமானப்படுத்தும் விதமாகவோ, என் பேச்சை உதாசீனப்படுத்தும் விதமாகவோ அவர் நடந்து கொண்டதே இல்லையே" என்று சொன்னார்.

"ஐயா நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள், ஆனால், அவர் நடந்து கொண்டது எனக்குத்தானே தெரியும்," என்று அழமாட்டாத குறையாகச் சொன்னான் நாகேந்திரன்.

"உன்னிடம் எப்படித்தான் நடந்து கொண்டார்?" என்று கேட்டார் சங்கரலிங்கம்.

"ஐயா! நீங்கள் என்னிடம் மணிமாறனுக்குக் கொடுத்தனுப்பிய கடிதத்தில் எனது சேவையைப் பாராட்டி, ஆயிரம் ரூபாயை எனக்குக் கொடுக்கும்படி எழுதியிருந்தீர்கள். அதைப் படித்துப் பார்த்த அவர் எனக்கு ஆயிரம் ரூபாயைக் கொடுக்காமல் என்மேல் எரிந்துவிழுந்து விரட்டிவிட்டார்," என்று நெகிழ்ந்த குரலில் சொன்னான்.

சங்கரலிங்கம் அவனைக் கடுங் கோபத்தோடு பார்த்தார்.


"நாகேந்திரா! நான் அந்த அதிகாரிக்கு எழுதிய கடிதத்தை ஒரு உறையில் போட்டு நன்கு ஒட்டியிருந்தேன். அப்படியிருக்க, கடிதத்தில் நான் எழுதியிருந்த விஷயம் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார் சங்கரலிங்கம்.

நாகேந்திரன் அப்பொழுதுதான் தன் தவறை உணர்ந்தான். பதில் சொல்ல முடியாமல் திருதிருவென்று விழித்தான்.

நாகேந்திரா! உன் திருட்டுத்தனத்தைக் கண்டுபிடிக்க நானும், அவரும் சேர்ந்து நடத்திய நாடகம்தான் இது. நம்பிக்கைத் துரோகியான உனக்கு இங்கே வேலை செய்யத் தகுதி இல்லை. இதுவரை நீ செய்த துரோகங்களுக்குப் பரிசாக இருபது கசையடிகள் வாங்கிக் கொண்டு வெளியே போ." என்றார் சங்கரலிங்கம்.

நல்ல பதவியில் இருந்தும் மோசமான நடத்தையால் கெட்ட பெயர் வாங்கியதோடு, அவமானப்பட்டு, கசையடிகள் வாங்கி வேதனைப்பட்டு வேலையை இழந்து கிழிந்த உடைகளுடன் வெளியேறிப் போனான் நாகேந்திரன்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.12.1994.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 71
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 68**

பரிசுக்குரியவர்
தணிகாசலம் தசரதன்
சித்திவினாயகர் வித்தியாலயம், சந்திவெளி.

பாராட்டுக்குரியவர்கள்:
க. தமிழினி- காலி வீதி, கொழும்பு-3.
என்.எம்.ஏ. மஹாஸின்- ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம்.
சு. பாலகிருஷ்ணன்- சரஸ்வதி தமிழ் வித்தியாலயம், மொனராகலை.
எம்.ஐ.எம். முனாஸ்- புஹாரி வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை.
ஸீனத் வசீர்- ஹுனுப்பிட்டி, வத்தளை.
க. சியாமினி- நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்தியாலயம் கொழும்பு-13.

## விடுகதைகளும் விடைகளும்

1. பார்த்தால் பச்சை. பழுத்தால் சிவப்பு. உடைத்தால் பருப்பு. கடித்தால் உறைப்பு. அது என்ன?
2. சிறகுகள் உண்டு, விமானம் அல்ல, கூண்டுக்குள் இருக்கும், ஆனால் பறவையல்ல. அது என்ன?
3. அண்ணளோ ஆஸ்திகன். தம்பியோ நாஸ்திகன்- யார் அவர்கள்?
4. வெட்டலாம்- கத்தியல்ல. மூடலாம்- பாத்திரமல்ல, திறக்கலாம்- சாவியல்ல. அது என்ன?
5. ஒரு குகைக்கு இரண்டு வாசல்கள். அது என்ன?
6. ஆற்றிலே ஒரு கை. கடலிலே ஒரு கை. மிருகத்திற்கு ஒரு கை. மனிதனுக்கு ஒரு கை. அது என்ன?
7. அடிக்கடி வெட்டும், மின்னல் அல்ல. வேகமாக பாயும், வேலும் அம்பும் அல்ல. நினைத்தால் மழை பொழியும், ஆனால் அது வானமும் அல்ல. அது என்ன?
8. பல பேர் ஏறி ஓடினாலும் படுத்தவன் எழும்பமாட்டான். யார் அவன்?
9. வெளியே சிவப்பு சட்டை, உள்ளே வெள்ளை சட்டை. அது என்ன?
10. உருவம் ஒன்று. உடைகள் மூன்று. அது என்ன?
11. பூ ஒன்று பூத்து, காய்கள் பல காய்க்கும். அது என்ன?
12. நீருண்டு, பாலுண்டு, பூ உண்டு, தேன் இல்லை. அது என்ன?
13. அவன் நம்மை சுடுவான். நாம் அவனை சுட முடியாது. ஆனால் அது துவக்கோ நெருப்போ அல்ல. அது என்ன?
14. புற்கள் உண்டு- நிலமல்ல. மிருகமுண்டு- காடல்ல. அது என்ன?

### விடைகள்

1. கொச்சிக்காய் 2. காற்றாடி 3. தேங்காய், குரும்பை
4. கண் 5. மூக்கு 6. அக்கை, திருக்கை, தும்பிக்கை, நம்பிக்கை
7. கண் 8. வீதி 9. வெங்காயம் 10. அவித்த முட்டை
11. வாழை மரம் 12. தேங்காய் 13. வெயில்
14. தலை.

அஸ்கியா இப்திகார்- யோனகபுர, திக்வெல்ல.

## வீரகவிராய வேடிக்கை

அரிச்சந்திர புராணத்தை பாடிய வீரகவிராயர் பற்றி அறிந்திருப்பீர்கள். இந்த வீரகவிராயர் என்னும் பெயரில் சில எழுத்துகளை நீக்கி வேடிக்கை பாருங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| வீ | ர | க | வி | ரா | ய | ர் |

1. 3,4 பாட்டின் ஒத்த சொல் (கவி)
2. 1,5 ஒரு படத்தின் பெயர் (வீரா)
3. 2,6,7 களனியில் செய்வது (ரயர்)
4. 2,3,7 ஒரு விளையாட்டு (ரகர்)
5. 4,6,7 மது வகைகளில் ஒன்று (வியர்)
6. 1,2,7 கோழையின் எதிர்ச்சொல் (வீரர்)

அ. செந்தூரன்-மட்டக்களப்பு.


## பொல்லாத கிளி



நியூசிலாந்தில் கீ பரற்-சாவிக் கிளி என்ற ஒரு வகைக் கிளிகள் உள்ளன. நியூசிலாந்து மலைப் பகுதிகளில் இவை வாழும். மற்றக் கிளிகளைப் போல பழங்களைச் சாப்பிடும். இது தவிர இவை இறைச்சியும் சாப்பிடும். . உலகிலேயே மாமிசம் சாப்பிடும் கிளி இனம் இவைதான்.

இந்தக் கிளிகளை முற்றாக அழித்துவிட நியூசிலாந்து விவசாயிகள் முயற்சித்து வருகின்றனர். இவை ஆட்டுக் குட்டிகளைக் கொத்திக் குதறி கொன்று தின்னும். இதனால் விவசாயிகளுக்குப் பல ஆடுகள் நஷ்டம்.


## சிட்னி



- **சிட்னி எங்குள்ளது?**
  அவுஸ்திரேலியாவின் தென்கிழக்குக் கடற்கரையில் உள்ளது.
- **இந்த நகர் எப்போது உருவானது?**
  கைதிகளைச் சிறை வைக்கும் நகரமாக 1778ம் ஆண்டு இது உருவானது. அப்போதைய செயலர் லோர்ட் சிட்னியின் நினைவாக அந்த இடத்திற்குப் பெயர் சூட்டப்பட்டது.
- **இந்த நகரத்தின் மக்கள் தொகை எவ்வளவு?**
  மூப்பத்து இலட்சம்.
- **இங்கு உள்ள முக்கிய இடங்கள் எவை?**
  சிட்னி துறைமுகப் பாலம், உலகிலேயே மிகவும் அகலமான பாலம் இது. சிட்னியின் இசை அரங்கு 'ஒபரா ஹவுஸ்' ஆகும். இந்த அரங்கு நவீன கட்டிடக் கலைக்கு ஒரு சான்றாகும்.
- **சிட்னியில் 2000ம் ஆண்டு என்ன நடக்கப் போகிறது?**
  ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. அதற்காக இந்த நகரம் இப்போதே தயாராக ஆரம்பித்துவிட்டது.

இந்தப் படத்தில் இருக்கும் இலக்கங்களுக்கு கீழே தரப்பட்ட ஒழுங்கில் வர்ணங்களைத் தீட்டிப் பாருங்கள். கிறிஸ்துமஸ் தாத்தா என்ன பரிசுகள் கொண்டு வருகிறார் என்பது தெரியும்.

1. சிவப்பு
2. பச்சை
3. நீலம்
4. பிறவுண்
5. சாம்பல்
6. மஞ்சள்



# மகா சூலம் 1

பாட்டிகள் சொல்லும் பழங்கதைகளில் ஒன்று-இப்படி ஆரம்பமாகும்.

ஒரு தடவை ஓர் இல்லத்தின் பட்டதிரியும் (தலைவன்) அவருடைய நண்பரான வேறு ஒரு நம்பூதிரியும் திருச்சூருக்குப் பூரம் திருவிழாப் பார்க்கப் போனார்கள்.

இருஞாலக் குடை அருகே போகும் போதே பொழுது சாய்ந்துவிட்டது. பட்டதிரியும் நம்பூதிரியும் பக்கத்தில் ஓர் இல்லத்துக்குப் போய் கால் முகம் சுத்தி செய்து சந்தியா வந்தனம் முடித்தார்கள். உணவும் உண்டார்கள். அதற்குள் இரவாகிவிட்டது.

என்றாலும் புறப்பட்ட பயணத்தைத் தொடருவதென்றும் இருட்டோடு இருட்டாக திருச்சூர் போய்ச் சேர்ந்துவிடலாமென்றும் நடக்க ஆரம்பித்தார்கள்.

வீதிகள் எல்லாம் வெறுமையாயிருந்தன.

இருவரும் போகிற வழிக்கு ஏதாவது பேசிக்கொண்டே போக நினைத்து சிருங்காரச் சுவையுள்ள சமஸ்கிருத ஸ்லோகங்கள் சிலவற்றை எடுத்து வாசிக்கொண்டே போனார்கள்.

அவை அர்த்த புஷ்டியுள்ள 'அந்த' சமாச்சாரங்கள்!

இவை வழிநடையை இலகுவாக்கின.

உதட்டிலும் மனசிலும் உற்சாகம் தருகிற மேற்படி ஈரடிப்பாடல்களை இருவருமே நிறையத் தெரிந்து வைத்திருந்தனர். ஒருத்தருக்கொருத்தர் இதில் ஜெயித்துக்கொண்டே வரும்போது-

சாமுத்திரிகா லட்சணமுள்ள இரண்டு இளம் பெண்கள் வானத்திலிருந்தோ பூமியிலிருந்தோ வந்த மாதிரி அவர்களுக்கு எதிரில் வந்து கொண்டிருந்தார்கள்.

உதட்டிலும் மனசிலும் இருந்த சிருங்காரம்-

எதிரில் வந்த பெண்களைப் பார்த்ததுமே பட்டதிரிக்கும், நம்பூதிரிக்கும் பரவசம் உண்டாக்கின.

'ஜொள்' ளொழுகப் பார்த்தார்கள்!

அடடா இப்படியும் பெண்கள் இருக்கிறார்களா? இவர்கள் என்ன ரகம்...? உற்றுப் பார்த்த பட்டதிரி நம்பூதிரியை நயனத்தாலேயே விசாரணை செய்தார். இதை அந்தப் பெண்கள் கவனிக்கவில்லை!

அவர்களுக்கு இந்த இருட்டில் இருவரும் எங்கே போகிறார்களோ என்கிற சந்தேகம் வந்து விட்டது.

"திருமேனிகள் ரெண்டும் இந்த அகாலத்திலே எங்கே போயிட்டிருக்கீங்க?" என்றாள் ஒருத்தி அனுதாபத்தோடு.

அவள் குரலும் மணிநாதமாய் ஒலித்தது.....

'பூரம் பார்க்கப் போறோம்!"- சொன்னார் பட்டதிரி.

இதைக் கேட்டதுமே அவள் அடுத்தவளைப் பார்த்தாள். களுக்கென்று சிரித்தாள். மற்றுமொரு மணியோசை:

"இதுவரைக்கும் வந்தது சரி; ஆனா இதுக்கு அந்தப் பக்கம் போறது சரியில்லே!"

"ஏன்....ஏன்?"

"இது மாதிரி நேரம் இந்த வழியிலே மனுஷர்கள் யாருமே நடக்கமாட்டாங்க திருமேனி! இதுக்கும் அந்தப் பக்கம் இருக்கிறது யகதிக்காடு. அதுக்குள்ளே போறது ஆபத்து!" என்றாள் ஒருத்தி.

"அதனாலேதான் சொல்றோம். ராத்திரிக்கு எங்காவது ஓரிடத்திலே படுத்து ஓய்வெடுத்துட்டு விடி காலைலே போங்க! ஏன் வீணா ஆபத்தைத் தேடிப்போய் மாட்டிக்கறீங்?" என்றாள் மற்றொருத்தி.

ஒருத்தி மாற்றி மற்றொருத்தி சொன்னதுமே பட்டதிரிக்கும் நம்பூதிரிக்கும் பயம் வந்துவிட்டது.

"எங்களுக்கு இந்தத் திசையிலே யாரும் பழக்கமில்லே! சரி தங்கப் போகலாம்'னா இந்த இருட்டிலே யார் வீட்டுக் கதவைப் போய் தட்டறது? இங்கே சுத்தமான சூத்திர வீடுகள் ஏதாவது இருக்கணுமே..." என்றார் நம்பூதிரி.

"ஏன்...? எங்க குப்பை மாடத்திலே தங்குங்க. நாங்களும் சுத்தமானவங்கதான்!"

பெண்கள் இருவரும் தனியாகப்போய் ஏதோ பேசிக்கொண்டார்கள்.

அப்போது பட்டதிரி நம்பூதிரியிடம் சொன்னார்: "தங்கீட்டே போவோம் திருமேனி. ஆபத்துக்கு எதுவும் தோஷம் கெடையாது. அன்பா கூப்பிடறாங்க."

"சரி! ரெண்டுபேரும் விரும்பிக் கூப்பிடறப்பப் போகாம இருக்கறதும் நல்லா இருக்காது!"

"என்ன சொல்றாரு திருமேனி?"

"சரி வரோம்."

நாலுபேருமாக நடக்க ஆரம்பித்தார்கள்.

கொஞ்ச தூரம் போனதுமே அவர்கள் முன்னால் ஒரு பெரிய மாளிகை தெரிந்தது.

"இதையா குப்பை மாடம்"னு சொன்னீங்க?"

"திருமேனி....உங்க இல்லங்களுக்கு முன்னாலே இதெல்லாம் குப்பைதான்." சொல்லிக்கொண்டே துள்ளியோடியவள் கதவைத் திறந்ததுமே இரண்டு பெரிய பெரிய அறைகள்! கட்டிலும் மெத்தையும் திண்டும்!

ஒவ்வொரு அறைக்கும் ஒவ்வொருத்தர் அவர்களோடு ஒவ்வொருத்தி உள்ளே புகுந்ததுமே பட்டதிரியைத் தொட்டாள்



முதலாவது பெண். அவள் கைபட்ட மறு நிமிடமே ஆசாமி அம்பேல்-உடனே அந்த அழகி தனது சுய உருவத்துக்கு வந்தாள்.

அவளே ஒரு யக்ஷி தான்!

பட்டதிரியைப் படக்குப் படக்கென்று ஒடித்து முறித்து கடித்துத் தின்ன ஆரம்பித்துவிட்டாள்.

அடுத்த அறையில் நம்பூதிரி.

அவருக்கு எப்போதுமே படுக்கப் போகுமுன் தேவி மகாத்மீயம் படித்தாக வேண்டும். இதற்காகவே அந்தச் சுவடிக் கட்டு எப்போதும் அவர் கையிலிருக்கும். இப்போதும் இருந்தது.

படிக்க ஆரம்பித்தார்.

படித்து முடிக்கிற வரை அந்தப் பெண் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தாள். நம்பூதிரி படித்து முடித்ததுமே சுவடியை சுருட்டி தலைக்கு வைக்கப் போனார்.

இதைப் பார்த்தவளுக்கு எரிச்சலாக இருந்தது.

"அதையேன் தலை மாட்டிலே வைக்கறீங்க? கீழே எங்காவது வைக்க வேண்டியதுதானே?"

"ஐயோ! இது தேவி மகாத்மீயம்மா! கீழே எங்கேயும் வைக்கக்கூடாது! இதைத் தலை மாட்டிலே வைச்சாத்தான் எனக்குத் தூக்கமே வரும்...." நம்பூதிரி உள்ளதைச் சொன்னார்.

அந்தச் சுவடியை அவர் தலைமாட்டிலிருந்து விலக்க அவள் பல்வேறு உபாயம் செய்தாள். நம்பூதிரி ஒப்புக்கொள்ளவேயில்லை. அப்போது-

அடுத்த அறையில் பட்டதிரியின் எலும்புகளைக் கடித்துத் தின்கிற சத்தமும், ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிற வேகமும் காதிலே விழுந்தது!

நம்பூதிரிக்குப் பயம்.

"பட்டதிரி!"-கூப்பிட்டார்.

ஒருவேளை இதுவேறு ஏதாவது விவகாரமாக இருக்கக் கூடாதா என்று ஒரு சின்ன ஆறுதல்.

இல்லை,

பட்டதிரியிடம் பேச்சு மூச்சு இல்லை,

அப்போதும் சுவடியை வேறு எங்காவது வைக்கும்படி தனது அறைக்குள்ளிருந்த பெண் தொந்தரவு செய்துகொண்டேயிருந்தது நம்பூதிரிக்கு சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்துவிட்டது! இவளும் பெண் அல்ல; பேய்!

உடனே நம்பூதிரி ஓலைச் சுவடியைக் கைகளில் எடுத்துப் பிடித்துக்கொண்டார். என்ன ஆனாலும் சரி... இதை விடக்கூடாது என்கிற பிடிவாதப் பிடி; மரணப்பிடி.

அவள் வெகுநேரம் முரண்டிவிட்டு விடிகிற நேரம் வெளியே போய்விட்டாள்.

பொழுது நன்றாக விடிந்தது!

நடந்தது என்ன?

திருமேனி சுற்றுமுற்றும் பார்த்தார்.

அங்கே மாளிகையில்லை. அறைகளுமில்லை. பெண்களுமில்லை. நம்பூதிரி அப்போது ஒரு பனை மரத்தின்மீது அமர்ந்திருந்தார். தரையைப் பார்க்கப் பார்க்கத் தலை சுற்றியது!

எப்படியோ தட்டுத் தடுமாறி மரத்தை விட்டுக் கீழே வந்தார். அப்போதுதான் கவனித்தார்.

அடுத்த பனையின் அடியில் பட்டதிரியின் நகங்களும் குடுமியும். இரவில் தங்களை எதிரில் வந்து கூப்பிட்டவர்கள் இருவருமே யக்ஷிகள். அவர்களது மாய பலமே மானிட வடிவம் என்பது நம்பூதிரிக்குப் புரிந்தது. அந்தக் கரும்பனைதான் மாளிகையாகக் காட்சி தந்திருக்கிறது!

தேவி மகாத்மீயம் என்ற சுவடி கையில் இருந்ததால்தான் யக்ஷி தன்னைத் தொடவில்லை! அது எப்போதும் இருக்கிறபடி அப்போதும் இருந்ததால்தான் தனது உயிர் மிஞ்சியிருக்கிறது!

பூரம் திருவிழாவுக்குப் போக வேண்டும் என்கிறதைக் கூட அப்போது நம்பூதிரி மறந்துவிட்டார்! இல்லத்துக்கே ஓட ஆரம்பித்தார்!

□□□

பவத்ராதன் நம்பூதிரி நினைத்துப் பார்த்தது இந்தக் கதையைத்தான். நினைக்க நினைக்க அவருக்குச் சிரிப்பு வந்தது.

அவர் முகத்தில் தெரிந்த மாற்றத்தையே உற்றுக் கவனித்தான் குஞ்சன்!

மேலிடத்து மனையின் வேலைக்காரன் என்கிற முறையில் பவத்ராதன் திருமேனியிடம் அவனுக்கு ஏராளமான விசுவாசங்கள் உண்டு. அவரைப்பற்றி யார் என்ன சொன்னாலும் அந்த இடத்திலேயே பதிலுக்குப் பதில் சரியாக அடித்து மெழுகி விட்டுத்தான் வந்து பழக்கம்! ஆனால்... இப்போது அவனைப் பதிலே சொல்ல முடியாதபடி மாட்டிவிட்டிருப்பவர் பாலேக்கல் மனையின் பட்டதிரியான் நீலகண்டன் நம்பூதிரி!

அவரும் ஆள் சாமானியர் அல்ல!

எனவேதான் அவர் சொன்னது அவ்வளவையும் மனசில் ஏற்றிக்கொண்டு வந்து பவத்ராதன் திருமேனியின் காதில் இறக்கி வைத்து விட்டான் குஞ்சன்!

கேட்டதுமே அவருடைய முகம் மாறியது!

ஆனால் இப்போது?

எதையோ நினைத்துவிட்டு அவரே உள்ளுக்குள் சிரித்துக்கொள்ளுகிறார்...

நீலகண்டனுக்கு ஏதாவது பதில் கொடுக்கத்தான் நம்பூதிரி இப்படிச் சிரிக்கிறார் என்று புரிந்து கொண்டு எஜமானின் வார்த்தைகளுக்காகக் காத்து நின்றான் குஞ்சன்!

"ஏண்டா குஞ்சா?" என்றார் அவர் வெகு கம்பீரமாக.

"திருமேனி!"

"என்னைப் பத்தி உனக்குத் தெரியாதாடா நாயே!" என்றார் திருமேனி. திட்டினாலும் அதே சிரிப்பு.

"திருமேனி.... அடியேன்... சொல்ல வந்தது.."

குஞ்சன் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான்.

"தெரியலே! நம்மைப் பத்தியும் நம்மோட பாரம்பரியத்தைப் பத்தியும் உனக்குத் தெரியலே!"

"அது வந்து..."

"வந்து போயின்னு எதுக்கு எனக்குச் சமாதானம்? தெரியாததைத் தெரியலேன்னு ஒப்புத்துக்க!"

குஞ்சன் ஏதோ குறுக்கே பேச எத்தனித்தான். திருமேனி பேசவிடவில்லை. "அடேய்! உனக்கு ஒரு கதை தெரியுமா?" கேட்டார். சுருக்கமாகத் தாம் நினைவு கூர்ந்த கதையையும் சொன்னார்- பிறகு?

நீலகண்டனுக்குப் பதில்கூறும் வார்த்தைகள் வெகு இங்கிதமாக அவரது வாயிலிருந்து வந்தன: "...கரும்பனை ஏறியும் நகமும், குடுமியும் கீழே விழாமத் திரும்பி வந்த பாரம்பரியம்டா நம்மோட பாரம்பரியம்! அது மட்டுமில்லே உயிரோட திரும்பியும் வந்த பாரம்பரியம். இதை மட்டும் நீ அந்தப் பறட்டைப் பட்டதிரிகிட்டே சொல்லு! புரிஞ்சுக்குவாரு. அவரோட தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா நகத்தையும் குடுமியையும் தவிர மத்தது எல்லாத்தையும் யக்ஷி தின்னுட்டா! அதையும் ஞாபகத்திலே வச்சுக்கச் சொல்லு... அதுபோதும்! தேவையில்லாம அவரு விளையாட்டு நம்மகிட்டே வேண்டாம்!"

"இவ்வளவையும் சொல்லணுமா திருமேனி?"

குஞ்சன் சந்தேகத்தோடு கேட்டான்.

"போடா, முட்டாள்! நீ வந்து இவ்வளவு நேரமும் நீலகண்டன் சொன்னதையெல்லாம் ஒண்ணுவிடாம என்கிட்டே சொன்னியே! அப்படிச் சொன்னவன் நான் சொன்னதையும் போய்ச் சொல்லு! என்ன தப்பு?"

யோசித்தான் குஞ்சன்.

"....இல்லாதது எதையும் நான் சொன்னேனா? நீ கேட்ட கதை நெஜமா நடந்த கதை தான்டா! சொல்லு..."

"சொல்றேன் திருமேனி."

குஞ்சன் கூனிக் குறுகி வணக்கம் செய்தான். எஜமான் தனக்குச் சொன்னதை எல்லாம் அப்படியே போய் அந்தப் பாலேக்கல்மனை மாந்திரீகனிடம் இவனும் சொல்ல ஆரம்பித்தால்- நிஜமாகவே நகமும் குடுமியும் தவிர வேறெதுவும் குஞ்சனுக்கு அடையாளமே தெரியாமல் போனாலும் போகலாம்.

நீலகண்டன் ஆள் அப்படி!

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சாதிக்கிற ஆள். தன்னை மீறி உலகத்திலேயே எந்த மாந்திரீகனும் இல்லையென்று சொல்லுகிற ரகம்.

குஞ்சனுக்கு பவத்ராதன் திருமேனியையும் தெரியும்; நீலகண்டனையும் தெரியும்.

இருவருமே ஒரே குருகுலத்தில் படித்தவர்கள்.

வேதமும் மந்திரமும் கற்றுக் கொண்டு இரண்டு பேருமே இருவரின் குடும்பப் பாரம்பரியத்தையும் எடுத்து நிறுத்திக்கொண்டிருக்கிறவர்கள்.

இருவருமே மாந்திரீகர்கள். அவர்களின் வித்தைகளையும் வேலைகளையும் காட்டி ஒருத்தருக்கொருத்தர் குறைச்சலில்லை என்று சாதிக்க நினைப்பவர்கள்!

இவர்களுக்கு நடுவே-

மாட்டிக்கொண்டு முழிக்கிற மத்தளமாக குஞ்சனா?

கோபக்கார நீலகண்டனிடம் போய் திருமேனி சொன்னதை எல்லாம் ஒன்று விடாமல் சொன்னால்... திருமேனி கேட்டதுபோல் பட்டதிரி கேட்கமாட்டார்!

தன்னை ஓந்தாகவோ ஓணானாகவோ சபித்தாலும் சபிக்கக்கூடும்!

'பகவானே! இந்தப் பரிசோதனை எல்லாம் நமக்கு எதற்கு?

□□□

குஞ்சன் தனக்குள் நொந்து கொண்டான். நீலகண்டனை ஏதோ ஒரு வேகத்தில் அப்படிச் சொல்லியிருந்தாலும் அதை வந்து இத்தனை சீக்கிரம் திருமேனியின் காதில் போட்டிருந்திருக்கக்கூடாது என்றுதான் நினைத்தான். இருவரின் சுபாவத்தையும் அறிந்தவன் என்கிற முறையில் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருந்தான் அவன்.

மேலோர்கள் தமக்குள் மோதிக் கொள்ளக்கூடாது என்று குஞ்சன் நினைக்கிற மாதிரி மேலோர்களின் மனசுகள் பக்குவப்படவில்லையே என்கிற குமைச்சல் குஞ்சனுக்கு உண்டு!

"இங்கே பாருடா! நீ என்ன யோசனை செஞ்சாலும் சரி! இந்த விஷயத்திலே நான் சொன்னது சொன்னதுதான். அதை நீ அப்படியே போய் அவர்கிட்டே சொல்லணும். இப்ப ஏதேதோ வித்தை யெல்லாம் நீலகண்டன் கத்து வைச்சிருக்கிறதாகச் சொன்னா... அந்த வித்தையை எடுத்துட்டு நேருக்கு நேர் என்னோட மோதச் சொல்லு! அதுதான் திறமை! ஊரு ஜனங்க கிட்டே உளறி கிட்டிருக்க வேண்டாம். அவரு புது வித்தையும், நம்ம பழைய வித்தையும் மோதட்டும். எது ஜெயிக்குது பார்த்துடுவோம்!"

பவத்ராதன் இப்படிச் சொல்லி விட்டு மறுபடியும் அதே சிரிப்பு சிரித்தார். ஆனால் இந்தச் சிரிப்புக்குள் ஓர் ஆபத்தின் அறிகுறி தெரிகிறது!

(தொடர்ந்து வரும்)

## எழுதுவது யார்?

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்
'முரசு'க்காக
எழுதும் தொடர் இது!
யார் இந்த எழுத்தாளர்?
வாசகர்களின்
ஊகிப்புத் திறனுக்கு சவால்!
கண்டுபிடிக்கும் வாசகர்களில்
பத்து அதிஷ்டசாலிகளுக்கு
அசத்தலான-
பரிசுகள் காத்திருக்கின்றன.
தொடர்ந்து வாசியுங்கள்.
நாம் கேட்கும்போது மட்டும்
விடையை எழுதி அனுப்பினால் போதும்.

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: நந்தகுமார்
வயது: 20
முகவரி: கம்பிரிகொடுவ வேரகொடல்ல, வெல்லம்பிட்டிய போஸ்ட்.
பொழுதுபோக்கு: பத்திரிகை படித்தல்.




பெயர்: ஐ.அப்துல் சலாம்
வயது: 23
முகவரி: 32/3,கல்பிட்டிய ரோட், ஆலங்குடா- ஏத்தாலை, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனாநட்பு.



பெயர்: எஸ்.வனிதா
வயது: 18
முகவரி: தாளங்குடா-02 காத்தான்குடி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: என்.பரீதா
வயது: 25
முகவரி: P.O.BOX-65103 MANSURIYA 356352 KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர்: எம். மதிமுகன்
வயது: 23
முகவரி: F.A.A.C.CO.W.L.L P.O.BOX-25809 SAFAT-13119-KUWAIT.
பொ.போ: சினிமா, வானொலி, பத்திரிகை.



பெயர்: எம்.பௌசர்
வயது: 24
முகவரி: SATCO-(S-17) P.O.BOX-10164 AL- JUBAL CITY- K.S.A.
பொழுதுபோக்கு: நீச்சல், இசை கேட்டல், விளையாடுதல்.

பெயர்: ஐ.ஜெகதீசன்
வயது: 35
முகவரி: 162, AVENUE JEAN LOLIVE 93500. PANTIN-FRANCE.
பொ.போ: பத்திரிகை, நண்பர்கள் தொடர்பு, சினிமா தொலைக்காட்சி.

பெயர்: எம்.றிஸ்வி
முகவரி: P.O.BOX-5064 13051 SAFAT KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல்.

பெயர்: எஸ்.வடிவேல்
வயது: 23
முகவரி: 38/6, இரட்ணம் வீதி, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, கிரிக்கெட் விளையாடுதல்.

பெயர்: எப்.பாக்கீர்
வயது: 19
முகவரி: 22/9, மத்திய சந்தை, மினுவாங்கொடை.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எம்.வசந்தன்
வயது: 28
முகவரி: 340, அன்புவழிபுரம், திருகோணமலை.
பொ.போ: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஐ.சகாப்தீன்
வயது: 18
முகவரி: 397, தரிக்கா லேன், விரைந்துறைச் சேனை, வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை, வானொலி.

# தாய்

## மக்சீம் கார்க்கி

**என்றும் முதலிடம்**

உலகில்
மிகச் சிறந்த நாவல்
எது?
ஒரே பதில்
*தாய்! தாய்!! தாய்!!!*

உண்மைகள்
எப்போதும் வசீகரமானவை
அதுதான்
'தாய்' நாவல்
எப்போதும்
முதலிடத்தில் இருக்கிறது!

தவறவிடாமல்
தொடர்ந்து வாசியுங்கள்!

ரகுநாதனின்
மொழி பெயர்ப்புநடை
பிரமாதப்படுத்துகிறது.

-ஆர்.

## 5

"**நா**ன் இப்போதே படுக்கப் போகிறேன்" என்றான் அவன். பிறகு அவளை நோக்கிக் குனிந்து கொண்டே, "நான் சொன்னதையெல்லாம் புரிந்து கொண்டாயா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்று ஒரு பெருமூச்சுடன் பதில் சொன்னாள் அவள். மீண்டும் அவளது கண்ணில் கண்ணீர் சொரிந்து வழிய ஆரம்பித்தது. "இதெல்லாம் உன் அழிவு காலத்துக்குத்தான்!" என்று தேம்பினாள்.

அவன் எழுந்து அறைக்குள் நடமாடினான்.

"சரி. இப்போது நான் எங்கு போகிறேன், என்ன செய்கிறேன் என்பது உனக்குத் தெரியும், உனக்கு எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். நீ என்னை நேசிப்பது உண்மையானால் இனிமேல் இதில் தலையிடாதே, அம்மா!" என்றான் அவன்.

"கண்ணே! என் கண்ணே! இதை நீ என்னிடம் சொல்லாமல் இருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் போலிருக்கிறதே!" என்று கத்தினாள் அவள்.

தன் தாயின் கரத்தை எடுத்து இறுகப் பிடித்து அழுத்தினான்.

அவன் அன்போடு 'அம்மா' என்று அழைத்த சொல்லாலும், அவளது கரத்தை இதுவரை இல்லாத இனிய வாஞ்சையோடு அழுத்திப் பிடித்ததால் ஏற்பட்ட சுக உணர்ச்சியாலும் அவள் மெய்மறந்து போய்விட்டாள்.

"சரி, நான் இதில் தலையிடவில்லை" என்று தட்டுத் தடுமாறிச் சொன்னாள் அவள். "நீ மட்டும் உன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளப்பா, ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்." தனது மகனுக்கு எந்தவிதமான ஆபத்துக் காத்து நிற்கிறது என்பதை அறிய முடியாமல், மீண்டும் அவள் வருத்தத்தோடு சொன்னாள்: "நீ நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே வருகிறாய்!"

அவனது நெடிய பலம்பொருந்திய உருவத்தை அவள் அன்போடு ஏற இறங்கப் பார்த்துக்கொண்டாள்.

"உன் இஷ்டப்படியே நீ வாழப்பா. அதெல்லாம் நான் தலையிடக்கூடிய விவகாரம் இல்லை. நான் கேட்பது ஒன்றே ஒன்றுதான். நீ மற்ற மனிதர்களோடு பேசும்போது இவ்வளவு தீவிரமாய்ப் பேசாதே. மனிதர்களைப் பற்றிய பயம் உனக்கு எப்போதும் இருக்க வேண்டும்; அவர்கள் ஒருவரையொருவர் வெறுக்கிறார்கள்; பேராசையிலும் பொறாமையாலுமே வாழ்கிறார்கள். அடுத்தவனைத் துன்புறுத்துவதில் ஆனந்தம் கொள்கிறார்கள். நீ அதை எடுத்துக்காட்டி, அவர்களைக் குறைகூறத் தொடங்கினால், உடனே அவர்கள் உன்னையும் பகைப்பார்கள். உன்னை அழித்தே விடுவார்கள்."

அவளது சோகமயமான வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு அவளது மகன் வாசல்படியருகே நின்றான். அவள் பேசி முடித்ததும் அவன் லேசாக நகைத்தான்.

"நீ சொல்வது சரிதான்; மனிதர்கள் கெட்டவர்களாகத்தானிருக்கிறார்கள்" என்றான் அவன். "ஆனால் உலகத்தில் நியாயம் என்று ஒன்று இருப்பதாக நான் அறிந்து கொண்டேனே, அதைப் பார்க்கும்போது இந்த மனிதர்கள் எவ்வளவோ தேவலை!" மீண்டும் அவன் நகைத்தான்; பிறகு சொன்னான்: "இதெல்லாம் எப்படி ஏற்பட்டது என்பது எனக்கே தெரியாது. சிறு பிள்ளையாயிருக்கும்போது நான் யாரைக் கண்டாலும் பயப்படுவேன். பெரியவனான பிறகு, எவரைக் கண்டாலும் வெறுக்கவே செய்தேன். சிலரை அவர்களது படு மோசத்தனத்தைக் கண்டு வெறுத்தேன். ஆனால் மற்றவர்களை? அது ஏன் என்று எனக்கே தெரியாது; என்னவோ வெறுக்க வேண்டும் என்பதற்காக வெறுத்தேன். ஆனால் இப்போதோ எல்லாமே எனக்கு வேறுபட்டுத் தோன்றுகிறது. இது நான் மனிதர்களுக்காக அனுதாபப்படுவதால் ஏற்பட்டிருக்கக்கூடும். எப்படியானாலும், மனிதர்கள் மோசமாய் நடந்துகொள்வதற்கு எல்லா மனிதர்களும் காரணம் அல்ல என்பதை நான் உணர்ந்து கொண்டதால், என் இதயம் நெகிழ்ச்சியுற்றுவிட்டது..."

அவன் பேசுவதை நிறுத்திவிட்டு, தன் இதயத்துக்குள் கேட்கும் ஏதோ ஒரு குரலைக் கேட்பதுபோல நின்றான். பிறகு அமைதியும் சிந்தனையும் நிறைந்தவாறு அவன் சொன்னான்:

"எனவே,- உனக்கு நான் சொல்ல விரும்பிய உண்மை இதுதான்!"

"கிறிஸ்து ரட்சகரே- நீ மிகவும் பயங்கரமாகத்தான் மாறிவிட்டாய்!" என்று சொல்லி அவள் மகனை லேசாகப் பார்த்தாள்.

அவன் நன்றாகத் தூங்கிய பிறகு, அவள் தன் படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்து அவனருகே சென்றாள். பாவெல் மல்லாக்கப்படுத்திருந்தான். உறுதியும் திண்மையும் உரமும் பாய்ந்திருந்த அவனது பிடிவாதத் தோற்றம் கொண்ட, பழுப்பேறிய, கடுமையான முகம், வெள்ளை நிறமான தலையணையில் துலாம்பரமாகத் தெரிந்தது. அவனது தாய் காலில் பாதணி எதுவும் அணியாமல், இரவு ஆடையில் அங்கு நின்றாள். அவளது கைகள் மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்தன; உதடுகள் சப்தமின்றி அசைந்தன; கன்னங்களில் பெருங் கண்ணீர்த் துளிகள் மெதுவாக உருண்டு வழிந்துகொண்டிருந்தன.

தூரத்து உறவினர்களாக, நெருங்கியவர்களாக மீண்டும் அவர்கள் இருவரும் தங்கள் மோன வாழ்க்கையையே நடத்தி வந்தார்கள்.

வாரத்தின் இடையில் வந்த ஒரு விழா நாளன்று, பாவெல் வீட்டைவிட்டு வெளியே கிளம்பும் சமயத்தில் தாயிடம் சொன்னான்:

"சனிக்கிழமையன்று நகரிலிருந்து சிலர் என்னைப் பார்க்க வருவார்கள்" என்றான்.

"நகரிலிருந்தா?" என்று திரும்பக் கேட்டுவிட்டு திடீரென அவள் தேம்பினாள்.

"எதற்கென்று அழறே?" என்று பதறிப் போய்க் கேட்டான் பாவெல்.

ஆடையால் அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"தெரியாது. சும்மா..."

"பயமா இருக்கா?"

"ஆமாம்" என்று அவள் ஒப்புக் கொண்டாள்.

அவளருகே குனிந்து அவனது தந்தை பேசுகிற மாதிரி கரகரத்த குரலில் அவன் சொன்னான்:

"பயம்தானம்மா நம்மையெல்லாம் அழித்துவிடுகிறது! நம்மை அதிகாரம் பண்ணி ஆளுகிறார்களே, அவர்கள் நமது பயத்தை வைத்துத்தான் காரியம் சாதிக்கிறார்கள். மேலும் பயமுறுத்திக்கொண்டே இருக்கிறார்கள்."

"கோபப்பட்டுக்கொள்ளாதே" என்று உவகையற்றுப் புலம்பினாள் அவள். "நான் எப்படிப் பயப்படாமல் இருப்பது? என் வாழ்க்கை பூராவுமே நான் பயந்து கொண்டுதான் இருக்கிறேன். ஆத்மாவே பயத்திலேயேதான் வளர்ந்து வந்திருக்கிறது."

"என்னை மன்னித்துவிடு, இதைத் தவிர வேறு வழி கிடையாது" என்று மெதுவாகவும், மென்மையாகவும் சொன்னான் அவன்.

பிறகு அவன் போய்விட்டான்.

மூன்று நாட்களாக அவளது இதயம் துடியாய்த் துடித்தது. தன் வீட்டுக்கு வரப்போகும் அந்த அதிசயமான, பயங்கரமான மனிதர்களைப்பற்றி எண்ணும் போதெல்லாம் அவள் பயத்தால் செத்துச் செத்துத்தான் பிழைத்தாள். அவர்கள்தான் அவளது மகனையும் அந்தப் புதிய மார்க்கத்திலே புகுத்திவிட்டவர்கள்....

சனிக்கிழமையன்று மாலையில் பாவெல் தொழிற்சாலையிலிருந்து வீட்டுக்கு வந்தான்; முகம் கை கழுவினான். உடைகளை மாற்றினான். உடனே வெளியே கிளம்பிச் செல்லும்பொழுது சொன்னான்:

"யாராவது வந்தால், நான் இதோ வந்துவிடுவேன் என்று சொல்" என்று தாயின் முகத்தைப் பார்க்காமலே சொன்னான் அவன். "நீ தயவு செய்து பயப்படாமல் இரு."

அவள் சோர்ந்துபோய் ஒரு பெஞ்சில் சரிந்து தொப்பென்று உட்கார்ந்தாள். பாவெல் அவளை உம்மென்று பார்த்தான்.

"வேண்டுமானால், நீ வேறு எங்கே யாவது போய் இரு" என்று யோசனை கூறினான் அவன்.

அவனது பேச்சு அவளைப் புண் படுத்திவிட்டது.

"இல்லை, எதற்காகப் போகவேண்டும்?"

அது நவம்பர் மாதத்தில் இறுதிக்காலம். பனி படிந்த பூமியில் ஈரமற்ற வெண்பனி லேசாகப் பகல் முழுவதும் பெய்து பரவியிருந்தது. நடந்து செல்கின்ற தன் மகனது காலடியில் அப்பனி நெறு நெறுப்பதை அவளால் கேட்க முடிந்தது.



இருட் படலம் ஜன்னல் சட்டங்களின்மீது இறங்கித் தொங்கி, வேண்டா வெறுப்பாக நிலைத்து நின்றது. அவள் பெஞ்சுப் பலகையை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்தவாறு அங்கேயே உட்கார்ந்திருந்தாள். வாசலையே கவனித்துக்கொண்டிருந்தாள்...

அதிசயமான ஆடையணிகளோடு தீய மனிதர்கள் நாலா புறத்திலிருந்து இருளினூடே ஊர்ந்து ஊர்ந்து வருவது போல் அவளுக்கு ஒரு பிரமை தட்டியது. அரவமில்லாது கள்ளத்தனமாய் நடந்து வரும் காலடியோசை தன் வீட்டைச் சூழ்ந்து நெருங்கிவிட்டதாகவும், சுவரில் விரல்கள் தட்டுத்தடுமாறித் தடவுவதாகவும் அவள் உணர்ந்தாள்.

யாரோ சீட்டியடித்து ராகம் இழுப்பது அவளுக்குக் கேட்டது. அந்த சீட்டிக்குரல் அமைதியினூடே மெல்லியதாகப் பாய்ந்து வந்தது; அது சோகமும், இனிமையும் கொண்டதாகப் பாழ் இருளுக்குள் எதையோ தேடித்தேடித் திரிவதாகப் பட்டது. வரவர அந்தக் குரல் நெருங்கிவந்து, கடைசியில் அவளது வீட்டு ஜன்னலைக் கடந்து, சுவரின் மரப்பலகையையும் துளைத்து ஊடுருவி, உள்ளே நுழைந்து விட்டதாகத் தோன்றியது.

பலத்த காலடியோசை வாசற் புறத்தில் கேட்டது. தாய் திடுக்கிட்டு எழுந்து நின்றாள்; அவளது புருவங்கள் உயர்ந்து நெளிந்தன.

கதவு திறந்தது. பெரிய கம்பளிக் குல்லாய் தரித்த ஒரு தலை முதலில் தெரிந்தது; அதன்பின் அந்தச் சின்ன வாசல் வழியாக ஒரு உயரமான ஒல்லியான உடம்பு குனிந்து நுழைந்தது. உள்ளே வந்த பின் அந்த உருவம் நிமிர்ந்து நின்று தனது வலது கையை உயர்த்தி மரியாதை செலுத்திற்று; பிறகு பெருமூச்சுவிட்டு, அடித்தொண்டையில் பேசியது;

"வணக்கம்!"

தாய் பதில் பேசவில்லை; வணங்க மட்டும் செய்தாள்.

"பாவெல் இல்லையா?"

வந்தவன் மெதுவாகத் தனது கோட்டை அகற்றினான்; ஒரு காலை லேசாக உயர்த்தி அதில் படிந்திருந்த பனித்துளிகளைக் குல்லாயினால் துடைத்துவிட்டான்; மறுகாலையும் உயர்த்தி இது மாதிரியே செய்தான். பிறகு தொப்பியைக் கழற்றி ஒரு மூலையில் விட்டெறிந்தான்; அறைக்குள் உலாவ ஆரம்பித்தான். ஒரு நாற்காலியை, அதற்குத் தன்னைத் தாங்கச் சக்தியுண்டா என்று பார்ப்பதுபோல, அப்படியும் இப்படியும் பார்த்துவிட்டு, பின்னர் அதில் உட்கார்ந்தான்; வாயை ஒரு கையால் மூடிக்கொண்டு கொட்டாவி விட்டான். அவனது தலை அழகாகவும் உருண்டையாகவும், கட்டையாக வெட்டிவிடப்பட்ட கிராப்புடனும் இருந்தது. அவனது முகம் மழுங்கச் சவரம் செய்யப்பட்டு கீழ்நோக்கிப் பார்க்கும் முனைகளைக் கொண்ட மீசையுடனிருந்தது. துருத்தி நிற்கும் தனது சாம்பல் நிற அகலக் கண்களால் அவன் அந்த அறையைக் கவனத்தோடு சுற்றுமுற்றும் பார்த்தான்.

(தொடர்ந்து வரும்)



# வீடு - அப்பா - கணவன்

-ஷர்மிளா இஸ்மாயில்-

**மீ**னாவுக்கு அழுகை அழுகையாய் வந்தது. அடக்க நினைத்திருக்கையில் சொல்லிக்கொள்ளாமலேயே கண்ணீர் வழிந்தோடியது. சமையலறையில் அம்மாவிடம் நீண்டநேரம் மெதுவான, கவலை தோய்ந்த குரலில் அப்பா எதையோ கூறிக்கொண்டிருந்ததை அவதானித்தும் அலட்சியமாய் அப்பால் சென்றவள் தானாக வந்து செவிகளுள் புகுந்த வார்த்தைகளின் அர்த்தம் புரிந்து அதிர்ந்தாள்- அழுதாள்.

அம்மாவின் குரலிலும் அதிர்ச்சி வெளிப்பட்டதும் அவளுக்குப் புரிந்தது.

"எ_என்னாங்க, என்ன சொல்றீங்க நீங்க?" இது அம்மா. "ஆமா. எனக்கும் இது அதிர்ச்சி தந்தது முதல்ல. ஆனா இப்ப ஏற்பட்டிருக்க நெலமைல இதைச் செய்றத தவிர, எனக்கு வேற வழி தோணல." அப்பா அடக்கிய கவலை, வெளிப்பட்ட குரலில் பதில் சொன்னார்.

"என்ன? வீட்டை விற்கப்போகிறாரா? ஐயோ" மீனாவின் நெஞ்சு துடித்தது. அப்பாவின் புதிய பிஸினஸ் முயற்சியில் நட்டம் ஏற்பட்டு, விளைவாக கடன் தொல்லை அவரை நெருக்கும் பயங்கரம். பணக்காற்று ஓஹோவென்று வீசிடும்போது நண்பர்களாக கைக்குலுக்கிக்கொண்ட பலர் நட்ட வரட்சியைக் கண்டவுடன் மறைந்த மாயம் மட்டுமன்றி கடனாகக் கொடுத்த பணத்தை உடனே தா என கண்டித்துக் கேட்கும் கொடுமை. அப்பாவின் தவிப்பு மீனாவுக்கும் பயத்தைக் கொடுத்தது. எதிர்காலம் பற்றி யோசிக்க வைத்தது.

வேதனை மனதின் அடிவாரத்தில் பாரமாய் படிவதை உணர்ந்தாள். அரசாங்க உத்தியோகம் பார்த்து ஓய்வு பெற்ற கணங்களில் அப்பா பிஸினஸ் உலகில் நுழைந்தார். புதிய உலகம். அனுபவக் குறைவு. இருக்கும் நகை நட்டு, காணி நிலம் விற்று மூலதனம் இட்ட போதும் போதாமலாகவே கடன் பெற்று வியாபாரம் துவங்கிய காலம். ஆரம்பம் என்னவோ நன்றாக இருந்தது உண்மை. லாபம் வந்த கணங்களில் பலர் தேடி வந்தனர். மேலும் மேலும் என உற்சாக மூட்டி பலதில் முதலிட வைத்தனர்.

இப்போது நட்டம் என்றவுடன் எவரின் தலையும் தெரியவில்லை. ஆறுதல் கூறவும் அரவணைக்கவும் மீனாவும் அவள் அம்மாவுமே.

□□□

**அ**ந்த அழகிய தோட்டத்து மூலையில் அவளுக்குப் ப்ரியமான கல்லின் மீது உட்கார்ந்து யோசித்த மீனாவை அப்பாவின் குரல் கலைத்தது.

"மீனாம்மா"- கண்ணில் கலக்கம் காட்டாது நிமிர்ந்தாள். "என்ன டெடி?" அப்பாவின் முகத்தில் புன்னகை. கஷ்டப்பட்டு சோகம் மறைத்த திரையது. "நாளைக்கு என் ஒரே பொண்ணோட பிறந்த நாள். என்ன பரிசு கொடுக்கலாம்னு யோசிச்சேன். எதுவுமே தோணலை. என்ன, என்னோட மீனா பேபி நாளையோட பதினாறு வயசு முடிஞ்சு பெரிய பொண்ணாகப் போறா இல்லியா?" உற்சாகம் வரவழைக்கப்பட்ட குரல்.

மீனாவுக்கு மீண்டும் அழ வேண்டும் போலிருந்தது. எப்படி இந்த அப்பாவால் இப்படி இருக்க முடிகிறது?' "டெடி" அழுகை கலந்த குரலுடன் எழுந்தவளைப் பார்க்க அவருக்கு ஏதோவொன்று புரிந்தது. "என்னம்மா செய்றது? எல்லாம் அவன் விட்ட வழி. இல்ல விதி." கலங்கிய கண்களுடன் அவளை ஆறுதல் படுத்திய அவர் மனம் ஆறுதலிழந்து தவித்தது.

வீட்டுச் சாமான்கள் கட்டியாகிவிட்டது. கடைசியாய் ஆசையாய் வைத்த வெள்ளை ரோஜாவை ஒருமுறை முகர்ந்து பார்த்தாள் மீனா. சொட்டுக் கண்ணீர் அதன் இதழில் பட்டுத் தெறித்தது. வெறிச்சோடிக் கிடந்த அறைகளைப் பார்க்க மனம் துடித்தது. இனிமேல் இது என் வீடல்ல. நினைக்கவே நெஞ்சு பிளந்த உணர்வு. நினைவு தெரிந்த நாள் முதலாய் பாதம் பதிந்த மண். ஓடிப் பிடித்து விளையாடிய முற்றம். முற்றத்து மாமரம். தோட்டத்துப் பூக்கள் வாசலில் நிற்கும் வண்ண குரோட்டன்கள். விரல்களுடன் உறவுகொண்ட ஜன்னல் கம்பிகள் அந்த...அந்த... தோட்டத்து மூலை கருங்கல் பாறை... இரவில் ஜன்னலோரம் நின்ற கணங்களில் கீற்றுகளிடையே நிலாவை ஒளித்துக்காட்டி கண்ணாமூச்சு ஆடும் தென்னைகள்... இன்னும்... இன்னும் எத்தனையோ! மீனாவால் அழ மட்டும் முடிந்தது. அம்மாவும் அழுதாள். அப்பாவின் மௌனம் அவரது இதயக் கண்ணீரை உணர்த்திற்று.

□□□

**கா**லச் சக்கரத்தின் சுழற்சியில் அகப்பட்ட மீனாவின் குடும்பம் தற்போது வசதிகளைத் திரும்பவும் வாரிக்கொண்டது. அழகான அமெரிக்கன் மொடல் வீடு, கார் என சொகுசு வாழ்க்கை. என்ன இருந்தும் என்ன? மீனாவுக்குள் ஓர் வெற்றுக் கனவு. அதில் அவளது பழைய இனிய வீடு, அழகிய தோட்டம், மூலைக் கல்லில் அமர்ந்து காற்று வாங்கும் அவள் நெஞ்சினில் நிரம்பிய ஏக்கம். "டெடி, நம்ம பழைய வீட்டை ஒருக்கா போய்ப் பார்க்க ஆசையாயிருக்கு" சொன்னாள். சிரித்தார் அவர். "போம்மா பொல்லாத ஆசை. கசப்பான காலத்தை அது மீட்டுக் கொடுப்பதை நான் விரும்பலம்மா. இப்போ அந்த வீடு யார் யாரோ கைமாறிப் போச்சு." அலட்டாமல் சொல்லி நகர்ந்தார்.

□□□

**நா**ட்கள் ஓடின. கல்யாண பந்தம் வந்து வாய்க்க மீனா திருமதி ஆகிறாள். அன்பான, அழகான, குணமுள்ள ஆண் மகன் அவள் கரம் பற்றிய குதூகலம்.

"மீனா, என் அம்மா, அப்பா மற்ற சாதாரண பெற்றோர் மாதிரி இல்ல. நமக்கு திருமணப் பரிசா அப்பா என்ன கொடுத்தார்னு உன்னால சொல்ல முடியுமா?" கேட்டான் அவன். யோசித்து தோற்றுப் போனாள். அவனே கூறினான்.

அந்தக் கல்யாணப் பரிசு அவளை அதிர வைத்தது. ஆமாம் தமது மகனின் இனிய இல் வாழ்வுக்காய் அந்தப் பெற்றோர் தனிக் குடித்தனம் நடாத்த அளித்தது ஒரு வீடு. ஆமாம். அது மீனாவின் கனவிலும் நினைவிலும் நிறைந்த அவளது பழைய வீடு. "எவ்வளவு தான் புதிய மொடல் வீடுகளிலிருந்தாலும் அப்பாவுக்கும் எனக்கும் ரொம்பப் பிடிச்சது இந்த பழைய வீடுதான் மீனா. ஒரு கம்பீரம். அதில ஒரு மனசைக் கவர்ற அழகு! உனக்கும் பிடிச்சிருக்கா?" அவளது கண்ணீர் துளிகள் மீண்டும் அந்த முற்றத்து மண்ணில் வீழ்ந்து கொண்டிருந்தன.

## சிறுகதை

# மனச் சிறகு

**சிலாபம். பொ. புஷ்பராஜு**

டெலிஃபோன் மணி அலறியது. மூன்று நாட்களாக ஆஃபிசுக்கு முழுக்கு போட்டுவிட்டு படுத்த படுக்கையாக கிடந்த வாசு டெலிஃபோன் ரிசீவரைக்கூட எடுக்க உடம்பில் சக்தி இல்லாது இருந்தான். மலேரியா காய்ச்சலால் துவண்டுபோய் கிடந்த வாசுவுக்கு டெலிஃபோன் மணி சத்தம் பெரிய எரிச்சலைத் தந்தது.

மெதுவாக நடந்து சென்று ரிசீவரை எடுத்து கரகரத்த குரலில் "ஹலோ டபிள் ரூ டபிள் செவன் ஃஸீரோ ஹியர்" என்றான்.

பதிலுக்கு மறுமுனையில் "ஹலோ நதியா நான்"

"ஹலோ நதியா ஹௌ ஆர் யூ?"

"வெரி வெல்"

"பிறகு?"

"நீதான் சொல்ல வேண்டும் நதியா."

"எதைச் சொல்ல, எங்க- உங்க பொண் டாட்டி இல்லையா?"

"இல்லையே நதியா. அவ மார்க்கட் டுக்குப் போயிட்டா."

"நல்லதாப் போச்சு போங்க. அவ இருந்தா பேச விடமாட்டா. சந்தேகப் பிராணி."

"எங்க மூன்று நாளாய் இந்தப் பக்கமே காணோம்?"

"சுகமில்லை. மருந்து எடுத்தேன். சரிவரவில்லை." (இருமிக்கொண்டே)

"நல்ல டாக்டருக்கிட்ட மருந்து எடுங்க. உடம்ப கவனிச்சுக்குங்க. உங்க பொண் டாட்டி சுக்கு தண்ணீர்க்கூட போட்டுத் தர மாட்டாளே. சோம்பேறி முண்டம்."

"சேச்சே அதை ஏன் கேட்கிற?"

வீட்டு முன் வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது. "நதியா கொஞ்சம் இரு! யாரோ கதவைத் தட்டுறாங்க."

ரிசீவரை மேசையில் வைத்துவிட்டு வாசு கதவைத் திறந்தான். பக்கத்து வீட்டு ஆறு வயது விஜி வாசலில் நின்றுகொண்டிருந் தாள். "மாமி இல்லையா மாமா?"

"மாமி இல்லையே கண்ணு. என்னா வேணும்?"

"நேத்து டி.வியில படம் பார்த்துவிட்டு போறப்போ செருப்பை வைச்சுப்புட்டேன். அதை..."

"அதை எடுத்துக்கிட்டுப்போ."

சிறுமி விஜி போய்விட்டாள். கதவை மீண்டும் மூடினான் வாசு.

கையில் ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ."

"ஆ...என்ன சின்னப் பிள்ளை சத்தம் கேட்டுச்சு?"

"இல்லை நதியா, பக்கத்து வீட்டு விஜி புள்ள, செருப்பு எடுக்க வந்தா."

இப்போது பின் வாசல் கதவு தட்டும் சத்தம்.

"நதியா ரிசீவரை டெலிஃபோனில் வைத்து விடாதே கொஞ்சம் அப்படியே இரு. யாரோ பின் வாசல் கதவைத் தட்டுறாங்க."

வீட்டின் பின் பக்கமாக ஓடினான் வாசு. மார்க்கட்டுக்குப் போன ரேவதிதான் வந்து விட்டாளோ..... பயத்துடன் கதவைத் திறந்தான்.

'அம்மாடியோ இவங்கதான் கதவைத் தட்டினாங்களோ?' அவனது மனதிற்குள் ஒரு சந்தோசம்.

"என்ன மாமி வேணும்? ரேவதி வீட்டில இல்லையே!"

பக்கத்து வீட்டு பொக்கவாய் கிழவி அகிலாண்டம் சிரித்தாள். அவள் சிரிப்பதைப் பார்த்ததும் வாசுக்கும் சிரிப்பு வந்தது. சிரிப்பை அடக்கிக்கொண்டான். அகிலாண்டம் அம்மாள் சிரிக்கும்போது அவளின் வாய் அசல் உண்டியல் பெட்டி வாய்போல இருந்தது வாசுவின் பார்வைக்கு.

"இடேய் வாசு ஊறுகாய் ஒரு துண்டு தாடா மவனே. வாய் கசக்குது."

'இந்த நேரத்திலயா இவளுக்கு ஊறு காய்த் தேவை? பிள்ளை பெத்துக்க போறவ மாதிரி ஊறுகாய் கேட்கிறாளே?' என மனதில் அகிலாண்டம் அம்மாவைத் திட்டிக்கொண்டே ஊறுகாய் துண்டுகளை கொடுத்துவிட்டு வேகமாக வந்து மீண்டும் ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ நதியா பக்கத்து வீட்டு கிழவி வந்து தொல்லையைத் தந்துவிட்டாள். கோபிக்காதே?"

"நாளைக்கு வீட்டுக்கு வருவீங்களா?"

"எந்த நேரத்துக்கு?"

"பகலைக்கு."

"உன் அப்பா இருப்பானே?"

"அவரு நாளைக்கு டிக்கோயா போறாரு."

"அப்ப நான் நாளைக்கு பகலைக்கு எப்படியும் வீட்டுக்கு வந்துடுறேன்."

"நாளைக்கு வேலைக்குப் போக வில்லையா?"

"நாளைக்கு வேலைக்குப் போறதாக ரேவதிக்கு சொல்லிவிட்டு எப்படியும் 10 மணிக்கு வர்றேன்."



"கட்டாயம். மறந்துவிடாதீங்க."

"கட்டாயம் வர்றேன். உன் அம்மாவுக்கும் சொல்லி வை."

ரேவதி மெதுவாக பின் வழியாக வந்து வாசு நதியாவுடன் பேசிக்கொண்டிருப்பதை ஒளிந்து கேட்டுக்கொண்டிருந்தாள். அவ ளுக்கு உடல் கொதித்துக்கொண்டிருந்தது. வாசு கிழவிக்கு ஊறுகாய் கொடுத்துவிட்டு கதவை மூடாது வந்தது அவனுக்கே இப்போது விபரீதமாகிவிட்டது.

"முத்தம் ஒன்று தாங்களே?"

"முத்தமா நாளைக்கு" என்று பேச்சை முடிக்கும் முன்பே ரேவதி மார்க்கட்டில் வாங்கி வந்த முருங்கைக்காயால் வாசுவை வாங்கு வாங்கு என்று வாங்கி விட்டாள்.

வாசு தன்னை சுதாகரித்துக்கொண்டே "அடியே நான் என் அக்காள் மகள் நதியா வோடதானே இப்ப கதைச்சுக்கொண்டிருந் தேன். நீ சந்தேகப்பட்டு என்னையும் அடித்துவிட்டாயே." என்று கத்தினான்.

ரேவதியின் மனச் சிறகு தப்புக் கணக்குப் போட்டதை எண்ணி வருந்தினாள். வாசு தன் பழைய காதலி சுவர்ணாவுடன் தொடர்பு வைத்திருக்கிறான் என்று எப்போதுமே தப்பு கணக்குப் போட்டு வந்தவள் ரேவதி. தனக்கு என உரிமை கொண்டவனை வேறு ஒருத்தி உரிமை கொண்டாட அவளது மனச் சிறகு இடம் தரவில்லை. இதை எப்படி தப்பு கணக்கு என எண்ணுவது?

இப்போது ரிசீவரை ரேவதி எடுத்து பத்தேவயது நதியாவுடன் "நதியா பொண்ணுக் குட்டி நாளை பகலைக்கு நானும் வருவேன். அம்மாகிட்ட சொல்லி வை." என்றாள். ■

# வேரில் விடமேறி....

**அ. றஜீசன்**

எப்படியும் இவனை திருத்தி விடுவதே தன் கடமை என கையிலிருந்த ஈர்க்கிலால் தன் பேரனை விளாசிக்கொண்டிருந்தார் என் மாமி. இங்கு என்னால் 'இவன்' எனப்படுபவன் எனக்கு தம்பி முறையான வன். பெயர் விதூஷன். மூன்றரை வயது. சிறிய உருவம். உருவத்தை மீறிய துடிப்புகள்.

அவனின் உடலில் சில கோடுகளாக இரத்தம் வரி வடிவம் தீட்டியிருந்தன. கண்கள் வெறித்து, இரத்தச் சிவப்பாக இருந்தன. அழுகின்றான். கர்ண கடூரமாக அழுகின்றான். தொடர்ந்து சில நிமிடங்கள் அழுவான். அவ்வளவுதான்.

எதற்காக தண்டிக்கப்பட்டானோ அதை



மறந்து அதனையே மீண்டும் மீண்டும் செய்வான். ஏதாவது உடையும், அல்லது யாரையாவது கடித்திருப்பான், நுள்ளிச் சதையை எடுத்திருப்பான். கெட்ட வார்த்தை களை அதன் அர்த்தம் புரியாமல் பிரயோகித் திருப்பான். அர்த்தம் தெரிகின்றதோ இல்லையோ, தனக்கு கோபம் ஏற்படும் போது மட்டுமே அதனைச் சொல்வான். வன்முறை... வன்முறை... அவனது ஒவ் வொரு செயலிலும் வன்முறை ஊடுருவி இருக்கும்.

பிறந்ததிலிருந்து வளர்ந்தது யாழ்ப் பாணத்தில். யுத்தம் ஒரு ஆறாக யாழ் நகருக்குள் புகுந்து மனிதத்தை, அதன் விழுமியங்களை, சமூக பொருளாதார வளத்தை வாரிச் சுருட்டிக்கொண்டு போகையில்; போய்க்கொண்டு இருக்கையில் வளர்ந்தவன்.

மாமி கூறுவா. அவன் வளர்த்து வந்த பூனைக்குட்டி அந்த தெருவில் விழுந்த ஷெல்லினால் சிதறுண்ட பிறகு- அதைக் கண்ட பிறகுதான் அவனது குழப்படி ஆரம்பமானது என்று. இது மாமியைப் பொறுத்தவரைக்கும் ஒரு நிகழ்வாக கழிய விதூஷனிற்கு படிமமாகப் போனது. ஷெல்லின் அதிர்வுகளும் இரத்தத் துளிகளும் கொடூரம் எனும் கவிதையை அவனுக்குள் எழுதி இருந்தன. பக்கத்து வீட்டு பியசேனாவின் பிள்ளைகள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டு இருக்கையில் இவன் தடியொன்றை எடுத்து துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு நிற்பதாக கற்பனை பண்ணி சுட்டுக்கொண்டு இருப்பான். அல் லது ஓடி ஓடி சுவர்களில் மோதி... வன்முறை!

இவனை நேற்று நான் விகாரமாதேவி பூங்காவிற்கு கூட்டிச்சென்று. சத்துட்டு உயனவை பார்க்கச் சொல்லி விடுகையில், அவனால் அதில் அதிகம் லயிக்க முடிய வில்லை. அங்கிருந்தே சீசோ, சறுக்கிஸ், ஊஞ்சல் என்பனவற்றை ஒரு ஒட்டு தலின்மையுடனேயே அவனால் அணுக முடிந்தது. இடையில் என்னிடம் அவனால் கேட்கப்பட்ட கேள்வி; அதன் காரணத்தை எனக்கு உணர்த்தியது.

"ஏன் அண்ணா...சீசோ பிடி, சறுக்கிஸ் எல்லாம் துவக்குப் பிடி மாதிரி இங்கு இல்லை". இவன் கேட்டவுடன் எனக்கு ஞாபகம் வந்தது-யாழ் நகர் விளையாட்டுப் பூங்காக்களின் படங்கள்தான்.

எனவே அவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் அதனை எதிர் பார்க்கவில்லை. அவனுக்கு எனக்குத் தெரியாத பல ஆயுதங்களின் பெயர்கள், விமானங்களின் பெயர்கள் தெரிந்திருந்தது. முற்றிலும் மூன்றரை வயதிற்கு பொருத்த மில்லாமல்.... ஆனால், சாதாரணமான ஒரு மின்விசிறி சுற்றும் விஷயம் அவனுக்கு ஒரு உலக அதிசயம்.

இன்றும், வீட்டுக்கு முன்னால் சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டி ருந்தார்கள். அதில் ஒரு சிறுவன் தன்னை கபில்தேவ் என்றும் இன்னொருவன் வசீம் அக்ரம் என்றும் இன்னும் பலர், மக்மில னாகவும், டென்டுல்கராகவும் தம்மைக் கூறிக்கொண்டார்கள். நானும் அவர்களுடன் 'சின்னவனாக' பங்கேற்று இருந்தேன். அவர்களின் அம்பயராக நான். சிறுவர்க ளுடன் சிறுவனாக மாறுவது ஒரு பேரானந்த மான விஷயம். விளையாட்டு மும்முரமாக நடந்துகொண்டு இருந்தது. "ஐயோ... அம்மா.." என என் வீட்டிற்குள்ளிருந்து விதூஷனின் கூக்குரல் கேட்க ஓடிப் போனேன். என்னவென்று கேட்டேன் பக்கத்து வீட்டு இரண்டு வயது குழந்தையை இவன் கடித்துவிட்டான். அவர்கள் மாமியிடம் முறையிட மாமி ஈர்க்குகளால் அடிக்க ஆரம்பித்து இருந்தா. அவன் அழுதுகொண்டு இருந்தான். மேலும் அடிக்க முயல எனக்கு கோபம், ஆத்திரம், இயலாமை ஒன்று சேர்கிறது. ஓடிச்சென்று கையிலிருந்த ஈர்க்கிளை பறித்தெறிகின்றேன். "அவனை அடிக்காமல், இதற்கு காரணமான காரணி களை அகற்ற முயலுங்கோ" நான் கத்திக் கொண்டே கூறுகின்றேன். மாமிக்கு அது புரியவில்லை; புரியாது. நான் என் அறைக்குச் சென்று கட்டிலில் பொத்தென்று விழுகின்றேன். மனம் முழுதும் ஒரு சுமை அழுத்துவதாகத் தோன்றியது. இனம் புரியாத பாரம் என்னை அழுத்தியது. இந்த அழுத்தம் அவன் யாழ்ப்பாணம் சென்ற பின்னரும் இரு நாட்கள் நீடித்ததுபோல் இருந்தது.

## அன்று தோழியருடன் 'டூயட்' பாடிக்கொண்டு ஜாலியாய்த் திரிந்த நான்....

# இருபது வயதில் ஆடாமல்..........

**எம். சுரேஷ்**

வெளியே மழை. வீட்டிற்குள்ளேயும் சாரலடித்தது. அவள் இன்னும் உறங்க வில்லை. அவன் வருவானென்று காத்திருந் தாள். சிலவேளை அவன் வந்தால் இந்த மழைக் குளிருக்கு இதமாக இருக்கும். கணவன்தானே.... இப்படி நினைப்பதொன்றும் தவறில்லையே? தனக்குள் தானே கேட்டுக்



கொண்டாள்.

அவளை இந்த சமுதாயம் அளவுக் கதிகமாக அடிமைப்படுத்திவிட்டது. திருமணம் முடித்தபின் அது இன்னும் குறுகி "அவள்-அவன்" ஆகிப்போனாள். அதற்குமேல் அவளால் சுயசிந்தனை அடிப்படையில் ஒன்றுமே செய்ய இயல வில்லை.

"உறவு" அது ஒன்றுமட்டும்தான் இனித்தது! அதுவும் அவன் நினைத்தால்தான் இது இன்னும் எத்தனை நாளைக்கு____? சிலபேர் சேர்ந்து என்னைச் சுற்றி ஒப்பாரி வைக்கும் வரையிலா?

சிறுவயதிலிருந்தே கேள்விகள் மட்டும் கேட்டுப் பழகிப்போனவளுக்கு இன்றும் மிஞ்சியது ஆத்மீக உண்மைகள் தட்டுப்படும் சில அறிவார்ந்த கேள்விகள் மட்டுமே!

* * *

அன்று பைத்தியக்காரன்போல் இருந்த ஒருவன் படிக்குமாறு திரும்பத் திரும்ப வற்புறுத்தியபோது அவள் அவனைப் 'பைத்தியமென்று' பல தடவைகள் நினைத் ததுண்டு....... படிப்பைக் குழப்பியவர்களுக்கு மன்னிப்பே இல்லையென்று அவன் திரும்பத் திரும்பப் புலம்பியதன் அர்த்தம் இதுவாக இருக்குமோ......?

### கதைத்துளி

எனக்கு என் கணவனைத் தவிர எதுவுமே தெரியாது. கொஞ்சம் படித்திருந்தாலாவது, கொஞ்சம் சிந்தித்திருக்கலாம், சிறிது நேரம் வெளியே சென்று வரலாம், எனக்குத் தேவையான பொருட்களை நானே வாங்கலாம், என் கணவன் செய்யும் நியாயமற்ற தர்க்கங்களை எல்லாம் 'பொய்' என்று நிரூபித்திருக்கலாம் ஆனால்........

ஒன்று மட்டும் உண்மை.

சொர்க்கமும்-நரகமும், இன்பமும்-துன்பமும் நமக்குள்ளேதான் இருக்கிறது. அது வெளியே இல்லை. நான் சிரிக்கி றேன் என்றால் அதற்கு நான்தான் காரணம். நான் அழுகிறேன் என்றால் அதற்கும் நான்தான் காரணம்....... பிறரைக் குற்றம் சாட்டிப் புண்ணியமில்லை.

நாம் பலகாலங்களுக்கு முன்பு செய்த செயலின் பயனை இப்போது அனுபவிக் கின்றோம். இப்போது செய்கின்ற செயலின் பயனை நிச்சயமாக எதிர்காலத் தில் அனுபவிப்போம். இதுதான் இயற்கை யின் விதி.

அன்று கஷ்டப்பட்டுப் படித்த என் நண்பி ('புத்தகப் பூச்சி' என்று நானும் என் தோழியரும் அவளைக் கிண்டல் செய்வதுண்டு) இன்று ஒரு டாக்டரின் மனைவி. கூடவே ஒரு கம்பியூட்டர் பயிற்சி நிலையத்தையும் நிர்வகிக் கின்றாளாம். அன்று தோழியருடன் 'டூயட்' பாடிக்கொண்டு ஜாலியாய் திரிந்த நான்.......

"ஏன்டி! சனியனே உனக்கு என்னதான் ஒழுங்காச் செய்யத் தெரியும்?"

கணவன் வழமையாய்த் திட்டும் ஒரு வசனம் மனதிற்குள் வந்துபோக அவள் சிரித்தாள். "நான் இன்று அழுகிறேன் என்றால் அதற்கு நான்தானே காரணம்?"


**வாசகர் கவனிக்க! வாசகர் கவனிக்க!**

முரசுடனான சகல
கடிதத் தொடர்புகளுக்கும்-
சிறுகதைகள், கவிதைகள், பேனா நண்பர் அரங்கம்,
புகார்பெட்டி மற்றும் ஆக்கங்களையும்
த.பெ.இலக்கத்திற்கே அனுப்பிவையுங்கள்.
பதிவுத் தபாலில் அனுப்பப்படுபவை
நிராகரிக்கப்படும்.

முகவரி
தினமுரசு வாரமலர்
த.பெ. இல-1772
கொழும்பு.

# இலக்கிய நயம்



# கேட்க மறந்தது ஏனோ ?



தருவது ரசிகன்

டக்....டக்...டக்.

குதிரை வரும் குளம்படிச் சத்தம். நேரமோ நள்ளிரவு. அதனால் தெளிவாகக் கேட்டது அந்தச் சத்தம்.

அவள் செவிக்குள்ளும் விழுந்தது. நெஞ்சுக்குள் எதிரொலித்தது.

உடல் சிலிர்த்துக்கொண்டது. உள்ளம் இனித்துக்கொண்டது.

அவள் அமர்ந்திருந்தது நந்தவனம். தொட்டுத் தழுவியது தென்றலின் இதம்.

ஆனாலும், இதயத் துடிப்பு ஏறிக் கொண்டிருந்தது. உடல் முழுக்க நெருப்பாய் சுடுவதுபோல் தெரிந்தது.

டக்....டக்....டக்...

குளம்படிச் சத்தம் பக்கத்தில் வந்து ஒய்ந்தது.

'அவரேதான்' சகல புலன்களும் சத்தியம் செய்தன.

இப்போது காலடிச்சத்தம். காலடிச் சத்தமே வருகிறவனின் கம்பீரத்தைப் பறையறிவிப்பதுபோல இருந்தது.

'வேகமாய் வருகிறார். அத்தனை அவசரமோ?' மனதிற்குள் நினைத்தாள்.

வெட்கம் உச்சியில் ஏறியது. அதனால் நிமிர்ந்துபார்க்க முடியாமல் தலை தரை நோக்கி கவிழ்ந்தது.

இப்போது அருகிலே வந்துவிட்டான். சந்தனவாசனை நாசியில் புகுந்து சிந்தைக்குச் சொன்னது.

அவன் மூச்சுக்காற்று மேனியில் பட்டு நெஞ்சுக்குள் தவிப்பை உற்பத்தி செய்தது.

'என்ன செய்கிறார். சத்தமே இல்லையே? என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறாராக்கும்?' இரையில் பாயும் புலியாய் வெட்கம் அவளைப் பிடுங்கித்தின்றது.

நிமிர முயன்றாள்! உச்சியில் வெட்கம் ஓங்கி அடித்தது! உள்ளுக்குள் இதயம் வீங்கி வெடிக்குமாப்போலத் துடித்தது!

கட்டறுக்கத் துடிக்கும் களிறுகள்போல நெஞ்சழகுகள் விம்மித்தணிந்து விம்ம எதிரியின் வியூகமாய் அவஸ்தை அவளை சுற்றிவளைத்து தொல்லைப்படுத்தியது.

"ம்ஹூம்.."

அவன் செருமிக்கொண்டான்.

அப்பாடா! இனியாவது ஏதாவது பேசு வாரா? பதில் சொல்வதுபோல நானும் பேச ஆரம்பித்துவிட்டால் வெட்கவேலி சற்று விலகிவிடுமல்லவா, என்று நினைத்தாள்.

பேசவில்லை. தொட்டான். தோளில் தொட்டான்!

சிலிர்த்தாள்; மேனியெங்கும் சிலிர்த்தாள்!

சிரித்தான்! இது போதும்- மெல்ல முயன்று சற்று தலை உயர்த்தினாள். அவன் இப்போது கேட்டான்:

"வந்தாரை வரவேற்கும் பண்பு
மன்னர் குலத்தில் மங்கிவிட்டதோ?"

சற்றுத் தைரியம் வந்தது. சுவையிதழ் மெல்ல அசைந்தது.

"வரவேற்றிருக்கலாம். முரசுகள் அதிர வைத்து, ஆரத்தித் தட்டேந்தி, செங்கம்பளம் தரைக்குப் போர்த்தி, செந்திலகம் நெற்றிக்கு சாத்தி, மலர்கூட்டத்தை மேனியில் கொட்டி வரவேற்றிருக்கலாம். ஆனால்...."

ஆனால் என்று அவள் நிறுத்த, அவன் அருகில் அமர்ந்துகொண்டான். தோள்கள் உரசிக்கொண்டன. நெருப்பு பற்றிக்கொள்ள ஆரம்பித்தது. அவன் கேட்டான்:

"ஏன் இதழ் அசைவை நிறுத்திக்கொண்டாய்? என்ன ஆனாய்?"

"நீங்கள் வந்திருப்பது கோட்டைக்கல்ல. அந்தப்புர நந்தவனத்துக்கு! நாலுபேர் அறிய வரவில்லை. நான் மட்டுமே அறிய வந்திருக்கிறீர்கள்."

அவன் உதடுகளில் விஷமப் புன்னகையின் ஆக்கிரமிப்பு.

"பிரமாதமான விளக்கம். பரமானந்தம் எனக்கு!"

இப்போது அவன் கரம் அவள் முதுகின் பின்புறமாய் நீண்டு இடையை வளைத்துக் கொண்டது. இடையூறு செய்யவில்லை அவள்! இதழில் ஊர்ந்து வந்தது கேள்வி.

"இதில் என்ன ஆனந்தம்?"

"சுகனாந்தம்!"

வயிற்றில் மெல்ல விரல்களால் அழுத்திக் கொண்டு அவன் சொன்ன பதிலின் அர்த்தம் வேறு.

"எனது விளக்கத்தால் பரமானந்தம் என்று சொன்னீர்களே அதனை."

"விளக்கம் பெற வந்தவனிடமே விளக்கம் கேட்கிறாய் நீ! விளக்கம் நான் சொன்னால் அது நேர இழப்பு! விளக்கம் நான் பெற்றால் அது நெஞ்சுக்கு களிப்பு!"

அவன் உதடுகள் பேசிய வார்த்தை இனிப்பாய் இருந்தது. அவன் விரல்கள் பேசிய மொழி சிலிர்ப்பாய் இருந்தது. பலவீனமாய் தடுத்தாள்.

அவளின் முழங்காலுக்கு மூன்றங்குலம் மேலே ஐந்து விரல்களையும் அமர வைத்தபடி கேட்டான்:

"ஏன் பிடிக்கவில்லையா?"

துவண்டு அவன் தோளில் சாய்ந்தபடி கேட்டாள், வெட்கச் சாயம் பூசிய வார்த்தைகளால்,

"என்ன?"

"பிடிக்கவில்லையா என்று கேட்டேன்!"

"எது?"

"நான் படித்தறிய நினைப்பது!"

இரத்த சிவப்பாய் முகம்! அது வெட்கத்தின் அடையாளம்!

உரத்த வெப்பமாய் வெளிவந்த மூச்சு! அது விரகதாபத்தின் வெளிப்பாடு!

அவன் தோளிலே சரிந்த தலை! அது உடன்பாட்டின் தெரிவிப்பு!

அவன் மார்பிலே செல்லமாய் குத்திய கரம்! அது விருப்பத்தின் குறியீடு!

அவன் புரிந்துகொண்டான். அவளின் தலை முடிகளை கோதிவிட்டபடி பேசினான்:

"முரசுகள் அதிரவில்லை என்று யார் சொன்னது? நீ விடும் மூச்சாலே அதிர்ந்து கொண்டிருக்கின்றனவே இரு. முரசுகள். அவை எழுப்பும் மோக முழக்கம்! என்னைக் கண்டதும் களிப்பு வெளிச்சம் காட்டுகின்றனவே உன் இரு விழிகள். அதுதான் ஆரத்தி! உன் செவ்விதழில் பூத்திருக்கிறதே புன்னகை. அது தரும் செங்கம்பள வரவேற்பு! நெற்றியிலே நீ தரப்போகும் கனி முத்தம் போதும்! அதுதான் எனக்குப் பிடித்த திலகம்! நீலமலர் இதழ்கள்தான் உன் விழி இமைகள்! வெட்கத்தில் அவை படபடக்கும் ஒவ்வோர் நொடியும் இருக்கிறதே அதுதான் மலர்சொரியும் காட்சி! இந்த வரவேற்புக்கு ஈடாகுமோ வேறெந்த வரவேற்பும்?"

"போதும்... போதும்.... இப்போது இருப்பதுவோ குளிர்காலம்! உங்களுக்கு எதற்காக குளிரவைக்கும் வீண் சிரமம்?"

"ஓஹோ இது குளிர்காலமாக்கும்."

"ஆமாம்."

"குளிர் உன்னையும் வாட்டுகிறதாக்கும்?"

"ஆமாம்...ஆ...இல்லையில்லை."

"என்ன இது... இப்போதுதானே சொன்னாய்?"

"அது...அது வந்து ஒரு பேச்சுக்கு சொன்னேன்."

"அடிக்கடி பேச்சு மாறுமாக்கும்?"

"அவசியத்தைப் பொறுத்து மட்டும்"

"இப்போது என்ன அவசியம்?"

"நீங்கள்!"

"நானா?"

"ஆமாம். உங்கள் தேவைக்கு பொருத்தமான காரணத்தை தேடுகிறீர்கள். அதுதான் நான்..."

"பேச்சை மாற்றுகிறாய்.."

"ஆமாம்!"

"இனி பேச்சை மாற்றவேண்டாம். பேசும் இதழை பரிமாறு! அது போதும்!"

'இச்' ஒலிகள். காற்றும் வெட்கப் பட்டுத்தான் சுமந்து சென்றது.

□□

"இனி எப்போது அடுத்த சந்திப்பு?" தோழி கேட்டாள்.

அவளோ தவித்தாள். "எப்போது வருவீர்கள் இனி? என்று கேட்க மறந்து விட்டேனே" என்பதனால் வந்த தவிப்பு!

"மறந்துவிட்டேனடி கேட்க."

என்றாள் சோகமாக! தோழி நகைத்தாள்.

"மறந்தது அதை மட்டுமோ?"

"என்னடி சொல்கிறாய்?"

தோழி விளக்கினாள்.


"படமெடுத்தாடும் பாம்பும் ஒடுங்கும் நள்ளிரவின் இடியோசை செவியில் படாதவராய் உன் நாயகன் வருவார். உன் தோள்களில் மென்மையில் தனை மறந்து அவர் தழுவியிருப்பார். நீயும் உனை மறப்பாய். எப்போது செல்வீர்கள் என்று கேட்டுவிட்டால் செல்லும் நினைவு வந்து சென்றிடுவாரோ என்று அக்கேள்வி நீ எழுப்பாமலிருப்பாய்! அவர் செல்லும்போது எப்போது வருவீர்கள் என்று கேட்டறிய இதழ் துடிக்கும். ஆசை துள்ளும். ஆனால் கேட்கமாட்டாய். கேட்கும் விதம் எண்ணி நீ வார்த்தைகளை தேடும்போது அவர் விடைபெற்று சென்றிருப்பார். என்ன சரிதானே என் நினைப்பு?"

கேட்டாள் தோழி. 'ஆம்' என்று வெட்கித் தலையசைத்தாள் தலைவி.

இந்த தவிப்பைத்தான் சங்க இலக்கியமாம் குறுந்தொகையில் கருவூர் சேரமான் சாத்தனார் என்னும் புலவர் பாட்டாலே காட்டுகிறார்.

**"சேறிரோ எனச் செப்பலும் ஆற்றாம்**
**வருவி ரோ என வினவலும் வினவாம்**
**யாங்குச்செய் வாம்கொல் தோழி பாம்பின்**
**பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு**
**நடுநாள் என்னார் வந்து**
**நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னோரே."**

## குறுக்கெழுத்துப் போட்டி இல–81



### இடமிருந்து வலம்

1. நெளிவு, சுளிவான போக்கிற்கு இதனை உதாரணம் கூறுவர்.
2. கடவுளின் நேசர்களுக்குரியது.
4. நிலத்தைத் திருத்த இதுவும் உதவும்.
5. இடையூறு என்பதை இப்படியும் சொல்லலாம்.
7. செத்தபின் இது உலவும் என்பார் சிலர்.
9. வீட்டு முற்றத்திற்கு இது அழகு.
10. மண் இவருக்கு மூலப்பொருள்.
11. மங்களம் இழந்த நிலை.
12. முனிவர்கள் காட்டில் இதை அமைத்து வாழ்ந்தார்களாம்.

### மேலிருந்து கீழ்

1. முரசின் ஐந்தாம் பக்கத்தில் இந்தப் பெயர் இருக்கிறது.
3. அரங்கத்தை இது மறைக்கும்.
4. பிரபல நதி இது.
6. நாட்டையே இந்த முறையால் இழந்தார்கள் பாண்டவர்கள்.
8. கீழ்வானம் சிவக்கும் நேரத்தை இப்படி அழைக்கலாம்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 31.12.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-81**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-79க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சூ | றா | 2 வ | ளி | ■ | 3 தே | னீ |
| ழ் | ■ | 4 த | ம் | 5 ப | தி | ■ |
| ச் | 6 மா | ந் | ■ | ரி | ■ | 7 த |
| 8 சி | த் | தி | ■ | 9 தா | ம | ரை |
| ■ | தி | ■ | 10 ஏ | ப | ■ | ப் |
| 11 கூ | ரை | ■ | மா | ம் | ■ | ப |
| னி | ■ | 12 தூ | ளி | ■ | 13 கூ | டை |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.79இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி. ஷர்மிளா ஜெயராஜேஸ்வரன் கொழும்பு–15.
2. ஜஃபர் சாதிக் பேருவளை.
3. திருமதி. நெலோமி அன்ரனி குறூஸ் செட்டிகுளம்.
4. நவநந்தினி நடராஜா முறக்கொட்டாஞ்சேனை.
5. எம். அப்ஸார் கல்முனை.
6. ஐ. கமால்தீன் புத்தளம்.
7. இ. துஷ்யந்தன் நீர்கொழும்பு.
8. பி. பிரியதர்ஷினி பூண்டுலோயா.
9. செல்வி. ஜமீலா தெபுவனை.
10. எம். அசாம் கொட்டாரமுல்லை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்திப்போர் முகில்கள்

சமீபத்தில் யாருடைய செயல் உங்களை வியப்பில் ஆழ்த்தியது?

எம்.குமார்-கண்டி.

பாப்பரசர் விஜயத்தை பகிஷ்கரிக்க முன்வந்துள்ள பௌத்த மத தலைவர்கள் சிலரின் செயல்! இதன் பின்னால் உள்ள காரணம் பாப்பரசரின் பௌத்த மதம் பற்றிய விமர்சனமா? அல்லது இது பௌத்த நாடு, இங்கு இன்னொரு மதத் தலைவருக்கு விசேஷ வரவேற்பு ஏன் என்ற விரோதமா? எனக்கென்னவோ காரணம் பின்னதுதான் என்று படுகிறது.

□□

இன்று நமக்குத் தேவையானது என்ன?

ஜனனி மதுரலிங்கம்-கொட்டாஞ்சேனை.

நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்து அட்டைகளைப் பார்த்தீர்களா? அநேகமாக புறா படங்கள் தான். அர்த்தம் என்ன? எல்லோரும் சமாதானம் தேவை என்றுதான் விரும்புகிறார்கள். வியாபாரிகளுக்கே அது தெரிந்திருக்கிறது. அரசியல்வாதிகளுக்கும் தெரியும்தான். எப்படி கொண்டு வருவது என்றுதான் பாவம் அவர்களுக்குத் தெரியவில்லை.

□□

சமாதானக் காற்றை சுவாசிக்கத் துடிக்கின்றார்களே தமிழர்கள். இது சாத்தியமானால்...?

செல்லையா ஸ்ரீகாந்த்-ஹட்டன்.

கந்தகக் காற்றை சுவாசிக்க வேண்டி இருக்காது.

□□

தற்போதுள்ள அரசு என்ன சொல்கிறது?

வி.எஸ்.டி.லலி-பொகவந்தலாவ.

ஒரு வருசம் பொறுத்திருந்தா ஓஹோ என்று சொல்லுமளவுக்கு சாதனைகளைக் காணலாம் என்று சொல்கிறது. எனது கேள்வி என்னவென்றால் முன்னைய ஆட்சியாளர்கள் இதைச் சொல்லியிருந்தால் இவர்கள் பொறுத்திருப்பார்களோ என்பதுதான்.

□□

சிந்தியா! இந்திய தேர்தல் ஆணையாளர் சேஷன் போல நம் தேர்தல் ஆணையாளரும் இருந்திருந்தால்?

எஸ்.கண்ணன்-வவுனியா.

அறிஞர் அண்ணா பற்றி தப்பும் தவறுமாய் எழுதிவிட்டு தோப்புக்கரணம் போட்டுக்கொண்டிருக்கிறார் சேஷன். நம் தேர்தல் ஆணையாளருக்கும் அப்படி ஒரு நிலை வரவேண்டுமா என்ன? வேண்டாமே!

□□

அடிக்கடி கட்சி மாறுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

க.லிங்கேஸ்வரன்-பெரிய நீலாவணை-01.

மக்களை ஏமாற்றுவது சுலபம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

□□

## நோபல்பரிசு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ரஜினிகாந்திடம் நாம் கற்கவேண்டிய பாடம் என்ன?

வி.வர்மர்-கண்டி.

தன்னம்பிக்கை, தளரா முயற்சி, தனித்துவம்.

□□

புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தொடர்ந்து அந்த இயக்கத்தை வழிநடத்தக்கூடிய தகைமை யாரிடம் இருக்கிறது?

ஏ.சதாம்ஹுசைமின்-புதிய காத்தான்குடி.

யாரிடமும் இல்லை என்ற பதிலைத்தான் பிரபாகரனும் விரும்புவார் என்று நினைக்கிறேன்.

□□

டியர் சிந்தியா! மறைந்த எம்.ஜி.ராமச்சந்திரன் பிறந்தநாள் எது என்று தயவு செய்து கூறுங்களேன்?

திருமதி சந்திராணி தங்கத்துரை-சவளக்கடை-7.

17.01.1917.

□□

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தில்...?

தேவசுந்தரி ஆறுமுகம்-திருகோணமலை.

வரமாட்டார்தான் வையகத்தே! அதற்காக சோகத்தை சுருட்டி ஒளிக்கவும் முடியாதல்லவா?

□□

எனக்கு சரியன ஞாபக மறதியாக இருக்கிறது. தீர்ப்பதற்கு என்ன செய்யலாம்?

செல்வராஜ் விஜேந்திரா-பூண்டுலோயா.

ஞாபக மறதி இருப்பதை ஞாபகத்தில் வைத்திருக்கிறீரே. அது போதும். பிழைத்துக்கொள்வீர்.

□□

வாழ்க்கை சோகமாக உள்ளது என்ன செய்யலாம்?

விசாகன்-உடப்பூர்.

இப்படியே கேட்டுக்கொண்டிருந்தா எப்படி? "இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு சீர்காழி பாடிய பாடலை வானொலியில் கேட்டுப்பாரும்.

□□

சினிமாவைக் கற்பனை என்கிறார்கள். இதனை நீங்கள் ஏற்பீர்களா?

இரா.சிவநேசன்-மல்வத்தை.

யாவும் கற்பனையல்ல. பத்துப் பலசாலிகளை பட்டுப் பட்டென்று சூச்சியான ஹீரோ அடித்து விழுத்துவது கலப்படமில்லாத கற்பனை. மரத்தைச் சுற்றி ஓடிப் பாடித் தொடுவது ஜாலியன கற்பனை.

□□

ஆண்கள் இரகசியத்தைப் பேணிக் காப்பது போல் ஏன் பெண்களால் முடிவதில்லை?

ஏ.எல்.முகமட் பஸீல்-ஒல்லிக்குளம்.

ரொமப் ரொம்ப பின்னுக்குப் போய் சிந்திக்கிறீர் ஐயா! வந்து காத்திருந்து, கூட இருப்போர்கூட அறியாமல் சிரித்திருந்து, இலக்குக்கு காத்திருந்து பிசகாமல் தாக்குதல் நடத்தியது சத்தியமாய் பெண் என்று அறியப்படும் இந்தக் காலத்திலா இப்படியொரு கேள்வி? வள வள கேஸ் ஆண்களிலும் உண்டு. பெண்களிலும் உண்டு.

□□

பெண்களே பணிபுரியும் பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டது குறித்து...?

ஸலீம் முஹம்மது ஸாதாத்-ஹொறவபொதானை.

தமிழ் நாட்டில் பெண்கள் காவல் நிலையத்தில் பெண்களின் புகார்கள் அலட்சியப்படுத்தப் படுவதாக வந்த செய்தியைப் படித்தேன். மகிழ்ச்சிக்குப் பதில் வருத்தம். எதற்காகத் திறப்படுகிறது என்னும் தெளிவோடு காரிய மாற்றுவதே முக்கியம்.

□□

நோபல் பரிசு இஸ்ரேலிய பிரதமருக்கும், யாசிர் அரபாத்துக்கும, இஸ்ரேலிய வெளி விவகார அமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டது பற்றி.....?

என்.தயானந்தன்-கொழும்பு-11.

அடியைப்போல் அண்ணன் தம்பிகூட உதவார்கள் என்பது சரிதானோ என்று யோசிக்கிறேன். ஏனென்றால் காந்தியவாதிகளின் கதவைத் தட்டாமல், கலகம் செய்துவிட்டு கைகுலுக்குபவர்களைத்தானே நோபல் பரிசும் தேடிப் போகிறது. அடித்தவருக்கும் கொடுக்கிறார்கள். திருப்பி அடித்தவருக்கும் கொடுக்கிறார்கள். ஒன்றுமே புரியவில்லை.

□□

இந்தியாவில் மீண்டும் ஒரு பெண் பிரதமராக வரும் வாய்ப்பு உண்டா?

மரியம் காலித்-கண்டி.

நடந்து முடிந்த தேர்தல்களில் நரசிம்மராவ் சிரிக்க ஒரு வாய்ப்புக்கூட வாக்காளர்கள் வழங்கவில்லை. ஆகவே காங்கிரசை காக்க சோனியா வராவிட்டாலும் பிரியங்கா வரக்கூடும். ஆனால் நாளாகலாம்.

□□

# மகாபாரதம்

அங்கம் 60

**இவ்வாரம் (25.12.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: கீதோபதேசத்தின் காலத்தை நோக்கியே கதையும் நகர்ந்து செல்வதைப் பாரீர்! காலத்தால் என்றுமே கரைத்திட முடியா கருப்பொருட் செறிவுடன் கண்ணன் காட்டிய பாதையும் நிலைத்திடும். இடையில் பலப்பல இறக்கமும் ஏற்றமும் இணைந்தே செல்வதை உணர்ந்திட முடியும்! காலமதாகிய என்னால் எந்தச் சாதனைதனையும் புரிந்திடலாகா! அத்தகை வலிமையை யான் பெற்றிருந்திடில் கங்கையின் மைந்தர் தந்தைக்காக ஏற்ற சபதம் தடுத்திருப்பேனே! பிதாமகரேற்ற கொடிய விரதக் கூற்றினாலன்றோ அவர் மடிதவழ்ந்த அர்ச்சுனனின்று அன்னவர் மீதே அரிய கணைகளை ஏவிடத் துணிந்தனன்!

-காட்சி தொடக்கம்-

துரியோதனன் அருகில் இரதத்தினைச் செலுத்தும்படி அர்ச்சுனன் உத்தரனைப் பணிக்கிறான். துரியோதனன் கால் நடைகளை மேய்த்துக்கொண்டு செல்கிறான்.

அர்ச்சுனனைத் தடுக்கும்படி பீஷ்மர் கிருபரை வேண்டுகிறார்.

*(கடந்த வாரம் இடம்பெற்ற இக்காட்சிகள் இடம் பெறுகின்றன)*

-காட்சி மாற்றம்-

பீஷ்மர் இரு கணைகளை எய்கிறார். அர்ச்சுனனருகே அவை நிலத்தில் வீழ்கின்றன. ஆனால் அர்ச்சுனன் தொடர்ந்து முன்னேறுகிறான். அவனை எதிர்கொள்ள கவுரவ சேனையும் முன் வருகிறது. அர்ச்சுனன் தொடர்ந்து கணைகளை வீசுகிறான். அவை தீயை உமிழ்ந்து கவுரவர் படையினைத் தடுக்கின்றன. தொடர்ந்து, அம்புகளைத் தொடுத்து அப்படைகளால் ஊடுருவ முடியாத வேலி ஒன்றையே அர்ச்சுனன் அமைத்து விடுகிறான். துரியோதனனும் கர்ணனும் கால்நடைகளைக் கவர்ந்து செல்கின்றனர். கர்ணனும் அர்ச்சுனனும் எதிரெதிரே சந்திக்கின்றனர்.

கர்: எச்சரிக்கிறேன் அர்ச்சுனா!

பிரு: நீயா என்னை எச்சரிக்கின்றாய்? உன்னுடன் போரிடல் எனக்கவமானம்! தேரோட்டி மகனே! உன்னைத் தீர்க்கவே நானாணை யிட்டேன்! இன்றே என் சபதம் ஈடேற வேண்டுமா?

கர்: வீண் வார்த்தைகளை உதிர்த்திடல் பயன் தரா! வில்லினை எடுத்துன் வித்தையைக் காட்டு!

கர்ணன் விடும் பாணங்களை தன் பாணங்களால் அர்ச்சுனன் உடைத் தெறிகிறான். மற்றொரு பாணத்தால் தோழில் காயம் படுகிறது.

பிரு: கோழையைப்போல் நீ ஓடுகிறாயா? அர்ச்சுனன் கணைகளை எதிர்த்திட முடியுமா?

கிருபாச்சாரியாருக்கும் அர்ச்சுனனுக்குமிடையில் நடைபெற்ற விற்போரில் கிருபரின் வில் முறிகிறது. அவருடைய கவசமும் உடைகிறது. கிருபர் தன்னுடைய கதாயுதத்தை ஏவுகிறார். அது சுக்குநூறாக உடைகிறது.

துரோணாச்சாரியாரும் அர்ச்சுனனுடன் பொருதுகிறார். அவருடைய கவசமும் சிதைகிறது. அஸ்வத்தாமனும் அர்ச்சுனனுடைய பாணங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமற்போக துச்சாதனன் முன் வருகிறான்.

அர்ச்: துன்மார்க்கத் துரோகியே துச்சாதனனே! நீ செய்த கேடு என் நெஞ்சம் நிறைந்தது. இருந்த போதிலும் இப் போதுன்னுயிர் குடித்திடமாட்டேன். அண்ணன் பீமனுன் நெஞ்சினைப் பிளந்து உதிரம் பெருக்கிட ஆவலோடுள்ளான். அதுவரை பொறுத்திரு!

துச்சாதனன் மீது அர்ச்சுனன் வீசிய பாணங்கள் அவனைக் காயப்படுத்தி அவனுடைய தலையிலிருந்த கிரீடத்தையே மண்ணில் உருட்டி விட்டன. மீண்டும் கர்ணன் வருகிறான். அவன் எய்த பாணம் ஒன்று அர்ச்சுனனின் கையில் காயத்தை ஏற்படுத்தியது. இளவரசர் உத்தரனும் காயமடைகிறான்.

அர்ச்: மன்னர் மகனே! இன்று நீ பெற்ற காயம் உன்னையே முழு மனிதனாக ஆக்கியே விட்டது!

அர்ச்சுனன் கர்ணனின் வில்லினை உடைக்கிறான். பீஷ்மர் அர்ச்சுனனுடன் போர் புரியும்போது அவருடைய நான்கு வில்களையும் அர்ச்சுனன் உடைத்ததுடன் அவருடைய கவசத்தினையும் பல இடங்களில் உடைக்க அவர் நிலை தடுமாறுகிறார். துரியோதனனையும் அர்ச்சுனன் பாணங்கள் காயப்படுத்துகின்றன. துரியோதனன் தனது ஈட்டியினை வீச, அதனை வீசிய கையையே அர்ச்சுனனுடைய கணை காயப்படுத்துகிறது. பீஷ்மர் விடும் பாணம் அர்ச்சுனனின் மார்பில் சிறிய காயத்தை ஏற்படுத்துகிறது. அப்போது அர்ச்சுனன் மந்திரம் ஜெபித்தவண்ணம் ஒரு அம்பினை எய்கிறான். அந்த அம்பு புகையினைப் பரப்புகிறது. இதனால் பீஷ்மர், கிருபாச்சாரியார், துரோணாச்சாரியார், துரியோதனன் முதலானோர் மயக்கமடைந்து வீழ்கின்றனர்.

உத்: இத்தனை சிறப்புடை அம்பின் பேரென்னவோ?

அர்ச்: 'சம்மோஹன்' என்பதே இதன் பெயராகும்!

உத்: மயக்க நிலையினில் இவர்களை விடாமல் மாய்த்திட்டால் என்ன மாசிலமாப் பெரியோய்?

அர்ச்: உந்தன் அக்காள் உத்தரை இங்குள வீரரின் உடு துணித் துண்டுகள் எடுத்து வரும்படி என்னிடம் கூறினாள். உயிரற்ற உடலின் உடுதுணி அனைத்தும் கறை படிந்திடுமே! கர்ணனின் கழுத்தில் தொங்கிடும் துணி இளஞ் சிவப்பானது. துரியோதனன் துணி கடுஞ் சிவப்பாகும். கறுப்புத் துணியது துச்சாதனனது. அஸ்வத்தாமனோ நீலம் அணிந்துளான். உத்தரை வைத்துள பொம்மைகட்கிவையே உத்தமமாகும். சேர்த்து வைத்துக் கொள்!



உத்தரன் துணிகளைச் சேர்த்து வந்து அர்ச்சுனனிடம் காட்டுகிறான்.

உத்: துணிகளின் தூய்மை கெடு முன்னே சேர்த்தேன்! இனி அவரனைவரின் உயிரினைப் போக்குதல் சுலபமதாகுமே!

அர்ச்: மயக்கமுற்று மண்மீது கிடப்பவர் இம்மாநிலத்தின் மாண்புறு வீரர்கள். இத்தகையோருயிர் மாய்த்திடலழகா? மயக்கமுற்றிருப்போர், ஆயுதமிழந்தோர், குற்றுயிராகக் கலக்கமுறுவோர் ஆகியோரிவருயிர் பறித்திடல் என்றும் சத்திரியர்க்கொரு தர்மமுமாகா! 'குந்தியின் மைந்தன் அர்ச்சுனனன்று அவல நிலையிரு அரிய வீரரை அறம் மறந்தழித்தனன்' என்றொரு நாளில் வரலாறுரைக்க வழி தரமாட்டேன். உன்னுயிர் காக்கவே இந்நிலை தன்னை அவர்க்களித்தேன் நான்! மன்னவர் மத்சய நாடு மீண்டிருப்பார். மகன் தனைக்காணா(து) கலக்கமடைவார். நாடு திரும்புதல் நன்மை பயக்கும்!

□□□

உத்தரன் தேர்ச் சாரதியாகப் போய் அமர்கின்றான். அதனை அர்ச்சுனன் தடுக்கிறான்.

அர்ச்: பிருகன்னளையிவள் தனக்கான இடமிது. பின்னாசனத்திலே போயிருந்திடுவீர்!

உத்: தங்களின் உண்மை உருவினைத் தெரியா திருந்தவேளையில் நடந்த தவறது. அத்தவறினை நான் இனிப் புரிந்திடல்தான் முறையல்ல ஐயா!

அர்ச்: மன்னவர் மகனே! நான் சொல்வதையே நயம்படக் கேட்பீர்! பாண்டவர் தம்மை பணியாள் போல வைத்திருந்தோமென மன்னவரறிந்தால் அவருயிர் பிரிந்திடும் கவுரவர் சேனை; பீஷ்மர் முதலாம் பெருவீரரெலாம் வெற்றிகொட்டிய வீரன் நீயென மன்னவர் கருதிடல் நன்மை அளித்திடும். தயக்கம் வேண்டாம் தேரினில் அமர்க!

உத்தரனை இருக்கையில் அமர்த்திய அர்ச்சுனன் பிருகன்னளை உருவில் இரதத்தினைச் செலுத்துகிறான்.

உத்: துரோணரின் சீடரே புறப்படுவோமா?

அர்ச்: புறப்படுவோம் நாம். இவ்வாயுதங்கள் இருந்த இடத்தில் பத்திரமாக வைத்துப்பின் ஏகலாம்!

உத்: அத்தனை பெரிய வீரரையெல்லாம் வென்று விட்டவன் நானெனக் கூறினால் தந்தை அக்கூற்றினை நம்பிட வேண்டுமே!

அர்ச்: அன்புக்குரிய உன் அப்பா நிச்சயம் உன்னுரை தன்னையே நம்பியே தீருவார். கலக்கம் நீக்கிடு கவலையே வேண்டாம்!

□□□

காலத்தின் குரல்: எல்லாம் வல்லவன் என்றே என்னை இயம்புவோர் பலருளர். கர்மம் தன்னையும் உயிர் வாழ்வதனையும் இருபுறமேந்திய துலாக்கோலின் நடுநிலை ஊசியின் வடிவில்தான் நானுளேன். துரியோதனனும் கர்ணனும் சகுனியும் தம் சார்பினுக்கே தராசினை நகர்த்துவர்! இதனால் விளைவது தீமையே அன்றி நன்மை வேறில்லை! வெற்றியும் தோல்வியும் விளைவது எவரிடம் என்பதை எம்முன் காண்கிறோமன்றோ?

□□□

மத்சய நாடு-கங்கனன், சௌரந்தரி மற்றும் அரசி சுதேசினி இருக்க அரசர் விராடர் அமைதியற்றவராக உலவுகிறார்.

விரா: உத்தரன் தனிமையில் உற்றதோர் போர்முனை ஏகிடவிட்டது உத்தமமான செயலது அல்லவே! கவுரவ சேனையில் மாபெரும் வீரர்கள் அணி வகுத்திருப்பர்! பீஷ்மரும் துரோணரும் துரியோதனனுடன் கர்ணனும் இணைந்தே பெரும் படைதன்னுடன் பொருத வந்திருப்பர். தேவர்தம் படையுடன் இந்திரன் வரினும் இணையிலாக கவுரவ சேனையை வீழ்த்திட இயலுமா கூறுவீர்!

கங்: கவலை தவிர்த்து காத்தேயிருங்கள்! வெற்றிச் செய்தி விரைந்தே வந்திடும்! பிருகன்னளையவள் சமர்புரிகலைகளில் சிறப்பினைப் பெற்றவள்!

விரா: கங்கா புத்திரர், துரோணாச்சாரியார் மற்றுள வீரர்கள் அத்தனை பேரையும் வென்றிடும் சக்தி அவளிடமுள்ளதோ? ஆணுமற்ற பெண்ணுமற்ற முழுமையடையா அலியவள் தன்னை ஆர்வமுடனே போற்றுகின்றீரே! என் மகன் பற்றிய கவலை எழுந்தே எந்தனை ஏங்க வதைத்தழிக்கிறதே! விளக்குகளனைத்தையும் அணைத்தே விடுங்கள்! விசனமே என்னை வாட்டுதலறிவீர்!

தோழிப் பெண்ணொருத்தி வருகிறாள்.

தோழி: வாழ்த்துக்கள் மன்னவ! மகத்தான தகவல் வந்திருக்கின்றது. முத்துமாலை தனை பரிசாயளிப்பீர்!

விரா: வாழ்த்துதலிப்போ அவசியம் தானோ? எனதரும் மைந்தன் எமனுலகேகிய செய்தியும் தானொரு வாழ்த்துதலாகுமோ?

தோழி: வெற்றி வீரனாய் வீறு நடையுடன் தங்கள் புதல்வன் வருவதாகவே தகவல் வந்துள்ளது!

கங்: பிருகன்னளை அவள் இணையும் படைக்கோர் தோல்வியே என்றும் அணைவதேயில்லை!

விரா: அன்னவள் பெயரினை மறக்க மாட்டீரோ? வெற்றிச் செய்தியை கூறியதாரோ?

தோழி: நகரெங்கணுமே இதுவே பெருங் கதை!

முத்துமாலை ஒன்றினை மன்னவர் தோழிக்கு அளிக்கிறார்.

விரா: கவுரவப் படையினை கதிகலங்கடித்தே விரைகிறான் என் மகன் வீரக் கொடியுடன். நாடு நகர்புறம் நாற் திசை எங்கணும் நல்லலங்கார வளைவுகள் கட்டி வரவேற்பளித்திட வேண்டுவதியற்றுக! ஆலயமனைத்தும் பூசைகள் பொலியவும் ஆடலும் பாடலும் ஆய்வுள கலைகளும் அணி அணியாக அகமகிழ் வூட்டவும் அரண்மனை வாசிகள் அணிதிரண்டேகவும் ஏற்பாடு செய்க! நகர வாயிலில் உத்தரைப் பெண்ணாள் ஆரத்தி எடுக்கவும்! அத்தனை பணிகளும் சித்தமதாக சிறப்புடன் நடக்கட்டும்! சௌரந்தரி நீ சதுரங்க ஆட்டக் காய்களைக் கொண்டு வா! கங்கணனோடு நான் ஒரு சில கட்டம் ஆடியே தீருவேன்!

கங்: சூதும் வெறியும் தீதானவையே! அளவிலா மகிழ்ச்சியும் போதையே தருவதாம்!

விரா: இன்றெனை ஆட்டத்தில் வென்றிடலாமென நினைக்கின்றாயா? திரிவேத மன்னவன் போரினில் என்னணி வென்றிட உதவிய உந்தனுக்காக இன்று நம் போட்டியில் வென்றிட விடுகிறேன்.

சௌரந்தரி பகடைகளைக் கொண்டு வருகிறாள்.

விரா: பிதாமகர் படையினை என் மகன் வென்றது பெரு மகிழ்வாக எனைத் தாவுகின்றதை தடுத்திடவேயொரு மார்க்கம் தெரிகிலேன்!

கங்க: பிருகன்னளை உடன் சென்றதனாலே பெரு வெற்றி சார்ந்ததை மறுத்திட முடியுமா?

விரா: *(கோபமாக)* அந்த அலியுடன் எந்தன் மைந்தனை எவ்வாறுதான் நீ ஒப்பு நோக்கிடுவாய்? பீஷ்மரும் கர்ணனும் துரோணரும் கிருபரும் ஈடிணையற்ற உயர்பெரு வீரர்கள்! இவர்களை வென்றிட பிருகன்னளையால் எவ்வாறியலும்?

கங்: பிருகன்னளையின் வீரத்துக்கெவரும் இணையாகமாட்டார் என்பது உறுதி!

கோபங்கொண்ட விராட மன்னர் பகடைக் காய்களை கங்கணன் முகத்தில் வீச காயம் படுகிறது. சௌரந்தரி தண்ணீர்க் குவளையுடன் சென்று காயத்தைத் துடைக்க உதவுகிறாள்.

தோழி: வாழ்க மன்னவா! வெற்றி பெற்ற வீரர்களையுடன் இளவரசராங்கே வந்து விட்டாரவர். வாழ்த்தினைப் பெற்றே வருவதைக் கண்டு உத்தரை ஆரத்தி ஏந்தி நிற்கின்றார்!

கங்: *(சௌரந்தரிக்கு மட்டும் கேட்கக் கூடியதாக)* இளவரசருடன் இளையவன் அர்ச்சுனன் இங்கே வருவதை உடனே தடை செய்! என் முகம் தன்னில் காயம் கண்டால் மன்னவன் தன்னை மாய்த்தே விடுவான்!

□□□

உத்தரனும் பிருகன்னளையும் வரும்போது உத்தரை ஆரத்தி எடுத்து கண்ணூறு கழிக்கிறாள்.

உத்: அக்கா இந்த ஆரத்தியை நீ...

பிரு: *(இடைமறித்து)* இளவரசருக்கே எடுத்தாக வேண்டும். தங்களின் பொம்மைகள் அழகுடன் ஜொலிக்க கவுரவ வீரரின் அணி கொணர்ந்துள்ளோம்!

இளவரசி: பிருகன்னளையே! சிறப்பான சேதியால் மகிழ்வினை ஊட்டினாய்!

தன்னுடைய வளையல் ஒன்றினை இளவரசி உத்தரை பிருகன்னளைக்கு அளிக்கிறாள்.

பிருக்கன்னளையை சௌரந்தரி ஒருபுறம் அழைத்துச்செல்ல, கங்கணன் தன் காயத்தைக் கழுவிக்கொள்கிறார்.

இளவரசர் உத்தரன் தன் தந்தையின் தாழ் பணிந்து வாழ்த்துப் பெறும்போது, கங்கணன் முகத்தில் காயத்தைக் கண்டுவிடுகிறான்.

உத்: அன்னவர் முகத்திலோர் காயமுளதோ?

விரா: இப்பொல்லாதவனை நானே தாக்கினேன்!

உத்: *(கங்கணரிடம்)* மன்னவர் பேரால் பின்னவன் நானே மன்னிப்புக் கோரினேன்-மன்னித்தருள்க..!

கங்: மன்னன் மகனே! மன்னிப்பை என்றோ முன் வைத்துவிட்டேன். எந்தன் உடலில் ஓடும் குருதியில் ஒரு துளி வீழிலும் மண்ணுக்குரிய நாடே அழியும்! இத்தனை காலமும் இந்த மண் தானே அடைக்கலம் தந்தது! அத்துணை உதவியை எப்படி மறப்போம்?

<u>பின்னணிப் பாடல்:</u>

**நீதியும் நேர்மையும் நன்னெறி முறைகளும்**
**விதியாய் மதித்து வாழ்ந்திடுமெவரையும்**
**சதியால் சாய்த்தே மாய்த்திட முயல்பவர்**
**கதிகலைந்தொழிந்தே கலக்க முற்றழிவர்**

□□□

பிருகன்னளை அரசரையும் அரசியையும் வணங்குகிறாள்.

விரா: மகனே என்னருகில் வந்தமர்வாய்! கங்கையின் மைந்தர் பீஷ்மாச்சாரியார்! அவருடன் வந்தவர் அனைவரும் அரிய அருந்திறல் வீரர்கள்? அத்தனை பேரையும் எத்தகை பேற்றுடன் வென்றிட முடிந்தது? விபரமறியப் பேராவலாயுள்ளேன்! கூறுவாய் மகனே! குறைவிடாதனைத்தையும் கூறுவாய் எனக்கே!

உத்: என்னால் மட்டும் அன்னவர் தம்மை வீழ்த்திட முடியுமா? போர் முனைவிட்டே ஓடிடத் துணிந்தேன். தெய்வீக உரு ஒன்றென்னை அணைத்தது. சாரதியாக எந்தனை அமர்த்தியே சமரிடத் தொடங்கி வெற்றியைத் தந்தது. பீஷ்மர், கர்ணன், துரோண முனியுடன் துரியோதனனும் வெருண்டோடிடவே வீரப்போர் புரிந்தெமது மானம் காத்தது!

பிருகன்னளை உருவில் அர்ச்சுனன் தலையினை ஆட்டி உத்தரன் கூற்றை ஆமோதித்தான்.

விரா: அத்தனை சக்தியை அடக்கமாய்க் கொண்ட அந்தப் பெருந்தகை இப்போதெங்கே?

உத்: வெற்றியை ஈட்டித் தந்ததக்கணமே அந்த உருவம் எங்கோ மறைந்தது.

விரா: பிருகன்னளையே! எதிர்ப்பட்ட பேரபாயம் தாங்கி நீ என் மகனுடனே இருந்ததனாலுனை என்றும் மறவேன்!

பிரு: எனது கடமையைத்தானே செய்தேன்? இளவரசர் தன் அடக்கத்துடனே அமைந்துரைத்திட்டார். தெய்வீக வீரனின் தகைமையதுடனே இளவரசரும் இணையுடன் பொருதினார்!

விரா: என் மகன் சாதனை தன்னை நீ நேரில் பார்த்தனையன்றோ?

உத்: அப்பா! அக்காள் ஆசையுடனே கோரிய துணிகளைக் கொண்டு வந்துள்ளோம்!

சுதேசினி: உத்தரை இனி நீ சின்னவளல்லவே! பொம்மை வைத்தாடும் ஆட்டங்கள் விடுத்தே பெண்மைக்குரிய பண்புகள் அறிக!

விரா: சின்னவளான என் மகள் தன்னை தூரவே விலக்கிடத் துணிந்துவிட்டாய் நீ!

சுதே: பெண் பிள்ளை என்றும் ஆண் மகனொருவனின் மணமகளாக ஏகவேண்டாமா? ஆசையோடவளை அணைத்து மகிழ்வதை அடக்குதல் நன்றென எனக்குத் தோணுதே!

விரா: பெண் மகள் மணமகளாவது உறுதிதான்! உண்மை! அதற்காய் அருகதையற்ற எவனோ ஒருவனை இவளுடனிணைத்தல் அறிவுடைத்தாகுமா? ஏற்ற மணமகன் தேர்ந்தெடுத்தல்லவோ மணவினை நிகழ்த்துதல் மகளினைப் பெற்ற பெற்றோர்க்கழகாம்!

உத்: அக்கா! இனி வரும் நாட்களை எண்ணியே கடத்துக! எங்களை விட்டு நீ உன் கணவனிடம் ஏகிடும் காலம் விரைந்தோடி வந்திடும்!

-காட்சி மாற்றம்-

மத்சய நாட்டு அரண்மனை-நடன அரங்கில் பிருகன்னளையை உத்தரை சந்திக்கிறாள். உத்தரைக்கு திருமணம் பற்றிய பேச்சு எழுவதுபற்றி இருவரும் பேசுகின்றனர். துவாரகையில் கிருஷ்ணரின் அரவணைப்பில் வளரும் அபிமன்யுவே உத்தரைக்கு ஏற்ற மணாளனாவான் என்று பிருகன்னளை கூறுகிறாள்.

இளவரசர் உத்தரனும் பிருகன்னளையிடம் வந்து மாறு வேடங்களைக் களைந்து சுயரூபம் எடுக்கும்படி கோருகிறான். அண்ணன் யுதிஷ்டிரன் ஆணைபெற்று அடுத்த நாளே தாங்கள் யார் என்பதை வெளிப்படுத்தப் போவதாக பிருகன்னளை கூறுகிறாள்.

உத்: துரோணரின் சீடரே! சொல்லொணாத் துயரினை இந்த நாட்டின் அரண்மனை தன்னிலே அனுபவித்துள்ளீர். அத்தனை துயரையும் பொறுமையின் துணையுடன் பொறுத்திருந்தீர்கள்! எல்லாவற்றையும் மறந்திட வேண்டும்! மன்னிப்பதையும் நல்கிடவேண்டும்!

அர்ச்: அரவணைத்தன்புடன் நுவரெமையும் பாஞ்சாலியுடன் ஆதரித்திட்ட அரிய இந்நாடே பெருமைக்குகந்த பெருமனை நாடு. என்றோ ஓர்நாள் இந் நாட்டின் காவலன் நீயே ஆவாய்! நீதி நேர்மை நேசப் பண்புகள் நிலைபெற என்றும் ஆட்சி நடத்தி அரும் பேறடைவாய்!

□□□

அரசவையில் அரசன் போன்ற வேடத்துடன் யுதிஷ்டிரன் இருப்பதைக்கண்ட விராட மன்னன் கோபமடைகிறார்.

விரா: கங்கணா! என்னடா இந்த வேடம் புரிந்து நீ அரசர்க்குரிய ஆசனத்தமர்ந்து அவமதிப்பியற்றினாய்?

உத்: அப்பா! அன்னர் அமர்வதால் பெருமை எமக்கே!

விரா: என்ன சொல்கிறாய் நீ?

அர்ச்: உத்தரன் கூற்று உண்மைதான் மன்னா! இந்திரன் தானும் இந்த உத்தமன் அமர்வதற்காக தன்னரியணையினை விடுத்தே எழுவான். சக்கரவர்த்தி தர்மத் தலைவன் யுதிஷ்டிர மன்னவர் இவர்தான் என்பதை அறிவீர் மன்னவ!

விரா: அப்போ, வல்லபன் என்பவன் பீமன்தானோ? துரோணரின் மாணவன் வில்லுக்கு விஜயன் அர்ச்சுனன் தானும் நீதானாகுமோ?

அர்ச்: ஆமாம் மன்னவ! இடையர் வேடத்திலிருந்த இவ்விருவரும் நகுலனும் சகாதேவனுமாவார்!

உத்: அந்தப்புரத்தில் அரசியின் தோழியாய் இருந்த பெண்ணே பாஞ்சாலியாவார்!

விரா: உண்மை உணரா கண்ணியமற்ற கபோதியாய் நாங்கள் கடியவார்த்தைகள் கூறி இழிந்தோம். கருணை கூர்ந்தெமை மன்னிக்க வேண்டும்! மன்னர் மன்னவ! எத்தகை கைமாறு இதற்கிணையாகுமோ?

யுதிஷ்: எவருமே அறியா அஞ்ஞாத வாழ்வுக் கருந்துணை புரிந்தெமை அன்புடன் காத்தீர்! கைமாறு செய்தல் எம் கடனன்றோ!

விரா: என்னரும் வேண்டுகோள் ஒன்றுண்டறிவீர்! என் மகள் உத்தரை தன்னையும் பார்த்தன் மணமகளாக ஏற்றிட வேண்டும்!

அர்ச்: உத்தரை எந்தன் மாணவி-அதனால் மருமகளாக ஏற்பதே கடனாம்-துவாரகை நகரில் கண்ணனின் அன்பில் களிப்புடன் வளரும் என் மகனுள்ளான். அபிமன்யுவெனும் அரும்பெரும் வீரனை உத்தரை மணாளனாய் அடைவதில் சம்மதம்!

-காட்சி மாற்றம்-

துவாரகை-சுபத்திரை ஆபரணங்களை வரிசையாகப் பரப்பி வைத்திருக்கிறாள். பலராமன் அங்கு வருகிறார்.

பல: என்ன சுபத்திரா! நகைகளையெல்லாம் பரப்பி வைத்துள்ளாய்?

சுப: அண்ணன் கண்ணன் உன்னிடம் எதனையும் கூறவே இல்லையா? 'அபிமன்யு திருமணம் ஆயத்தமாகலாம்-ஆயத்தமாயிரு' என்றவன் கூறினான், மருமகளுக்காய் தெரிந்தியற்றிய இவையெலாம் எப்படி பொருத்தமாகுமா? பார்த்துக் கூறண்ணா!

பல: எனக்கு முன்பே கண்ணன் செய்தியை என்றோ அறிந்துளான். விராட நாட்டிலிருந்து அர்ச்சுனன் விடுத்த ஓலை இன்றுதான் வந்தது. விராடரின் மகளாம் உத்தரை குமாரியை உன் மகன் அபிமன் கைத்தலம் பற்றிட அனைத்தும் ஆயத்தமாகிவிட்டதாம். பாரத நாட்டின் காவலர் அனைவர்க்கும் யுதிஷ்டிரர் ஓலைகள் அனுப்பியுள்ளாராம்!

சுபத்: அஸ்தினாபுரிக்கும் ஓலை போயிருக்குமோ?

பல: ஏனில்லாமல்...! ஆயிரமாயினும் ஒரே குலமல்லவா?

<u>பின்னணிப் பாடல்:</u>

**பாண்டவர் பூண்ட அஞ்ஞாத வாச**
**காலக்கெடுவதும் கடுகி முடிந்ததும்**
**மீண்டும் தம்மாட்சியை விளக்கிடு நினைவினில்**
**வேண்டிய முடிவினை வகுத்திடு வேளையில்**
**விராடரின் புதல்வியாம் உத்தரை தன்கரம்**
**வீரருள் வீரனாம் அபிமன்யு வசம்**
**பொருத்திட முகிழ்த்தமட் குறித்துடன் முடங்கல்**
**கருத்துடன் மன்னவர்க்கனுப்பியே வைத்தனர்.**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது

அருள் ஜுவலர்ஸ்




வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331






Kala
JEWELLERY



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
433686




புதுமையாக வடிவமைக்கப்பட்ட நத்தார் தாத்தாவோடு
போஸ் கொடுப்பவர்தான் அதனை வடிவமைத்தவர்.

# எல்லோரும் நலம் வாழ நான் வாழ்த்துவேன்

இவர்களுக்கு யோர் அற்ற உலகை நான் விட்டுச் செல்வேனோ?

# எங்களை வியக்கலாம்

தருவது விபோட

தினமுரசு ராமலர்



இவை இரண்டும் அன்னங்கள். திடீரென்று 'தாலி மூட்' வந்து விட்டதால் நடனமாடத் தொடங்கி விட்டன. அந்த நேரம் பார்த்து 'கிளிக்'! பிரான் சில் எடுக்கப் பட்ட படம் இது.

நாய்களை மட்டுமல்ல பன்றிகளையும் மேலை நாடுகளில் செல்லமாக வளர்க்கத் தொடங்கிவிட்டார்கள். பன்றி வளர்ப்பில் பிரியம் அதிகமுள்ளவர்களில் முதலிடம் பெண்களுக்குத்தான். இந்த பன்றிகளோடு இருப்பது உலகப் புகழ்பெற்ற மாடல் அழகி வலென்னா கிரேன்.



# பன்றிக் காதல்



# ஓயாமல் ஆடுகிறோம்

டென்னிஸ் போட்டிகளும் பார்வையாளர்களை கவர்ந்து இழுப்பதில் முன்னணியில் இருக்கின்றன. பெண்கள் லாவகமாக ஆடுவதைக் காண ஆண் இரசிகர்கள் அலை மோதுகிறார்கள்.

ஸ்ரெபி கிராப் ஆண் இரசிகர்களுக்கு பிடித்த டென்னிஸ் நட்சத்திரம். சமீபத்தில் தோல்விகள் அவரை பாதித்த போதும் மீண்டும் வெற்றிகள் குவிக்கும் நம்பிக்கையில் ஆடி வருகிறார். தோல்விகள் சில வந்த போதும் பெண் ஆட்டக்காரர்கள் வரிசையில் முதலிடம் இப்போதும் ஸ்ரெபி கிராப்பிற்குத்தான்.

ஆண் ஆட்டக்காரர்களில் அகாசிக்கு பெண் ரசிகைகள் அதிகம். ஹொலிவூட் நடிகை புரூக் ஷீல்ட்ஸ் அகாசியின் தோழி. ஆண்டு ஒன்றுக்கு அகாசி சம்பாதிக்கும் குறைந்தபட்ச தொகை 14 கோடி ரூபாய்! விளம்பரப் படங்கள் மூலம் இது சேருகிறது.